திருமறைவிளக்கம

Mr. R. Koilpitchai

ரோமருக்கு எழுதின நிருபம்

.ஜெயபால்டேவிட்

பவுல்

ரோமருக்கு

எழுதின

நிருபம்

விளக்கவுரை

S. ஜெயபால் டேவிட்

திருப்பணிவிடையாளர் இறையியனூல் வரிசை

Published for

The C. S. I. Theological Series

by the Bishop Gell's Bible Examination Committee

Diocese of Tirunelveli.

Editor : The Rev. R. Joseph, B. Sc., B. D., S. T. M.

First Printed 1976

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — X. 250

பதிப்புரை

புனித பவுலடியார் ரோமருக்கு எழுதிய மடல் புதிய ஏற்பாட்டு நூல்களுள் தனிச் சிறப்பு வாய்ந்தது: கடவுளின் திருவருட் செயல் முறையை நன்குணர இம் மடல் உறுதுணையாய் அமைந்துள்ளது மனிதர் அனைவரும் பாவத்தின் ஆளுகைக்குள் இருக்கிறவர்கள், கடவுள் அளித்த மாட்சிமையை இழந்தவர்கள், கடவுளின் தீர்ப்புக்கு உள்ளானவர்கள். அருட்செய்தியில் மக்களைத் தமக்கு ஏற்றவர்களெனக் கொள்ளும் கடவுளின் நீதி வெளியாகியிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் ஒளியில் தேவநீதி பற்றிய தேவியல் கருத்துக்களைத் தெளிவு படுத்தும் அரிய ஆய்வுக் கட்டுரையாக இம்மடல் மிளிருகிறது. எதிர்ப்புகள், திரிபுக்கொள்கைகள் நடுவில் பவுலடியார் அறிவித்து வந்த அருட்செய்தியின் தனித்தன்மை இங்கு காணக்கிடக்கிறது. எண்ணற்ற மக்களுக்கு புது ஒளி. புது ஊக்கம் தந்து கொண்டேயிருக்கிறது.

":இவ்வாக்கியங்களை (13 : 13-14) வாசித்தவுடனே தெளிவான ஓரொளி,என்னை நிரப்பிற்று" என்பது புனித அகஸ்றினின் அறிக்கை. "பவுலின் இப்பகுதி (தேவ நீதி பற்றிய உண்மைகள்) எனக்கு மோட்ச வாயில் ஆயிற்று" என்பது மார்ட்டின் லூத்தரின் கூற்று. லூத்தர் இம்மடலுக்கு எழுதிய முகவுரையை வாசிக்கக் கேட்ட ஜாண்வெஸ்லியின் உள்ளம் கொழுந்துவிட்டு எரிந்தது. மீட்பளிக்கும் தெய்வ வல்லமை இன்றும் இம்மடலின் வாயிலாக வெளிப்படுகிறது.

மடலின் உட்பொருள் புரிந்துகொள்ளக் கடினமானது. அருள்திரு. S. ஜெயபால் டேவிட் அவர்கள் எளிய, இனிய மொழிகளில் தகுந்த விளக்கம் தந்துள்ளார்கள். அவர்களுக்கு எமது நன்றி. புதிய ஏற்பாட்டின் புதிய மொழி பெயர்ப்பு மடலின் செய்தியினை விளங்கிக் கொள்ளப் பேருதவியாக அமையும்.

பதிப்பாசிரியர்

முன்னுரை

திருமறையின் ஒரு சிறந்த பாகமாகிய ரோமர் நிருபத்தை ஊன்றிப் படித்து சிறந்த பயன் அடைய வாய்ப்பு பெற்றமைக்காக இறைவனுக்கு முழு உள்ளத்தோடு நன்றி செலுத்துகிறேன். இவ்வாய்ப்பினை எனக்கு அருளிய முன்னாள் பதிப்பாசிரியரும் இந்நாள் நெல்லை பேராயருமான அருட்பெருந்திரு தானியேல் ஆபிரகாம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கடிதத்தை ஊன்றிப் படிப்பவர் யாவரும் ஒரே அபிப்பிராயம் உடையோராயிருப்பார். தூயர் பேதுரு அவ்வபிப்பிராயத்தை முதலாவது வெளியிட்டார். "நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது ....." பேதுரு கூறுவதை அப்படியே ஒத்துக்கொள்கிறேன், அரிதானதை எளிதான முறையில் விளக்கமுற்பட்டுள்ளேன். இந்த விளக்கவுரை ஏற்ற பயனளிக்க வேண்டுமாயின் ரோமர் நிருபத்தை முழுவதுமாக வேதத்தில் படித்து விட்டு, அதனையும் அருகில் வைத்துக்கொண்டு விளக்கவுரையைப் படித்தல் அவசியம்.

பழைய ஒப்பந்த மறை என்பது பழைய ஏற்பாடு ஆகும். இது போன்ற புதிய சொற்கள் வாசகருக்கு நன்கு விளங்கும் என நம்புகிறேன்.

மார்ச், 1976
விக்கிரமசிங்கபுரம்

எஸ். ஜெயபால் டேவிட்

நூலின் பொருட் பிரிவுகள்

பக்கம்

I 1 : 1—15 முன்னுரை 1

(i) 1—7 வாழ்த்துக்கள்

(ii) 8—15 சபையினரின் நற்பண்புகளுக்காக இறைவனுக்கு நன்றி.

II 1 : 16—17 கடிதத்தின் நற்செய்தி 22

III 1 : 18—3 : 20 எல்லோரும் பாவம் செய்து கடவுளின் கோபத்துக்கு ஆளானார்கள். 34

1. 1 : 18 முகவுரை

2. 1 : 19—32 புறஜாதியாரின் மீறுதலும் சிலை வணக்கமும்—கடவுளின் கோபம்.

3. 2 : 1—16 தேவன் பட்சபாதமற்றவர்.

4. 2 : 17—29 யூதரும் பாவம் செய்தவர்களே

5. 3 : 1—8 யூதரின் எதிர் கேள்விகள்

6. 3 : 9—20 யூதரின் உண்மைநிலை வெளியாக்கப்படல்

IV 3 : 21—4 : 25 விசுவாசத்தினால் நீதிமான் என தீர்ப்பு வழங்கப்பெறல் 48

A. 3 : 21—26 கிறிஸ்துவின் ரத்தம் நீதிமானாக்குகிறது.

B. 3 : 27—31 விசுவாசத்தினால் பெறுகிறோம்.

C. 4 : 1—25 விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம் அவன் நீதி விருத்தசேதனத்தின் மூலம் இல்லை. விசுவாசத்தின் மூலமே.

V 5 : 1—8 : 39 **கிறிஸ்துவுக்குள்ளான புது வாழ்வு** 56

1. 5 : 1—11 பாவிக்காக உயிரீந்து தம்மோடு ஒப்புரவாக்கின இறைவனின் அன்பு.

2. 5 : 12—21 ஆதாமின் மீறுதல் முதல் மரணம்; கிறிஸ்துவில் நித்திய ஜீவன்.

3 6 : 1—14 மரணத்திலும் உயிர்த்தலிலும் கிறிஸ்துவுடன் இணைந் திருத்தல்.

4. 6 : 15—23 அடிமைகள் வாழ்வினின்று ஓர் எடுத்துக்காட்டு.

5. 7 : 1—6 குடும்ப வாழ்வினின்று ஓர் எடுத்துக்காட்டு.

6. 7 : 7—13 நியாயப்பிரமாணத்தின் பணி.

7. 7 : 14—25 போராட்டம், உள்ளக்குமுறல், விடுதலை.

8. 8 : 1—4 கடவுளின் மீட்பின் செயல்

9 8 : 5—13 மாமிசம், ஆவி

10. 8 : 14—17 கடவுளின் பிள்ளை — ஆவியானவர் அருளும் உரிமை.

11. 8 : 18—25 எதிர்நோக்கும் நம்பிக்கை

12. 8 : 26—27 ஆவியானவர் பலவீனங்களில் உதவி செய்கிறார்.

13. 8 : 28—30 முன்குறித்து அழைத்தார்.

14. 8 : 31—39 இரட்சிப்பின் உறுதி — அசையாதது.

VI 9 : 1—11 : 36 **கடவுளின் திட்ட அமைப்பில் யூதரும் புற ஜாதியாரும்.** 78

A. 9 : 1—5 இஸ்ரவேலரால் வீணாக்கப்பட்ட இணையற்ற வாய்ப்பு.

B. 9 : 6—13 இஸ்ரவேலரின் மறுதலிப்பு கடவுளின் நோக்கத்தை அவமாக்காது.

C. 9 : 14—29 எதேச்சதிகாரமாக தெரிந்தெடுத்தாலும் அநீதியாக கடவுள் ஏதும் செய்யவில்லை.

D. 9 : 30—10 : 5 விசுவாசத்தின் ஈவாக மீட்பைப் பெறுமல் சுயமுயற்சி செய்து தோல்வி கண்டார்கள்.

E. 10 : 6—13 விசுவாசிக்கிற யாவருக்கும் மீட்பு சமீபம்

F. 10 : 14—21 கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் ?

G. 11 : 1—6 இஸ்ரவேலரில் மீதியான ஒரு பங்கு

H. 11 : 7—13 யூதரின் புறக்கணிப்பு புறஜாதியாருக்கு மீட்பாக மலர்நதது,

I. 11 : 14—24 யூதர் யாவரும் மீட்கப்படுவர் ஒலிவ மர எடுத்துக்காட்டு புற ஜாதியாரின் பெருமை கண்டிக்கப்படல்.

J. 11 : 25—36 யூதர் யாவரும் மீட்கப்படுவர்

VII 12 : 1—15 : 13 கிறிஸ்தவ வாழ்வில் தேவ நீதி 87

A. 12 : 1, 2 இறைவனின் சித்தத்தை அறிந்து நிறைவேற்றுதல்

B. 12 : 3—8 தனிக் கிறிஸ்தவன் முழுக் குடும்பத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும்.

C. 12 : 9—21 அன்பே சமூக வாழ்வின் அடிப்படை.

D. 13 : 1—7 கிறிஸ்தவனும் அரசும்

E. 13 : 8—10 கற்பனையின் நிறைவேறுதல் அன்பு

F. 13 : 11—14 காலம் கடைசியாயிற்று

G. 14 : 1—15 : 6 விசுவாசத்தில் பலவீன மானவர்களை பலமுள்ளோர் தாங்குதல்

H. 15 : 7—13 சபையில் யூதரும் புறஜாதி யாரும் ஒற்றுமையாய் வாழ்தல். இறைவனின் ஆசி கூறல்

VIII 15 : 14—16 : 27 முடிவுரை 96

A. 15 : 14—24 கடிதத்தின் நோக்கமும் ரோமாபுரி செல்லும் திட்டமும்

B. 15 : 25—33 எருசலேமிலுள்ள வறியோர்க்கு திரட்டப்படும் பொருளுதவி

C. 16 : 1, 2 ஊழியக்காரி பெபேயாளை அறிமுகப்படுத்துதல்

D. 16 : 3—16 அன்பர்களுக்கு வாழ்த்துக்கள்.

E. 16 : 17—20 இறுதி எச்சரிக்கை

F. 16 : 21—23 உடனிருந்த நண்பர்களின் வாழ்த்து செய்தி

G. 16 : 24—27 தெய்வ துதிபாடல்

ரோமருக்கு எழுதிய நிருபம்

முகவுரை

1. திருமறையில் கடிதங்கள்

புதிய ஏற்பாட்டில் நாம் பெற்றுள்ள பக்தர்களின் கடிதங்கள் "நிருபங்கள்" என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றன. அவற்றில் அடங்கியுள்ள அழி வில்லா ஜீவ வார்த்தையின் காரணமாகவே இச்சிறப்பு பெயர் நிலைக்கின்றது எனலாம். ஆனால் அவற்றை எழுதினோர் அவற்றை சாதாரண கடிதங்களாகவே எழுதினர். பெறுவோரும் அவற்றை அவ்வித எண்ணத் துடனே பெற்று வாசித்து இன்புற்றனர். பவுல் அடியார் தமது கடிதங்களை எழுதினபோது அவை பின்னர் ஒரு காலத்தில் பரிசுத்த வேதாகமத்தின் அங்கமாக மிளிரும் என எதிர்பார்க்கவே இல்லை. தேவனுடைய திட்டத்தையும் செயல் முறையையும் நினைக்கும் நேர மெல்லாம் வியப்பே மேலிடுகிறது.

முதலாம், இரண்டாம் நூற்றுண்டுகளில் எழுதப் பட்ட நூற்றுக்கணக்கான எழுத்துச் சுவடிகள் பாலை வனத்தின் சுடுமணலில் பத்திரமாக புதையுண்டு இருப் பது சமீப காலங்களில் புதை பொருள் ஆராய்ச்சியாள ரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அலுவலக குறிப்பேடுகள், மளிகைக் கடை விலைப்பட்டியல், நீதி மன்ற ஒப்பந்தங்கள், கலியாண உடன் படிக்கைகள் மற்றும் ஏராளமான, சாதாரண கடிதங்கள் காணப்படு கின்றன. புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்ற அதே கிரேக்க மொழி நடையில் இக்கடிதங்கள் எழுதப்பட்டுள் ளன. மக்கள் ஒருவர்க்கொருவர் எழுதிக் கொண்ட இக் கடிதங்களில் ஒரே பொதுவான அமைப்பு காணப்படு கிறது. பவுல் அடியாரின் கடிதங்களும் இதே அமைப் பில் தான் அமைந்துள்ளன.

		ரோமர்	ii கொரிந்தியர்	கலாத்தியர்	எபேசியர்
1.	அனுப்புவோர்	1:1	1:1A	1:1	1:1A
2.	பெறுவோர்	1:2	1:1B	1:2	1:1B
3,	ஆண்டவர் நாமத்தில் வாழ்த்து	1:3	1:2	1:3	1:2
4.	இறைவனுக்கு நன்றி	1:8	1:3		1:3
5.	கடிதத்தின் செய்தி				
6.	தனிப்பட்ட வாழ்த்துக்கள்	16:3-16, கொலோ 4:12-15			

எனவே புதிய ஏற்பாட்டு 'நிருபங்கள்' ஆராய்ச்சிக் கட்டுரைகளோ அல்லது மனித உணர்வற்ற போதனைத் தொகுப்போ அல்ல. உள்ளான அன்புடனும், அக்கறையுடனும் உயிர்த்துடிப்புடனும் எழுதப்பட்ட கடிதங்கள் அவை. சபையில் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்ப்பு சொல்லவும், மீறுதல்களைக் கண்டிக்கவும் புரட்டு உபதேசங்களைப் பற்றி எச்சரிக்கவும் உபத்திரவ நேரத்தில் ஊக்கமும், ஆக்கமும் அளிக்கவும் இக்கடிதங்கள் அன்று எழுதப்பட்டன. இன்றும் மனிதனின் தன்மையும் தேவையும் மாருதிருப்பதால் அதே போல் பிரச்சனைகள் உருவாகின்றன. அவற்றை சந்திக்க அன்போடும் கண்டிப்போடும் தூய ஆவியானவர் இக்கடிதங்களின் மூலமாக நேரடியாகப் பேசுகிருர்.

பொதுவாக கடிதங்களில் ஒரு குறைபாடு உண்டு; அது என்னவென்ருல ஒரு நபர் சொல்லும் சொற்களைத் தான் நாம் கடிதத்தில் வாசிக்கிருேம். உரையாடல் ரூபத்தில் நாம் கடிதங்களை எழுதுவதில்லை. எனவே மறு சாரார் கேட்ட கேள்விகள் எவை என்று நாம் தெரிய முடிவதில்லை. பதிலைக் கொண்டுதான் கேள்விகளை யூகிக்க வேண்டியவர்களாக இருக்கிருேம். பவுலின்

நிருபங்களைப் படிக்கும் போதும் இதே நிலையை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். பவுல் சொல்வதின் சரியான அர்த்தத்தை நாம் புரிந்து கொள்வதற்கு அவர் இதை என்ன சூழ்நிலையில், எதற்காக கூறினார் என்று தெரிந்து கொள்ள நிதானமான முயற்சி எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

அக்கால வழக்கத்தின்படியே பவுல் அடியார் தமது கடிதங்களை எழுதுவதற்கு எழுத்தரை உபயோகித்தார். பவுல் சொல்லச்சொல்ல எழுத்தர் (Scribe) விரைவாக எழுதுவார். இக்கடிதத்தை எழுதினவர் தெர்தியு என்பதாக அறிகிறோம் (ரோ, 16:22). அவரே தனது பெயரைக் குறிப்பிட்டு வாழ்த்துதல் கூறுகிறார். "பாப்பைரஸ்" என்னும் செடியின் பட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட எழுத்துச் சுவடிகள் உபயோகிக்கப் பட்டன. அவற்றில் விரைவாகவும், தெளிவாகவும், சிறிது இடம் கூட வீணாக்காமல் சிக்கனமாகவும் எழுதும் திறமை பெற்றவர்கள் எழுத்தராக உபயோகிக்கப் பட்டனர்.

அன்பர் ஒருவரிடமிருந்து கடிதம் நாம் பெற்றால் அவருடைய சொந்த கையெழுத்தில் நான்கு சொற்களாவது இருக்கிறதா என ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இது இயற்கை. கைப்பட எழுதப்பட்ட அந்த சொற்களைக் காணும் போது எழுதினோரைக் கண்டது போன்ற ஒரு மன நிறைவு ஏற்படுகின்றது. பவுலின் கடிதம் பெற்ற அன்புச் சபையாரும் அவ்விதமே எண்ணியிருப்பர். தவிர கடிதம் உண்மையாகவே பவுல அடியாரிடமிருந்துதான் வருகிறது என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவு படுத்தவும் இது உதவியாக இருக்கும். அதற்காக பவுல் தன் கடிதங்களில் தன் கையாலே ஓரிருவாக்கியங்கள் எழுதினார் (1கொரி. 16:2 ; கொலோ. 4:18;2 தெசலோ 3.17).

2. தலை நகரில் கிறிஸ்துவின் திருச்சபை

எழில் மிகு நகரம் ரோமாபுரி. அன்று அறியப் பட்டிருந்த உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செலுத்திய ரோமப் பேரரசர்கள் வாழ்ந்து, சிறப் புற்ற பெரிய பட்டணம் அது. அரசவைத் தூதுவர் களும், அயல்நாட்டு வணிகர்களும் எப்பொழுதும் நிரம்பி இருந்தனர். ரோமக் கட்டிடக் கலையின் எடுத்துக்காட் டாய் நெடிய அழகிய தூண்களும், பொருந்தும் வளைவு களும் கொண்ட கட்டிடங்கள் பல இருந்தன. ஆயிரக் கணக்கான பார்வையாளர் ஒருங்கமர்ந்து கண்டு களிக் கும் வசதியுடன் பரந்தமைந்த போட்டி விளையாட்டு அரங்கங்கள், கடவுளராகப் பதவி உயர்த்தப் பெற்ற பேரரசர்களின் சிலைகள், பேரரசின் எல்லைகளுக்குட்பட்ட பல நாட்டு சிலைத் தெய்வங்களுக்கும் எடுக்கப்பட்ட பெருங்கோவில்கள், அகன்றமைந்த பெரு வீதிகள், தத்துவப் பேராசிரியர்கள், இலக்கிய மேதைகள், வரலாற்று ஆசிரியர்கள், தர்க்கப்பிரியர்கள், இயல் இசைக் கவிஞர்கள் இவ்வண்ண பிற சிறப்புகள் நிறைந்து இலங்கியது ரோம் நகரம். பேரரசின் ஆணை மொழி இலத்தீன். ஆனால் மக்கள் புரிந்து கொண்ட வழக்கு மொழி கிரேக்க மொழி. இந்த மொழியில் தான் புதிய ஏற்பாட்டு நூல்கள் யாவும் எழுதப்பட்டன.

பல்வேறு நாடுகளின் கலாச்சாரங்கள் ஒன்டோ டொன்று கலந்து உறவாட தக்க முறையில் மக்கள் போக்குவரத்து வசதிகள் அந்நாட்களில் நிறைந்து காணப்பட்டன. "எல்லா சாலைகளும் ரோம் நகருக்கே செல்லுகின்றன" (All Roads lead to Rome) என்பது பழமொழி படை வீரர்களை அவ்வப்போது அனுப்பி ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கு முன் னேற்பாடாக ரோம் நகரத்திலிருந்து எல்லா உறுப்பு நாடுகளுக்கும் பெருஞ்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இப்பெரு வழிகள் உண்மையில் வர்த்தகச் சாலைகளாக மாறி விட்டன. வணிகரோடு அவர் தம் மொழி, நடையுடை பாவனை, நாகரீகம், கடவுட் பற்று முதலியனவும் ரோம் நகர் வந்தன. சிறந்த கலைஞர்கள் தம் தம் திறமையை வெளியிடுவதற்கும் அரசின் ஆதரவை அடைவதற்கும் தலை நகர் வந்து சேர்ந்தனர். தலை நகரில் ஏசுகிறிஸ்துவின் சபையா? இங்கு சமாதானத்தின் சுவிசேஷத்தை ஏற்றிச் சென்ற அப்போஸ்தலன் யார்? இச்சபையை நட்டது யார்? நீர்ப்பாய்ச்சியது யார்? இவையெல்லாம் இன்று வரை திருச்சபை வரலாறறில் தர்க்கத்துக்குரிய கேள்விகள். ரோமன் கத்தோலிக்க பிரிவைச் சார்ந்தவர்கள் அப்போஸ்தலனும் தூயர் பேதுருவே ரோமாபுரி சபையை ஸ்தாபித்தவா என சாதிக்கின்றனர். ஆனால் பேதுரு ரோம் நகர் செல்லும் முன்னதாகவே அங்கு கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் எனக் கூற போதுமான ஆதாரம் உள்ளது. இரண்டை நாம் குறிப்பிடலாம் :

(i) ரோம் நகரில் ஒரு பெரும் யூத சமுதாயம் நெடுங்காலமாக வசித்து வந்தது. கி. பி. 9-ஆம் ஆண்டில் கிளாடியஸ் (கிலவுதியு - அப் 18 : 2) என்னும ரோமப் பேரரசன் காலத்தில் யூதர் வாழும் பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டதால் எல்லா யூதர்களும் தலை நகரை விட்டு வெளியேற்றப்பட்டனர். ரோம வரலாற்று ஆசிரியர் சுயூட்டோனியஸ் "கிரிஸ்டஸ் என்பவனின் தூண்டுதலால் யூதர்கள் கலகம் செய்தமையால் அவர்கள வெளியேற்றப்பட்டனர்" என எழுதியுள்ளார். கலகக்காரனை 'Chrestus' என அவர் கூறுவது ஒரு சாதாரண அடிமையாக இருக்கலாம் என்று மறுப்பு சொல்லப்படலாம். ஆனால் நம் ஆண்டவரின் பெயரும் கிரீஸ்டஸ் என்றே பொதுவான பேச்சு வழக்கில் உச்சரிக்கப்பட்டது. தேவகுமாரனும் கிறிஸ்துவைப் பற்றி ரோமர் பலருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

யூதருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மட்டுமே இச்சொல் விளங்கும். யூத ஜெப ஆலயங்களில் விசுவாசிகளால் கிறிஸ்துவைப் பற்றிய செய்தி கூறப்பட்ட பொழுது இக்கலகங்கள் உண்டாகியிருக்கும் என நாம் யூகிக்கலாம். உதாரணமாக, தெசலோனிக்கே பட்டணத்தின் ஜெப ஆலயத்தில் பவுலடியார் பேசிய பொழுது, இதைப் போன்றதொரு நிகழ்ச்சி நடைபெற்றதை நாம் நினைவில் கொள்ளலாம் (அப் 17 : 1-9).

(ii) பவுல் கொரிந்து பட்டணத்தில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்னும் யூதத் தம்பதிகளைச் சந்திக்கிருர் (அப் 18 ; 1-3). இவர்கள் ரோம் நகரத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் பவுலின் மூலமாக ஏசுகிறிஸ்துவைப் பற்றி அறிந்தவர்கள் அல்லர். கொரிந்துவில் பவுல் மூலமாக முதலாவது கிறிஸ்தவர் ஆனவர்கள் ஸ்தேவான் என்பவரின் வீட்டாரே (1 கொ. 16 : 15). ஆக்கில்லாவும் அவன் மனைவியும் ரோம் நகரத்தில் இருக்கும் போதே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

ஆதித் திருச்சபையின் நிகழ்ச்சிகளை நாம் புதிய ஏற்பாட்டில் ஊன்றி பார்ப்போமேயானுல் பேதுரு கி. பி. 49-ஆம் ஆண்டிற்கு முன் ரோம் நகர் சென்றிருப்பதற்கான வாய்ப்பு இல்லை. பவுலடியார் தமஸ்கு செல்லும் பெரு வழியில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின் முதலில் மூன்ரும் ஆண்டிலும் (கலா. 1 : 18), பின்னர் 14 வருடங்கள் கழித்தும (கலா. 2 : 1) எருசலேம் சென்ருர். இத்தனை வருடங்களாக பேதுரு எருலேமில் தான் குடியிருந்தார் எனக் காண்கிரும். அதன் பின்பு பேதுரு அந்தியோகியா பட்டணம் வந்தார். எனவே பேதுரு நேரடியாகச் சென்று கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்தார் எனக் கூறுவதற்கு இடமில்லை.

அப்போஸ்தலர் எனப் பெயர் பெறும் திருச்சபையின் தலைவர்கள் யாரும் சென்று சுவிசேஷத்தை அறிவியாமலே ரோம் நகரத்தில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என நாம் கூறலாம்.

இந்த கிறிஸ்தவத் திருச்சபை எவ்வாறு ஏற்பட்டது. இரண்டு வகைகளிலே ஏற்பட்டிருக்கலாம் :

(i) பெந்தேகோஸ்தே திருநாளில் தூய ஆவியானவர் அருளப்பட்டதை அப்போஸ்தலர் நடபடிகள் 2-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அவ்வமயம் வந்து கூடி பேதுருவின் பிரசங்கம் கேட்ட பெருங்கூட்டத்தில் ரோம் நகர வாசிகளும் இருந்தனர் (அப். 2 : 10). மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட 3000 பேரிலும் ரோம் நகர மக்கள் சிலர் இருந்தார்கள். அவர்கள் திரும்பி தம் ஊர் சென்ற பின் கிறிஸ்துவைப்பற்றி தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருந்தனர் என நாம் துணிந்து கூறலாம். கடுகுவிதை போல திருச்சபை வளர்ந்தது (மத். 13 : 31-32).

(ii) தம் தம் தொழில் பொருட்டும், வர்த்தகத்தினிமித்தமும் ரோம் நகர் சென்ற கிறிஸ்தவர்கள் அங்குள்ள யூதருக்கும் மற்றோருக்கும் கிறிஸ்துவைப் பற்றி எடுத்துச் சொல்லி அவர்களை கிறிஸ்தவர்களாக்கினார்கள் எனலாம். சபையின் அப்போஸ்தலரும், மூப்பரும் நற்செய்தி பணியை செய்து கொள்ளட்டும், நமக்கு என்ன என்றிராமல்; பிற தொழில் புரிந்த சபை மகன் ஒவ்வொருவனும் கிறிஸ்துவைப்பற்றி பிறருக்கு விளக்கி வந்த ஆதித் திருச்சபையின் இந்நற்பண்பை இன்று நாம் பெற்றிடல் வேண்டும்.

ரோம் நகரத் திருச்சபை உலகத் திருச்சபை அமைப்பில் ஓர் முக்கிய இடம் வகித்து வந்துள்ளது. தப்பு உபதேசங்கள் பிற்காலத்தில் தலை தூக்கிய போது

திருச்சபையின் போதனை எவ்வகையேனும் மாறுபடாமல் பாதுகாக்கப்பட ரோம் நகரப் பேராயர்கள் சத்தியத்தைத் தெளிவாக அறிவித்து அதன் பாதுகாவலராக விளங்கினர். இவ்வுயர்ந்த நிலை அடைவதற்கு ஏற்கனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்த ரோமப் பெரு மக்களை ஒரு சபையாக அமைத்து வளர்த்த பெருமை பவுல், பேதுரு ஆகிய இருவருக்குமே சாரும். இவ்விரு பேரும் ரோமாபுரி சபையின் ஆரம்ப வருடங்களில் அங்கு இல்லை எனினும் பின்னர் அங்கு வந்தனர். அங்கு தங்கினர். போதனைகள் பல தெளிவாக எடுத்துரைத்தனர். நீரோ பேரரசன் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தி அழிக்க முற்பட்ட போது பேதுருவும், பவுலும் ரோமாபுரியிலேயே இரத்த சாட்சிகளாக மரித்தனர்.

3. கடிதம் எழுதப்பட்ட நோக்கம்

பவுலடியார் தான் இக்கடிதத்தை எழுதியுள்ளார் என்பது பொதுவாக அறிஞர் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பவுலின் மற்ற கடிதங்களையும் ரோமருக்கு எழுதப்பட்ட கடிதத்தையும் நாம் எடுத்து வாசிப்போமென்றால் இக்கடிதம் சற்று வித்தியாசமாக இருப்பதை நாம் கண்டு கொள்ளலாம். பொதுவாக அவருடைய கடிதங்கள் அவர் மூலமாக ஏற்பட்ட சபைகளுக்கு எழுதப்பட்டன. சபையினருக்கு ஏற்பட்ட ஏதாவது சந்தேகங்களை நிவிர்த்திச் செய்யவும், தப்பு உபதேசங்களைச் சுட்டிக்காட்டி சரியான உபதேசத்தைக் கூறவும், தவறுகளை கண்டிக்கவும் எழுதப்பட்டன. இக்கடிதம் அப்படி எந்தப் பிரச்சனையையும் சந்திக்க எழுதப்படவில்லை. கிறிஸ்தவ இறையியல் நூல் போன்று தர்க்கரீதியாக, அடிப்படை விசுவாசங்கள் யாவும் எடுத்து கூறப்பட்டுள்ளன. இவ்வித அமைப்பிற்கு இரு காரணங்களை கூறலாம் :

(i) பவுல் இக்கடிதத்தை எழுதும் காலம் வரை ரோம் நகர சபையை சந்தித்ததே இல்லை. அறிமுகமில்லாத பெரும்பான்மையினரைக் கொண்ட சபைக்கே அவர் எழுதுகிறார். அங்கு தாம் வரவிரும்புவதைப்பற்றி குறிப்பிடுகின்றார் (ரோ 15 : 24, 25). பவுலடியாரின் நெடுங்காலக்கனவு ரோம் நகர் செல்வது (அப் 19 : 21). நாகரீகம் நிறைந்த தர்சு பட்டணத்தில், பொருள் வசதி மிகுந்த பென்யமீன் கோத்திர வணிகக் குடும்பத்தில் பிறந்தவர் அவர். ரோம அரசின் பிரஜா உரிமை பெற்றவர். தலை சிறந்த யூத நபியான கமாலியேலின் பாதத்தில் அமர்ந்து ஐயம் திரிபறக் கல்வி கற்றவர். புறஜாதி மக்களுக்கு நற்செய்தி கூறும் பணிக்கென அப்போஸ்தல அழைப்பும் அதிகாரமும் பெற்றவர் (கலா. 2 : 7, 8). யூத மதத்திற்கு பெருமை தருகின்ற தலைமை இடமாய் எருசலேம் விளங்கியது. இதே போல் மற்ற எல்லா புறஜாதிகளும் ஏறிட்டுப் பார்க்கும் தலை நகராய் விளங்கியது ரோம் நகரம். புற ஜாதிகளை உலகின் பலபாகங்களில் சந்தித்து பிரசங்கித்து வந்த பவுல் அவர்களின் தலைநகரிலும் அவர்கள் அப்போஸ்தலனாக காலூன்றி நின்று தன் ஊழியத்தை நிறைவேற்ற வாஞ்சித்ததில் வியப்பொன்றுமில்லை. இந்த நெடுங்கால ஆசை இந்தக் கடிதத்தின் ஆரம்பத்திலேயே வெளிப்படுவதை நாம் காண்கிறோம் (ரோ. 1 : 12, 15).

மேலும் அவர் இதுவரை நற்செய்தி அறிவிக்கப்படாத ஸ்பானியா தேசத்தில் ஊழியம் செய்ய விருப்பமுற்றார். அதற்கு ரோம் நகரம் பணிக்கு புறப்படும் நல்ல தளமாக அமையும் என திட்டமிட்டார் (ரோ. 15.24). எனவே தாம் செல்ல விரும்பிய சபையில் தம்மைப் பற்றியும், தாம் போதித்து வந்த கிறிஸ்தவ அடிப்படை விசுவாசங்களைப் பற்றியும் இக்கடிதம் மூலம் அவர் அறிமுகம் செய்தார்.

(ii) ரோம் நகரசபை முக்கியத்துவம் வாய்ந்தது. அது தலைநகரில் அமைந்திருந்ததால் பல்வேறு ஊர் சபைகளிலிருந்து அங்கு கிறிஸ்தவர்கள் வரவும், அங்குள்ள சபையினர் பல ஊர்களுக்கு செல்லவும் வாய்ப்புண்டு. இச் சபை சரியான போதனைகளை பெற்றிருத்தல் அவசியம் என பவுல் உணர்ந்தார். குறிப்பாக புற ஜாதியாராய் இருந்து கிறிஸ்தவர் ஆனவர்கள் யூத நியாயப் பிரமாணத்தை அனுசரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்னும் விடுதலையின் நற்செய்தியை ரோம் திருச்சபைக்கும் பவுல் அறிவிக்க இக்கடிதத்தை எழுதுகிறார்.

நேரடியாகச் சென்று ரோம் நகரசபையை சந்திக்கப் போவதாகக் கூறும் பவுல் அதற்கு முன்னதாக இவ்வளவு விரிவான கடிதத்தை எழுத வேண்டிய அவசியம் என்ன? ஒரு காரணத்தை நாம் யூகிக்கலாம். இந்தக் கடிதத்தை எழுதும் சமயத்தில் பவுல் எருசலேம் செல்ல விருந்தார். எருசலேம் நகரசபை அங்கத்தினரில் பலர் வறுமையில் வாடினர். அவர்களுக்கு பல்வேறு சபையினர் செய்த உதவியை அவர் கொண்டு போய் கொடுக்கத் திட்டமிட்டு இருந்தார். எருசலேமை நினைக்கும் போதெல்லாம் பவுலின் மனதில் பெரிய பாரம் ஏற்பட்டது. எருசலேமின் யூதர்கள் பவுலை யூதமதத்தின் எதிரி எனக்கருதி அவரை விரோதித்தனர். அவரைக் கொலை செய்து விட வேண்டிய ஏற்பாடுகள் செய்ய காத்து நின்றனர் யூத கிறிஸ்தவர்களும் பவுலின் விடுதலைப் போதனையை விரும்பவில்லை. எனவே எருசலேமில் என்ன நேரிடுமோ என்ற ஐயத்தோடு பவுல் இருந்தார். ஆனால் என்ன நேர்ந்தாலும் அதை மன நிறைவோடு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்தார் தான் எல்லா இடங்களிலும் போதித்து வந்த சரியான கிறிஸ்தவ விசுவாசத்தை ரோம் நகர சபையிலும் சென்று அறிவிக்க ஒருவேளை வாய்ப்பு வராமல் போய்விடுமோ

வென்று எண்ணினதால் இதைக் கடிதம் மூலமாக தெளிவாக தெரிவிக்கிறார்.

4. கடிதம் எழுதப்பட்ட இடமும் காலமும்

பவுல் இக்கடிதத்தை எழுதும் போது எருசலேமுக்கு போக எண்ணமுடையவராக காணப்படுகிறார் (ரோ. 15:25). அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் நாம் பவுல் மேற்கொண்ட மூன்று முக்கியமான நற் செய்திப் பணி பயணங்களைப் பற்றி வாசிக்கிறோம். அவர் தமது மூன்றாவது பயணத்தில் எபேசு பட்டணத்தில் வந்து பணியாற்றினார். அங்கு தடை ஏற்பட்ட பொழுது மக்கேதோனியா போகப் புறப்பட்டு கிரேக்கு தேசம் வந்து அங்கு மூன்று மாதம் தங்கியிருந்தார் (அப் 20:2). அவர் அத்தேசத்தின் தலை சிறந்த சபை அமைந்திருந்த கொரிந்துவில் தான் தங்கியிருந்திருக்க வேண்டும். அங்கிருந்துதான் அவர் இக்கடிதத்தை எழுதினார். திட்டமான மாதம், தேதி நம்மால் குறிப்பிட இயலாது. ஆனால் பவுலடியாரின் வாழ்க்கை வரலாற்றினை ஆராய்ச்சி செய்து பார்த்திருப்போர் கி. பி. 58-இல் அல்லது 59-ஆம் ஆண்டின் முற்பகுதியில் இக்கடிதம் எழுதப்பட்டது என அபிப்பிராயப் படுகின்றனர். இதை நாமும் தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளலாம்.

5. இரண்டு சிக்கல்கள்

(A) மொத்தம் எத்தனை அதிகாரங்கள் ?

இதனை நாம் ஆராயப்புகு முன் ஒரு முக்கிய உண்மையை மறந்து விடலாகாது. பவுல் தமது கடிதங்களை எழுதும் போது அவற்றை வசனங்களாகவும் அதிகாரங்களாகவும் பிரித்து எழுதவில்லை புதிய ஒப்பந்த மறையின் எந்த நூலும் அவ்விதமாக பிரித்து எழுதப்படவில்லை. எவ்வித பிரிவும் இல்லாமல்

தொடர்ந்து எழுதப்பட்டன. இடைக் காலத்து அறிஞர் ஒருவர் தான் இப்பொழுது நாம் கொண்டுள்ள அதிகாரங்களாகவும், வசனங்களாகவும் பிரித்தார்.

நமது வேதாகமத்தில் இக்கடிதத்திற்கு 16 அதிகாரங்கள் உள்ளன. நமக்கு கிடைத்துள்ள சில பழங்காலப் பிரதிகளில் 14-ஆம் அதிகாரத்தோடு கடிதம் முடிவுறுகிறது. கடிதத்தின் முடிவில் (16 : 25-27) உள்ள தெய்வப் புகழுரை (doxology) 14-ஆம் அதிகாரத்தின் முடிவில் அமைந்துள்ளது. பழைய இலத்தீன் மொழிப் பிரதி ஒன்றிலும் இதற்கு சான்று உள்ளது. அதில் இக்கடிதம் 51 பகுதிகளாக பிரிக்கப் பெற்று ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தலைப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

பிரிவு	நம் வேத பாகம்	தலைப்பு
50	14 : 15-23	புலாலுண்பதினால் சகோதரனை விசனப் படுத்தாதே.
51	16 : 25-27	வெளியாக்கப் பட்ட தேவ ரகசியம்

15-ஆம், 16-ஆம் அதிகாரங்கள் இந்த லத்தீன் பிரதியிலும் இல்லாமல் இருந்திருப்பதைக் காண்கிறோம்.

பவுல் எத்தனை அதிகாரங்கள் எழுதினார்? 16 அதிகாரங்களையும் எழுதியது பவுலடியாரே என மொழி, நடை, கருத்து ஒற்றுமை ஆகிய அகச்சான்றுகளும், மற்றும் புறச்சான்றுகளும் திட்டமாகக் கூறுகின்றன. அப்படியானால் 14 அதிகாரங்கள் மட்டுமே தாங்கிய இப்படிப்பட்ட பிரதிகள் எவ்வாறு வழக்கில் ஏற்பட்டன?

சிலர் பவுலடியாரே இதற்கு காரணம் எனக் கூறுகின்றனர். அவரே தான் எழுதிய கடிதத்தின் பின் பகுதியில் ரோம சபைக்கே மாத்திரம் உரிய செய்திகளடங்கிய பாகத்தை நீக்கி விட்டு இக்கடிதத்தை மற்ற சபைகளுக்கும் அனுப்பி வைத்தார். விரிவான இறையியல் சாசனமாக இது அமைந்துள்ளதால் எல்லா சபைகளும் பயனடையும்படி அப்படி செய்தார் எனக் கூறுகின்றனர். ஆனால் பவுல் இக்கடிதத்தை அவ்வாறு மற்ற சபைகளுக்கும் அனுப்பினார் என்பதற்கு ஆதாரமில்லை. அப்படியே அவர் அனுப்ப எண்ணியிருந்தாலும் 14-ம் அதிகாரத்தின் இறுதி வசனத்திலிருந்து அவ்விதமாக பிரித்திருக்க மாட்டார். ஏனென்றால் பவுல் கூறி வருகிற கருத்து 14 : 23 உடன் முடிவடையவில்லை. 15 : 13-ல் தான் அது நிறைவு பெறுகிறது. சொல்லுகின்ற காரியம் அரையும் குறையுமாய் நிற்கும் வகையில் பவுலடியார் கடிதத்தின் அளவை சுருக்கியிருப்பார் என எண்ண இடமில்லை.

ஆதிகாலத்தில் மார்சியான் என்பவர் ஒரு தப்பிதமான போதனையை பரப்பி வந்தார். தனது கொள்கைக்கு ஆதரவில்லாது இருக்கும் பகுதிகள் எல்லாம் நீக்கிய புதிய ஏற்பாட்டு நூல் ஒன்றை அவர் முதலாவது வெளியிட்டார். அவரே இக்கடிதத்தையும் அவ்விதமாக குறைத்து முழு கடிதத்தின் இறுதியில் உள்ள (16 : 25-27) தெய்வப் புகழுரையை 14-ஆம் அதிகாரத்தின் இறுதியில் எடுத்து எழுதி வெளியிட்டிருக்க வேண்டும்.

இவ்விதக் குறைப்பு தற்செயலாகவும் நிகழ்ந்திருக்கலாம். ஏதாவது ஒரு பிரதியில் கடைசிப்பாகம் பழையதாகி முறிந்து போனதால் கடைசி இரு அதிகாரங்கள் தொலைந்து போயிருக்கலாம். அக்குறைவுள்ள பிரதியைப் பார்த்து எழுதப்பட்ட பிரதிகள் யாவும் இவ்வித

குறுகிய நீளமுடையதாக மாறியிருக்கலாம் என்பது சிலருடைய அபிப்பிராயம். நம் வேதாகமத்தில் உள்ள படி 16 அதிகாரங்களும் அடங்கியதாகவே பவுல் இக் கடிதத்தை எழுதினுர் என நாம் திட்டமாகக் கூறலாம்.

(B) 16-ஆம் அதிகாரம் எந்த சபைக்கு எழுதப்பெற்றது ?

சமீப காலத்தில் இந்த கேள்வி சிலரால் கேட்கப்படு கிறது. 16-ஆம் அதிகாரம் ரோம் நகருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பாகமா அல்லது பவுலின் மற்ருெரு கடித மாக இருந்து, அவரது கடிதங்களை ஒன்று சேர்க்கும் போது தவறுதலாக ரோமருக்கு எழுதின கடிதத்தில் சேர்ந்து விட்டதா ? இவ்வாறு கேட்கப்படுவதற்கு சில காரணங்கள் உள்ளன.

(i) இந்த அதிகாரத்தில் 26 பேர்களுக்கு பவுல் தனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கிருர். அதில் "கூடக் காவலில் கட்டுண்ட" இரண்டு பேர், உடன் வேலையாட்கள் மூவர், "எனது தாய்" என்று அழைக்கப்படும் ஒரு பெண்மணி ஆகியோரைப் பற்றி வாசிக்கிறோம். இதற்கு முன் சென்று சந்தித்திராத ரோம் நகர சபையில் இத்தனை பேரை பவுலுக்கு எப்படித் தெரியும் ?

(ii) 16 : 17-20 தப்பான உபதேசத்தால் ஏற் படும் பிரிவினையைப் பற்றி பேசுகிறது "கற்றுக் கொண்ட உபதேசம்" (வச 17) என்று பவுல் கூறும் போது தன் உபதேசத்தால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சபைக்குச் சொல்வது போல் தோன்றுகிறது.

மேற்கண்ட காரணங்களைக்கூறி இந்த அதிகாரம் ரோம சபைக்கு எழுதப்பட்டது அல்ல; வேறு சபைக்கு எழுதப்பட்டது என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட் டுள்ளது. வேறு சபை என்ருல் எந்த சபை? எபேசு சபைக்கே இந்த அதிகாரம் சிறு கடிதமாக எழுதப்பட்டு

ஊழியக்காரி பெபேயாளை அறிமுகப்படுத்த அவள் கையில் கொடுத்தனுப்பப்பட்டது என சிலர் வாதிடு கின்றனர் (வ. 1, 2). அவர்கள் கூறும் காரணங்களில் இரண்டு :

(i) மற்ற எல்லா ஊர்களையும் விட பவுல் எபேசு வில் தான் அதிக நாட்கள் செலவிட்டுள்ளார். ஆகவே அவருக்கு அச்சபையில் நண்பர்கள் அதிகமிருக்க நியாயமுண்டு.

(ii) *16 : 3-5* வசனங்களில் பவுல் ஆக்கில்லா பிரிஸ்கில்லாள் தம்பதியரை வாழ்த்துகிறுர். இவர்கள் எபேசுவில் தான் இருந்திருக்கவேண்டும். அப்போஸ் தலர் நடபடிகள் நூலில் இவர்களைப்பற்றி வாசிக்கிறோம். ரோம் நகர வாசிகளான இவர்கள் கிளாடியஸ் பேரரசன் யூதர்களை ரோம் நகரத்திலிருந்து வெளியேற்றிய போது கொரிந்து பட்டணம் வந்தனர். அங்கே பவுல் முதல் முறையாக அவர்களைச் சந்தித்தார் (அப். 18 : 2). பவுலோடு கூட அவர்கள் எபேசு சென்றனர் (அப். 18 : 18, 19). பவுல் அவ்விடத்தைவிட்டு சென்ற பின் னும் அவர்கள் எபேசுவிலேயே தங்கியிருந்தனர். அவர் கள் வீடு பெரிதாக இருந்ததால் எபேசு சபையினர் அதிலே கூடி தேவனை ஆராதித்து வந்தனர் (1 கொரி. 16 : 19). பல வருடங்களுக்கு பிறகு பவுல் ரோம் நகர சிறையிலிருந்து திமோத்தேயுவுக்கு எழுதின போதும் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எபேசுவில்தான் இருந் தனர் (2தீமோ. 4 :19). எனவே இந்த அதிகாரம் எபே சுவுக்கு எழுதப்பட்ட ஒரு சிறிய கடிதமே என்று நம்பு கின்ற பலர் இருக்கின்றனர்.

ஆனுல் அவ்வாறு பூரணமாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. மேற்கூறிய இரு காரணங்களுக்கு இவ் விதமாக நாம் பதில் கூறலாம் :

(i) 16-ஆம் அதிகாரத்தை ஒரு தனிக்கடிதமாக எண்ணி நாம் ஒருமுறை படித்துப் பார்ப்போமென்றல் நமக்கே அது சற்று வித்தியாசமாகத் தோன்றுகிறது முதலில் இருந்து கடைசிவரை பிறரை சுக நலம் விசாரிப்பதற்கும் வாழ்த்துவதற்குமான ஒரு நிருபமா என்று கேட்கத் தோன்றுகிறது. ஒருவேளை 16-ஆம் அதிகாரம் எபேசு சபைக்கு எழுதப்பட்ட ஒரு தனிக்கடிதத்தின் இறுதி வாழ்த்துப் பகுதியாக இருக்கலாமே; அந்த கடிதம் எப்படியோ நம் கைக்கு கிட்டவில்லை. பின்பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது என சிலர் விட்டுக் கொடாமல் தர்க்கிக்கலாம். ஆனால் ஒரு கற்பனையை நிலை நிறுத்த மற்றொரு கற்பனை என்ற அளவில் தான் அது அமையும்.

(ii) முன்பின் சந்தித்திராத ஊரில் இத்தனை அன்பர்களை எப்படித் தெரியும் என கேட்கப்பட்டது.

(அ) அந்த நாட்களில் பல்வேறு நோக்கத்தோடு மக்கள் பிரயாணம் செய்யும் பழக்கம் பரவலாக அதிகமாகியிருந்தது. பொதுவாக தலைநகரை நோக்கி பலர் சென்றனர். எனவே பவுல் ஸ்தாபித்த பல சபைகளில் இருந்து ரோம் நகர் சென்று வாழ்ந்த நண்பர்களை பவுல் விசாரித்தார் எனக் கூறலாம்.

(ஆ) ரோம் நகரில் வாழ்ந்து வந்த எல்லா யூதர்களும் கிளாடியஸ் பேரரசனின் ஆணையினால் கி. பி. 49-இல் வெளியேறியதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட பல கிறிஸ்தவர்களை பவுல் தனது ஊழியப் பயணங்களிலே சந்தித்திருப்பார். கிளாடியஸ் மன்னனின் மரணத்துக்குப் பின் அவர்கள் ரோம் நகர் மீண்டும் சென்றனர். அவ்வகையில் தனக்கு அறிமுகமான ரோம் நகரசபை அங்கத்தினரை அவர் வாழ்த்துகிறார் எனக் கொள்ளலாம்.

(இ) அறிமுகமாகாத சபையில் இத்தனை பேரை வாழ்த்துகிறரே என நாம் இன்னும் தயங்கினல் இதை நாம் மறக்கலாகாது. பவுலடியார் தான் ஸ்தாபித்த சபைகளுக்கு எழுதும் கடிதங்களில் பொதுவாக யாரையும் பெயர் குறித்து விசாரிப்பதும், வாழ்த்துவதும் இல்லை. தெசலோனிக்கே, கொரிந்து, கலாத்தியா, பிலிப்பு போன்ற இடங்களில் உள்ள சபைகளை அவர் ஸ்தாபித்தார். அங்கு அவர் எழுதியுள்ள கடிதங்களில் அவர் பெயர் குறித்து யாரையும் வாழ்த்தவில்லை. ரோம் நகரத்து சபையைப்போல கொலோசே பட்டணத்து சபையையும் அவர் நேரடியாக ஸ்தாபிக்கவில்லை. அங்கு எழுதின கடிதத்தில் அவர் பெயர் சொல்லி விசாரிக்கிறர். எனவே தான் அறியாத பெரிய சபையில் தான் அறிந்திருந்த ஒரு சிலரையாவது நேரடியாக குறித்து உறவை ஏற்படுத்திக் கொள்ள பவுல் விரும்புவதையே இது காட்டுகிறது.

(iii) ஆக்கில்லா - பிரிஸ்கில்லாள் தம்பதியர் தொடர்ந்து எபேசுவில் தான் இருந்தனர் என நாம் நினைத்தல் கூடாது. அவர்கள் பெரும் மூலதனமிட்டு கூடாரம் அமைக்கும் தொழிலை நடத்தி வந்தனர். அதற்குரிய தோல் முதலிய மூலப்பொருட்கள் சேகரிப்பதற்கு ஆசிய அலுவலகம் எபேசுவிலும் தொழில் விரிவாக நடப்பதற்கு ஏற்றவகையில் தலைமை அலுவலகம் ரோம் நகரிலும் அமைந்திருந்தது என நாம் எண்ண இடமுண்டு. இவ்விரண்டு இடங்களிலும் கட்டடவசதியும், வர்த்தகக்காரியங்களை மேற்பார்க்கும் உதவியாளர், அடிமைகள் அடங்கிய குழுவும் அவர்களுக்கு இருந்திருக்கும். எனவே அவர்கள் இருந்த இடம் எபேசு மட்டும் தான் என்றும், அவர்கள் பெயர் தாங்கியதால் இக்கடிதமும் அங்குதான் எழுதப்பட்டது என்றும் நாம் எண்ணுதல் தவறு. ரோம் நகரிலும் அவர்கள் இடைக்கிடையே தங்கியிருந்தார்கள். அவ்விரண்டு இடங்

களிலும் உள்ள அவர்கள் வீடும், வேலையாட்களும் சபைகூடி வருவதற்கு மிகவும் உதவியாக இருந்திருப் பார்கள் என்பதற்கு சந்தேகமேயில்லை.

முடிவாக, இக்கடிதம் முதலில் இருந்து கடைசி வரை ரோம் நகர சபைக்கே எழுதப்பட்டது என உறுதி யாக கூறலாம்.

விளக்கவுரை

முன்னுரையும் கடிதத்தின் நற்செய்தியும்

1 : 1-7 வாழ்த்துக்கள்

அன்றைய உலக வழக்கில் மக்கள் ஒருவரோ டொருவர் பரிமாறிக் கொண்ட கடிதங்களில் காணப் பட்ட அமைப்பைத் தான் பவுலடியாரும் தனது கடிதங் களில் உபயோகிக்கிறார்.

1. அனுப்புவோர் பெயர் 2. பெறுவோர் பெயர் 3. வாழ்த்துக்கள்.

பவுலடியார் பிலிப்பியருக்கும், கொரிந்தியருக்கும் எழுதிய கடிதங்களிலும் (பிலி. 1 : 1, 2; II கொரி 1 . 1, 2) இந்த மரபை அனுசரிப்பதைப் பார்க்கிறோம். அக்கடிதங் களில் மிகச் சுருக்கமாக வாழ்த்துப் பகுதியை முடித்துக் கொள்கிறார். ஆனால் இந்த கடிதத்திலோ மரபின் காரணமாக எழுதுகின்ற இந்த பகுதிக்குள்ளாகவே ஏராளமான செய்திகளை நிரப்பி விடுகிறார். தான் முன் பின் சந்தியாத சபை என்பதினால் தன்னுடைய ஊழியத் தின் தன்மையைப் பற்றியும், தான் அறிவித்து வந்த நற்செய்தியின் மையக்கருத்துக்களையும் இப்பகுதியி லேயே சுருங்கச் சொல்லிவிடுகிறார்.

இயேசுகிறிஸ்து : இயேசு என்னும் கிரேக்கப் பெயர் "யோசுவா" என்னும் எபிரேயச் சொல்லை அடிப்படை யாகக் கொண்டது. விடுதலை செய்பவர், வெற்றி அளிப் பவர் என்னும் கருத்துக்கள் அதில் உண்டு (மத். 1 : 21). மேசியா என்னும் எபிரேய அடிப்படை சொல்லின் கிரேக்கச் சொல் கிறிஸ்து என்பதாகும். (அபிசேக) தைலத்தால் அபிசேகம் செய்யப்பட்டவர் என்பது அதின் பொருள். இயேசு என்பது அவர் பணி யைக் குறிப்பிடும் சிறப்பான பதவிப் பெயர் எனலாம்.

(1) ஊழியக்காரன் (i) கிரேக்கச் சொல் 'வேலைக் காரன்' அல்லது அடிமை என்றே பொருள் பெறும். உரிமை ஏதுமின்றி உழைத்து உழைத்து வாழ்வைக் கழிக்கும் அடிமை. இயேசுகிறிஸ்துவை வணங்குகின்ற எல்லா ஆண்களையும், பெண்களையும் பிடித்துக் காவலில் போட வேண்டும், கொலை செய்ய வேண்டும் என்ற மூர்க்கத்தோடு செயல்பட்டு வந்த சவுல் தமஸ்கு செல்லும் பாதையில் கடவுளால் பிடிபட்ட போது அவர் கிறிஸ்துவை அழைத்த வார்த்தை "ஆண்டவரே" என்பதாகும் (அப். 9 : 5, 6). அதற்கு எஜமான் அல்லது முதலாளி என்பது பொருள். பரம முதலாளியின் அடிமை என்றே பவுல் தன்னைக்கருதினார். எவ்வளவு பெரிய மாற்றம் !

(ii) ஊழியக்காரன் என்னும் சொல் பழைய ஏற்பாட்டு மறைநூலில் பெரிதும் உபயோகிக்கப்பட்டுள்ள சொல். இது தாசன் என்றும் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது. தாசனாகிய மோசே (யோசு. 1:9) தாசனாகிய தாவீது (சங் 89:3,78:70) பாடுபடும் தாசன் (ஏசா.42:1; 49 3), தாசனாகிய யோபு (யோபு 1:8) என்னும் பக்தர் களை சந்திக்கிறோம். ஊழியக்காரராகிய யோசுவா(யோசு. 24: 29), ஆமோஸ்(ஆமோ.3:7), எரேமியா (எரே.7:25) மற்றும் தீர்க்கரைப் பற்றி வாசிக்கிறோம். எனவே 'ஊழியக்காரன்' என்று தன்னை அழைக்கும் பவுல் அடிமை எனத் தன்னை வெறுமையாக்குவதையும், பழைய ஏற்பாடு பக்தர், தீர்க்கரின் உயர்மரபில் தன்னை நிறுத்திக் கொள்வதையும் காண்கிறோம்.

(2) அழைக்கப்பட்ட **அப்போஸ்தலர்.** பழைய ஒப்பந்த மறையின் திருத்தொண்டர் அனைவரும் தாம் எதிர்பாராத வகையிலும், நேரத்திலும் தேவனால் அழைக்கப்பட்டனர். அழைப்பை ஏற்றுப்பணி செய் தனர். ஆபிரகாம் (ஆதி 12:1-3) மோசே (யாத். 3:10), எரேமியா (எரே. 1 : 4,5), ஏசாயா (ஏசா 6 : 8,9). பவுல்

தாஞகத் தன்னை இப்பணிக்கென ஏற்படுத்திக்கொள்ள வில்லை. அப்போஸ்தலர் என்னும் பெயர் திருச்சபையில் அவர் வகித்த பதவியைக் குறிக்கிறது. தேவனே இப்பதவியை அவருக்கு அளித்தார் (கலா. 1:1).

(3) **பிரித்தெடுக்கப்பட்டவர்:** இருசந்தப்பங்களில் இச் சொல் உபயோகிக்கப்படுகிறது. முதலாவது பவுல் தேவனுல் சுவிசேஷபணிக்காக பிரித்தெடுக்கப்பட்டவர் (கலா. 1:15). எல்லா மனிதருடைய வாழ்க்கைக்கும் தேவன் குறிக்கோள்களை வைத்துள்ளார். ஒருமனிதனும் வீணுக உருவாக்கப்படவில்லை.

இரண்டாவதாக பவுல் மனிதரால் பிரித்தெடுத்து அனுப்பப்பட்டவர். அந்தியோகியா திருச்சபைத் தலைவர்கள் தேவகட்டளைப்படியே பவுலையும் பர்னபாவையும் பிரித்து அனுப்பிஞர்கள் (அப். 13:23). சவுல் என்னும் பெயரில் பரிசேயஞக வாழ்ந்தபோது அவர் தன்னைத் தானே பிரித்து, மற்ற மனிதரிடமிருந்து விலகி, மத வைராக்கிய வாழ்க்கை வாழமுயற்சித்தார். வெற்றி கிட்டவில்லை. தமஸ்கு செல்லும் சாலையில் கிறிஸ்துவைச் சந்தித்த பின்னர் தேவன் தாமே தன்னை பிரித்தெடுத்திருப்பதை உணர்ந்தார்.

ரோமாபுரி சபையினர் பவுலின் நற்செய்திப் போதனை எப்படிப்பட்டது. தாங்கள் பெற்றுள்ளபடியே கலப்பற்றதாய் உள்ளதா என ஐயுறலாம். எனவே நற்செய்தியின் அடிப்படை உண்மைகளை சுருக்கமாக எடுத்துரைக்கிருர் (வச. 4,5). முதலாவதாக, பழைய ஏற்பாட்டின் தீர்க்கர்கள் இதைப்பற்றி உரைத்துள்ளார்கள் என்பதைக் கூறி, பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சியைப்பாதுகாக்கிருர். இரண்டாவது, இயேசுகிறிஸ்துவைப் பற்றி சரித்திர உண்மைகளை சபையினர் ஏற்கனவே அறிந்துள்ளபடி எடுத்துரைக்கிருர். வச. 3,7 கிருபை-தகுதி எவ்வளவேனும் இல்லாத பாவிக்கு இறைவன் பாராட்டும் இரக்கம்.

1 8—15 சபையினருக்காக இறைவனுக்கு நன்றி: அக்காலத்து கடிதங்களின் சம்பிராதயப் படியே, கடிதத்தை பெறுவோருக்காக இறைவனை இறைஞ்சி, அவர்களின் நற்பண்புகளுக்காக நன்றி செலுத்துகிறார். ரோம் நகரசபை மக்களை தாம் சந்திக்க ஆவலுள்ளவராயிருப்பதையும் தெரிவிக்கிறார் (வச.9), தேவனை சாட்சியாக நிறுத்தல் பழைய ஏற்பாட்டு மரபு (1 சாமு 12:5).

1: 16,17 கடிதத்தின் நற்செய்தி

இதுவரைக்குமாக உள்ள பகுதியில் சுவிசேஷத்தைச் சொல்வதற்கு பவுல் அழைப்பையும் வாஞ்சையையும் உடையவராய் இருத்தலைப் பார்த்தோம். (வ. 15). அந்த நற்செய்தியைக் குறித்து அவர் வெட்கமடையவில்லை. சிலர் நற்செய்தியானது பிறப்பின்படி யூதருக்கும், விருத்தசேதனம் பெற்று யூதமார்க்கத்தமைந்தவருக்கும் மாத்திரமே தேவபெலன் என நினைத்தார்கள். பவுலடியார் முதலாவது யூதருக்கு வாய்ப்பை அளித்தார். ஏனென்றால் அது வரலாற்றுண்மை.

இயேசு கிறிஸ்து யூதனாகப் பிறந்தார். அவர்களுக்கு முதலாவது நற்செய்தியை அருளினார் (9: 4,5). பவுலும் தனது நற்செய்திப் பயணங்களில் இயன்றவரை முதலாவது யூத ஜெப ஆலயங்களுக்குச்சென்று அவர்களுக்கு முதலாவது நற்செய்தியை வழங்கினார். ஆனால் தொடர்ந்து உடனடியாக கிரேக்கரையும் சேர்த்துக் கொள்கிறார். கிரேக்கர் என்னும் பெயர் பொதுவாக புறஜாதியார் யாவரையும் குறிக்கும். விசுவாசிக்கிற யாவருக்கும் அது தெய்வபலமாயிருக்கிறது. இந்த இரு வசனங்களும் நற்செய்தியை சுருக்கமாக அளிக்கின்றன. நற்செய்தியில் உபயோகிக்கப்படும் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

தேவநீதி :—

ஒரு மொழியினின்று மற்றொரு மொழிக்கு வார்த்தைகளை மொழிபெயர்த்தல் மிகக்கடினமான பணியாகும். தமிழ் வேதாகமம் உபயோகித்துள்ள தேவநீதி என்னும் சொல் கிரேக்க முதற் சொல்லின் முழு அர்த்தத்தையும் சரிவர வெளிக்கொணர்வதில்லை. கிரேக்கச் சொல் எபிரேய மொழிச்சொல்லின் பொருளை முழுமையாக உணர்த்துவதில்லை. எனவே சரியான பொருள் எபிரேயச் சொல்லில் தேங்கியுள்ளது.

பவுலடியார் பழைய ஒப்பந்த மறையைக் கற்று வளர்ந்தவர். அதன் நியாயப்பிரமாணம், செய்யுள் நூல்கள், தீர்க்கதரிசன நூல்கள் முதலியனவற்றில் தோய்ந்ததாகவே அவரது எண்ணங்கள் இருந்தன. பழைய ஏற்பாட்டை அவர் கிரேக்க மொழி பெயர்ப்பில் கற்று வளர்ந்தார். தர்சு முதலிய தூரப்பட்டணங்களில் வாழ்ந்த யூத சமுதாயத்தினர் கிரேக்க மொழி வேதாகமத்தையே உபயோகித்து வந்தனர். நீதி என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்க சொல் 'சரியானது' 'நேர்மையானது' எனப் பொருள்படும். சரியான அளவு, சரியான பாதை, நேர்மையான தராசுப்படி போன்ற சொற்றொடர்கள் இதை விளக்கும்.

பவுல் கிரேக்க மொழி மாத்திரமல்ல. எபிரேய மொழியும் கற்றவர். பழைய ஏற்பாட்டை எபிரேய மொழியிலும் கற்றுத்தேறினவர். பல சந்தர்ப்பங்களில் எபிரேய மொழிச் சொல்லையே மனதில் கொண்டவராக எழுதினர். 'நீதி' என்பதற்கு அடிப்படையாக அமைந்துள்ள எபிரேயச் சொல்லில் நன்னடத்தை என்ற ஒழுக்க நெறியோ, சமய நெறியோ பற்றிய குறிப்பு எதுவும் இல்லை ஒப்புக் கொள்ளப்பட்ட நடு நிலை அளவையே (norm) எபிரேயச் சொல் உணர்த்துகிறது.

பழைய ஏற்பாட்டில் இழைபோல் உள்ளமைந்துள்ள நடுநிலை அளவு உடன்படிக்கையே. இது இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஓர் ஒப்பந்தமாகும். ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ள இரு சாராரும் எவ்விதம் நடந்து கொள்ளுதல் தகுதி என்பதை உடன் படிக்கையின் விதிமுறைகள் தெளிவு செய்தன. உடன் படிக்கைக்குட்பட்ட யூத ஜனங்களின் நன்மைக்காக கடவுள் செயல்பட்டது ஏற்புடையது (நீதியானது). அதே போல் மக்கள் உடன்படிக்கையின் விதிமுறைகளை மீறின போது அவர்களை தண்டித்ததும் சரியானதே ('நீதியானதே'). இரு வகையிலும் கடவுள் சரியான முறையில் நடந்து கொண்டார். கடவுள் ஜனங்களை விடுவித்தபோது அவரது நீதி உறுதிபடுத்தப்பட்டது (நியா 5:11). விடுதலை செய்யும் (ரட்சிக்கும்) அவரது செய்கையிலே முக்கியமாக அவரது நீதி விளங்கியது (சங். 24:5, 31: 1, 98;2). விரோதிகளுடைய ஆட்சியில் அகப்பட்ட தமது ஜனங்களை விடுதலை செய்தார். அது மட்டுமல்ல, ஒடுக்கப்பட்டவர்கள், விதவைகள், எளியோர் இவர்களையும் அவர்களை ஒடுக்கி ஏமாற்றி சிறுமைப்படுத்துவோரின் கைகளினின்று மீட்டார். இவ்வித மீட்பில் இறைவனது நீதி விளங்கியது.

இறைவன் தூய்மையானவர். அவரது செயல்கள் சரியானவை மாத்திரமல்ல! தூய்மையானவையுமாகும். அவரது நீதியான செயல்கள் சரியான முறையில் நடப்போரின் தூயதன்மையை நிலை நிறுத்தின (Vindicated). இறைவனது மீட்கும் நீதியான செயல்களில் பங்கடைய துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பும் படியான அழைப்பு கொடுக்கப்பட்டது (ஏசா 55:7, 59:1,2). வ. 17ல் 'தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்திலுல் வெளிப்படுத்தப்

படுகிறது என பவுல் எழுதுகிறார். கிறிஸ்து பெருமான் பிறப்பதற்கு ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே மக்கள் எண்ணம் இவ்விதமாய் வளர்ந்தது. இனிமேல் இவ்வுலகில் நீதியை எதிர்பார்த்தல் இயலாது. நேர்மையாக நடப்போர் இல்லை. அநீதமே தலைதூக்கி நிற்கிறது. நீதியாய் செயல்படும் இறைவன் இவ் விதமாய் அநீதி தலைவிரித்தாட அனுமதித்துள்ளார். ஆனால் நீதி வெளிப்படும் காலம் ஒன்று வரஇருக்கிறது. அவ்வமயம் கடவுள் நீதி விளங்கும் படியாய் வல்லமையாய் செயல்படுவார் என எதிர் நோக்கியிருந் தனர். இங்கே பவுல் யாவரும் எதிர் நோக்கியிருந்த காலம் வந்து விட்டது எனக் கூறுகிறார். தேவநீதி வெளிப்படுத்தப்படுகிறது. நிகழ்கால வினைச் சொல்லை உபயோகிக்கிறார். சரியான மொழியாக்கம் வெளியாகிக் கொண்டிருக்கிறது. என்பதேயாகும். வெளிப்பாடு இன்னும் முற்றுப்பெறவில்லை. ஆனால் திட்டமாக ஆரம்பித்து விட்டது. இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

விசுவாசம்

தேவன் மீட்கும் படியாக நீதியாக செல்படுகிறார் என எதிர்பார்த்தோம். அரசியல் விடுதலை மட்டுமே இறைவன் அருளும் மீட்பு என யூதர்கள் ஆரம்பத்தில் கருதினார்கள். ஆனால் தீர்க்கரின் போதனை மூலமாக இறைவன் மக்கள் ஒருவர்க்கொருவர் தீங்கு செய்யாமல் நீதியாக வாழ்தலையே நீதி வாழ்வு எனக்கருதுகிறார் எனவும் அறிந்து கொண்டார்கள். அச்சமுதாய விடுதலையை நிலை நிறுத்த இறைவன் செயல்பட்டார். இறைவனுடைய விடுதலையை அடைவதற்கு தூய்மை அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது பழைய ஏற்பாட்டின் வளர்ச்சியுள்ள போதனை இது. புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள

விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பு என்னும் உண்மையை சந்திக்கிறோம்.

இந்த இரு வசனங்களில் நான்கு தடவைகள் விசுவாசம் என்னும் சொல் வந்துள்ளதை நாம் காணலாம். பவுலடியாரின் வாழ்விலும் அவரது இறையியல் கருத்திலும் விசுவாசம் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. விசுவாசம் என்னும் தமிழ்ச் சொல் பல சந்தர்ப்பங்களில் பல அர்த்தங்களைக் கொடுக்க கூடிய தாயுள்ளது. சொல்லும் காரியங்களை நம்புதல் (Believe), அரசனிடம் நன்றி விசுவாசமாயிருத்தல் (Loyalty) இன்னும் பல பொருட்கள் அவ்வார்த்தையின் மொழி வழக்கில் ஏற்பட்டுள்ளன. சிலர் நம்பிக்கை என்னும் சொல்லே விசுவாசம் என்னும் சொல்லைவிட பொருத்த மானது எனக்கருத்துத் தெரிவித்துள்ளனர். பொதுவாக வருங்கால கிறிஸ்தவ நம்பிக்கையையே (Christian-hope) குறிக்க அச்சொல் உபயோகப்படுத்தப்படுகிறது. பழக்கத்தில் உபயோகிக்கப்படும் விசுவாசம் அல்லது நம்பிக்கை என்னும் சொற்கள் தங்களில் தாங்களே திட்டமான ஒரே பொருளைக் குறிப்பனவாக இல்லை. எனவே பவுலடியார் தமது நோக்கத்தை ஏன் இச் சொல் மூலமாகக் கூற முற்படுகிறார் என நாம் எடுத்துக் கூற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

விசுவாசத்தின் மூலமே கடவுளின் நீதியாகிய மீட்பு வெளியாகிக் கொண்டிருக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணமாகிய சட்ட திட்டங்களைக் கைக் கொள்வதினால் அல்ல. நம் விசுவாசத்தினால் அந்த மீட்பு நம்முடையதாகின்றது. நம்முடைய தகுதியையோ நற் செயல்களையோ பொறுத்தது அல்ல. மீட்பு இறைவனின் அன்பின் ஈவேயாகும். ஈவாக இருப்பினும் இறைவன் அதை யார் மீதும் கட்டாயமாகத் திணிப்பதில்லை. இரட்சிப்பின் ஆரம்பமும் முடிவும் இறைவனே

யெனினும் மனிதனின் ஒத்துழைப்பாகிய விசுவாச மில்லை யெனின் மீட்பு மனிதனில் நிறைவேறுவதில்லை. மனிதனுக்கு கடவுள் சுய விருப்பத்தை அளித்துள்ளார். தாம் அளித்துள்ள அவ்வேற்பாட்டை அவர் மீறு வதில்லை. மனிதனை வலுகட்டாயமாகத் தன்னில் அன்புகூரும்படியாகவோ, தன்னை விசுவாசிக்கும் படியாகவோ அவர் செய்வதில்லை. அன்பு செலுத்தும் படியாகவும், விசுவாசிக்கும் படியாகவும் அழைக்கிறார். விசுவாசத்தில் ''நம் முன்னோடி அவர். அதனை முழு நிறைவுக்கு கொண்டு வருபவரும் அவரே'' (எபி.12:1).

ஒன்றை நாம் மறந்து விடலாகாது. நீ விசுவாசித் தால் மட்டுமே நான் மீட்பேன் என்ற ஒரு நிபந்தனையை கடவுள் விதிக்கவில்லை. நம்முடைய மனநிலையை எதிர் பாராமல் அவர் ஏற்கனவே நம்மை இயேசு கிறிஸ்துவில் மீட்டு விட்டார். அதுவே வியப்பினைத் தருகின்ற நற் செய்தி. நிறைவேற்றப்பட்டுள்ளதில் நாம் விசுவாசம் வைக்கும்படி அழைக்கப்படுகிறோம்.

விசுவாசம் (Faith) என்னும் சொல்லின் பொருள் என்ன ?

முதற்கண், நிலவுகின்ற ஒரு தப்பான எண்ணத் தைக் களைதல் அவசியம். 'மத வாதிகள்' தங்களால் நிரூபிக்க முடியாதக் கூற்றுகளை விசுவாசம் என்னும் போர்வையால் மூடிவிடுகின்றனர் எனக்கூறப்படுகிறது. கிறிஸ்தவர்களில் சிலரும் தாங்களாகக் கூறுகிற சில அபிப்ராயங்களை பாதுகாப்பதற்காக 'இதை அப்படியே விசுவாசி; கேள்வி ஏதும் கேளாதே' என அறிவிப்பதைக் காண்கின்றோம். புதிய ஏற்பாட்டின் விசுவாசம் பகுத்தறிவைக் கண்டு அஞ்சி, ஒதுங்கி, வெட்கப்படுவது அல்ல.

விசுவாசம் என்னும் சொல் எபிரேய மொழியில் **உறுதி, அசையாதிருத்தல்** என்னும் பொருளை உள்ளடக்கியுள்ளது உறுதியாக நம்பி, திட்டமாகப் பற்றிக் கொள்ளுதல். நாம் பிடித்துக்கொண்டிருக்கும் பொருள் உறுதியாய் உள்ளது. எனவே பற்றிக் கொண்டிருக்கிற நாமும் உறுதி பெறுகிறோம். இவ்விதமாக நாம் உறுதியாகப்பற்றிக் கொள்ளவில்லை யென்றால் "தத்தளிக்கிற இருதயமும் சோர்ந்து போகிற கண்களும் மனச்சஞ்சலமும்" இன்னும் உபா. 28:64-67 வசனங்களில் காணப்படுகின்ற நிலையே ஏற்படும். விசுவாசம் என்பது ஒரு கொள்கையின் பேரில் வைக்கப்படும் அபிமானம் அல்ல. ஏதோ சரியாக விளங்காத, இனம் புரியாத ஓர் நிலை அல்ல. அது ஒரு நபரின் மேல் வைக்கப்படும் நம்பிக்கை. ஆளுறவு Personal relationship ஏற்படுகிறது. இறைவன் அளிக்கின்ற எல்லையற்ற செல்வத்தில் பங்கு பெறுதலும், அவரது ஆணைகளை ஏற்று அவற்றிற்கு கீழ்ப்படிதலும், தன்னலத்தையும் தன்னை நம்பிவாழ்தலையும் தவிர்த்து முழுவதுமாக இறைவனைச் சார்ந்து வாழ்தலுமாகிய செயலே விசுவாசமாகும். நாம் எவ்வகையிலும் குறைவுள்ளவர்கள். வாழ்க்கையின் எந்த காரியத்தையும் சீரியமுறையில் செய்வதற்கு இயலாதவர்கள் என ஒத்துக்கொண்டு முழுவதுமாக இறைவனின் நிறைவில் நாம் சார்ந்து நிற்கிறோம்.

புதிய ஒப்பந்த மறையில் விசுவாசம் என்னும் சொல் ஐந்து வகைப் பொருள்களில் உபயோகிக்கப் பட்டுள்ளது.

(1) விசுவாசம் என்பது சமயக்கோட்பாடு என்னும் பொருள்பட வழங்கப் படுகிறது. ஒருவன் நம்புகின்ற சமய உண்மைகள் மதச்சித்தாந்தம் என அர்த்தமாகும்.

(2) சில இடங்களில் நன்றி விசுவாசமாயி ருத்தல், வாக்கு மாருதிருத்தல் என்னும் பொருள் மேலிடுகிறது. இறைவன் தனது உடன்படிக்கையின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் விசுவாசமாய் (உண்மையுள்ளவராய்) இருக்கிருர்.

(3) மனதளவில் நம்பி ஏற்றுக்கொள்ளுதல் என்னும் அர்த்தத்தில் விசுவாசம் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. சாதாரண அனுபவத்திற்கு உட்படாததாயிருந்தாலும் அறிவினுல் அதனை ஏற்றுக் கொள்ளுதல் என பொருள்படும். (intelluctual-acceptance).

(4) நான்காவதாக, விசுவாசம் என்பது "எதிர் நோக்கப்படுபவை கிடைக்கும் என்கிற உறுதி; கண்ணுக்குத் தெரியாதவை பற்றிய ஐயமற்ற நிலை" (எபி. 11:1) என எபிரேயருக்கு கடிதம் எழுதியுள்ள ஆசிரியர் குறிப்பிடுகிருர். ஏதோ ஒன்றைப்பற்றிய உளமார்ந்த எதிர்பார்ப்பு மட்டும் தான் என்று நாம் இதனை எளிதாக எண்ணிவிடலாகாது. இவண் காணப்படுகின்ற உறுதி செயல் படக்கூடியது என்பதை எண்ணற்ற இறை மக்களின் வாழ்க்கைச் சான்று களோடு நிருபிக்கிருர் அவர். விசுவாசிகளின் மாபெரும் கூட்டம் "திரண்டு வரும் மேகம் போல் நம்மைச் சூழ்ந்திருப்பதை" உணருகிருேம். விசுவாசித்துள்ளதின் உறுதியினுல் எதனையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமா யிருந்தார்கள். (எபி. 11:33-38. "வேறு சிலர் ஏளனத் துக்கும் சாட்டையடிகளுக்கும் ஆளாயினர்; விலங்கிடப் பட்டு சிறையில் வாடினர்; கல்லடியால் இறந்தனர்; வாளால் அறுப்புண்டனர்; பட்டயத்திற்கு இரை யாயினர்; வறுமையுற்று, துன்பத்திற்கும் கொடு மைக்கும் உள்ளாகி செம்மறி வெள்ளாடு ஆகிய வற்றின் தோல்களைப் போர்த்துக்கொண்டு திரிந்தனர்". (எபி. 11: 36,37) விசுவாசத்தின் உறுதியால் விளைந் துள்ள செயலாற்றும் திண்மையைக் காண்கிருேம்.

(5) பவுலடியார் மேற்கூறிய நான்கு பொருட்களிலும் விசுவாசம் என்னும் சொல்லை ஆங்காங்கு உபயோகித்துள்ளார். ஆனால் முக்கியமாக அவர் அந்த சொல்லின் சரியான பொருள்படவே உபயோகிக்கிறார். விசுவாசம் என்பது இறைவனின் மீட்பில் பங்கடைவதற்காக அவரது இரக்கத்தில் முழுவதும் சார்ந்து நிற்பதைக் குறிக்கின்றது. தனது முயற்சியிலோ அல்லது திறமையிலோ அல்லது நன்மதிப்பிலோ அல்ல. மனிதனுடைய ஆவியாகிய ஆட்தன்மையின் மையத்திலிருந்து (Spirit-the core of human personality) அன்பு நிறை இறைவனின் அழைப்புக்கு அளிக்கப்படுகின்ற பதில் ஒலியே விசுவாசம். அதுவே இறைவனின் அன்பை நமக்குள்ளாக ஏற்றுக் கொள்கின்ற உயர் செயலாகும். தாழ்மை, நன்றி, மகிழ்ச்சி இவை நிரம்பிய உள்ளத்தால் மட்டுமே இறை அன்பை ஏற்றுக் கொள்ள இயலும். கடவுளின் எல்லையில்லா நற்குணமும், மனிதனின் தனக்குத்தானே உதவமுடியாத பாவ நிர்ப்பந்தநிலையும் விசுவாசத்தில் பிரதிபலிக்கின்றன. நற்செய்தி நூல்களில் மனந்திரும்புதல், விசுவாசம் என்ற இரண்டு கிறிஸ்தவ அனுபவங்களைப் பற்றி வாசிக்கிறோம். பவுலோ மனம்நொந்து திரும்புவதைப் பற்றி இங்கே குறிப்பிடவில்லை. ஏனென்றால் பவுலடியாரின் மனதில் விசுவாசம் என்பது மனந்திரும்புதலையும் உள்ளடக்கியுள்ளது.

சுவிசேஷம் : பவுலடியார் இப்பகுதியில் உபயோகிக்கும் பல சிறப்பான சொற்களுள் 'தேவ நீதி' 'விசுவாசம்' என்னும் இரு சொற்களின் கருத்தை நாம் ஆராய்ந்துள்ளோம். மூன்றாவதாக சுவிசேஷம் என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இவ்வட மொழிச் சொல்லை சுப + விசேஷம் எனப் பிரிக்கலாம். நல்ல + செய்தி எனத் தமிழ்ப்படுத்தலாம். அடிப்படையான கிரேக்கச் சொல்லின் பொருளும் அதுவே. சொல் வழக்கில் எந்த

ஒரு நற்செய்தியைப் பற்றிக் குறிப்பிடுவதற்கும் அச் சொல்லே பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ இலக்கியத் திலோ அது கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை மாத்திரம் குறிப்பிடும். அவரின் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு, உயிரோடு எழுந்திருத்தல் இவற்றினுல் மனிதனுக்குக் கிட்டியுள்ள மீட்பைப் பற்றிய செய்தியே நற்செய்தியாகும். மீட்பின் செய்தியை அறிவிக்கத் தொடங்கிய கிறிஸ்துவின் சீடர்கள் சமீப காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைப் பற்றி (செய்தி) அறிவிக்கிறோம் என்ற உணர்வோடு தான் செயல்பட்டார்களே அல்லாமல். ஒரு பழமையான இறையியல் கருத்தைப் பரப்புவதாக எண்ணவில்லை.

நறசெய்தி என்னும் இச்சொல் 'பெயர்ச் சொல்' ரூபத்தில் (Noun)லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய நற்செய்தி நூற்களில் காணப்படவில்லை. [லூக்கா நற்செய்தி நூலில் வினைச் சொல்லாக உபயோகிக்கப் பட்டுள்ளது.] மத்தேயு, மாற்கு நற்செய்தி நூற்களில் 13 தடவையும், அப்போஸ்தலர் நடபடிகளில் 2 தடவையும், 1 பேதுரு, வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய நூற்கள் ஒவ்வொன்றில் ஒரு தடவையும் 'நற்செய்தி' என்னும் சொல் காணப்படுகிறது. பவுலடியாரின் கடிதங்களிலோ 60 தடவை இச்சொல் உபயோகிக்கப் பட்டுள்ளது. கிறிஸ்துவின் மீட்பிற்கு நற்செய்தி என்னும் பெயர் வழங்கியவர் பவுல் இல்லையெனினும் அவரே அப்பெயரை பரவச் செய்து நிலை நிறுத்தியவர் எனலாம்.

நற்செய்தியைக் குறித்துப் பவுல் வெட்கப்படவில்லை. வெட்கப்படுவதற்கான எல்லா வாய்ப்பும் உண்டு. அத்தேனேப் பட்டணத்தில் பவுல் பேசிய போது பலர் ஏளனம் செய்தனர் (அப். 17 : 32). சிலர் "வாயாடி" என அழைத்தனர் (அப். 17 : 18).

அறிஞர் நற்செய்தியின் உண்மையைக் குறித்து வாக்கு வாதம் செய்தனரேயல்லாமல் ஏற்றுக்கொள்ளவில்லை (அப். 17 : 18). அது அவர்களுக்கு "மடத்தனமாகக்" காணப்பட்டது (1 கொரி. 1 : 18-23) * அறிவு நிறைந்தோர்க்கும், பண பலம் படைத்தோர்க்கும் ஏற்கும் வகையில் நற்செய்தியை திருத்தி மாற்றியமைத்துக் கொள்ள பவுல் எண்ணவில்லை. ஏனென்றால் அருட்செய்தியில் மீட்பளிக்கும் தேவ பெலன் நிறைந்திருந்தது.

இரட்சிப்பு (மீட்பு)

பவுலடியார் வாழ்ந்த காலத்தில் மக்கள் யாவரும் மீட்பையே பெரிதும் விரும்பினர். ஆரம்ப காலங்களில் கிரேக்க தத்துவ ஞானிகள் மனிதனது நேரடி வாழ்விற்கு அத்துணை அவசியமில்லாத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். பூமி என்ன பொருளினால் அமைந்துள்ளது ? இவை போன்ற அறிவு சார்ந்த தத்துவங்களில் மனத்தைச் செலுத்தினர் (Speculative and natural philosophy). காலங்களும் சூழ்நிலைகளும் மாறின. மன்னர்களின் கொடுங்கோன்மை, யுத்தங்கள், தீமையான செயல்கள், பகை, வஞ்சகம் முதலியன பெருகி வளர்ந்தன. அறிஞர் மனம் வெதும்பி நேர்மையான வாழ்வைப் பற்றி போதிக்கத் தலைப்பட்டனர். (moral philosophy). ஒரு அறிஞர் தான் உரை நிகழ்த்தும் அறையை "நோயுற்று நலிந்த ஆத்துமாவிற்கு மருத்துவமனை" என அழைத்தார். மற்றொருவர் தனது போதனைகளை "மீட்பின் மருந்து" எனக்கூறினார். பவுலடியார் வாழ்ந்த அதே காலத்தில் வாழ்ந்த செனெக்கா என்னும் அறிஞர் "மக்கள் யாவரும் மீட்பை எதிர் நோக்கியுள்ளனர். நம்மை மேலே தூக்கி விடும்படி கீழே நீட்டப்பட்டக்கரம் தேவை" எனக்கூறியுள்ளார்.

---

* Tamil Common Language Translation 1975

நற்செய்தியாக கூறி அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி மனிதர் வாஞ்சையோடு எதிர் பார்த்ததை சந்தித்தது.

திருமறையில் மீட்பு பலவகைப்படும் :

(1) சரீர வியாதியினின்று மீட்பு (மத் 9 : 21)

(2) ஆபத்துக்களிலிருந்து மீட்பு(மத் 8 : 25).

(3) வாழ்வைக் கெடுக்கும் காரியங்களிலிருந்து மீட்பு (அப் 2 : 40).

(4) பாவத்தினின்று மீட்பு (மத் 1 : 21)

(5) இறைவனின் கோபத்தினின்று மீட்பு (ரோமர் 5 : 9)

(6) கடைசி காலத்தில் வெளிப்பட இருக்கும் மீட்பு (i பேது 1 : 5; 2 தீமோ. 4 : 18)

வ. 17 விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் : ஆபகூக் 2 : 4. மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. 'விசுவாசத்தினால் நீதிமானானவன் பிழைப்பான்' என மொழிதிருத்தலாம். அடிப்படையான சொல்லில் தூய வனாகி விட்டான் என்ற பொருள் இல்லை. பாவியாகிய ஒருவனை இப்பொழுதே நன்மை செய்பவனாக முற்றிலும் மாற்றி விடவில்லை. அல்லது அவனது தீமையெல்லாம் நன்மையென வறட்டு வாதம் செய்யவில்லை. பாவியாகிய அவன் அப்படியே தனக்குகந்தவன் எனக்கொள்ளுதலே (to reckon) நீதிமானாக்குதல் (ரோ 5 : 8, 10) "Justification confers not primarily a new character, but a new status' (The interpreters' Bible) "கடவுளை நம்புவதால் தமக்கு ஏற்றவனென்று அவரால் கொள்ளப்படுபவனே மெய் வாழ்வைப் பெறுவான்".

இவ்விரு வசனங்களிலும் பவுலடியார் தாம் விரிவாகக் கூறப்புகுந்துள்ள நற்செய்தியை சுருக்க

மாகவும், தெளிவுகுன்ற பான்மையிலும் கூறுவதைக் காண்கின்றோம்.

எல்லாரும் பாவஞ்செய்து கடவுளின் கோபத்துக்கு ஆளானர்கள்

(1 : 18 – 3 : 20)

1 : 18 முகவுரை

முந்தின பாகத்தில் பவுலடியார் கடவுளை விசுவாசிப்பதால் அவரோடு ஏற்படும் புதுஉறவைப்பற்றியும் மெய்வாழ்வைப் பற்றியும் எழுதினர். உடனடியாக தொடர்ந்து கடவுளின் கோபத்தைப்பற்றி எழுதுகிறார். யூதர்கள் தங்கள் நியாயத்தைக் கடவுள் நிலைநிறுத்தும் நேரத்தில் (Vindication) தீயோர்மேல் கடுந்தண்டனைத் தீர்ப்பு வரும் என எண்ணினர். யூதரில் சாதாரண மக்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களும் உண்மைக் கடவுளைப்பற்றிய அறிவு இல்லாதவர்களுமாகிய புறஜாதியாரையே 'தீயோர்' எனக்கருதி வந்தனர். சற்றேக் கூர்மையாக சிந்திக்கும் திறன் படைத்தோர் யூதர் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதனைக் கைக்கொள்ள வில்லையெனில் அவர்களும் தீயோரே என அறிந்து வைத்திருந்தனர்.

பழைய ஏற்பாட்டில் கடவுளின் கோபத்தைப்பற்றி வாசிக்கிறோம். யூதர்களோடு ஆண்டவர் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு சம்பந்தப்பட்டதாகவே அது சொல்லப்படுகிறது. ஆண்டவர் அவர்களைத் தெரிந்து கொண்டார். அவர்களோடு ஒப்பந்தம் செய்து நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொண்டார். அவர்கள் உடன்படிக்கையின் நிபந்தனைகளாகிய கற்பனைகளைக் கைக்கொள்ளும் பொழுது அவ்வுறவு நலமானதாக இருந்தது. கற்பனையை யாராவது மீறினால் அவர்கள் மீது தேவகோபம் வந்தது. (எண். 23 : 3). எண்ணாகமம்

16ஆம் அதிகாரத்தில் கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரின் கலகத்தினிமித்தம் கிடைத்த தீர்ப்பை பற்றி வாசிக்கிறோம். அவ்வரலாற்றின் இறுதியில் இஸ்ரவேலர் எல்லாருக்குமாக ஆரோன் பாவ நிவிர்த்தி செய்தான். ஏனென்றால் "கர்த்தரின் சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது" (எண். 16:46).

அது தவிர இஸ்ரவேலரைக் கொடூரமாகவும் அநீதியாகவும் நடத்தின தேசங்கள் மீதும் இறைவனின் சீற்றம் இறங்கினது. (எரே.50:13). தீர்க்கரின் போதனைகளில் கோபத்தைப் பற்றிய கருத்து இன்னும் தெளிவு பெற்றது. நடைபெறும் இக்காலத்தைப்பற்றியும், வரப் போகின்ற காலத்தை பற்றியும் தீர்க்கர்கள் பேசினார்கள். இக்காலம் முற்றிலும் சீர்கேடானது. வரப்பேரகும் காலமோ பொற்காலம். இவ்விரண்டு காலங்களுக்கும் இடையிலே "கர்த்தருடைய நாள்" நிற்கிறது. அது பயங்கரமான நியாயத்தீர்ப்பும் ஆக்கினையும் வெளிப் படும் நாள்; - (யோவேல். 1 : 15) உலகம் அழிக்கப்படும்; பாவி நிர்மூலமாவான்; புதிய இறையரசு நிறுவப் படும். அப்பெரிதும் பயங்கரமுமான நாளிலே கடவுளின் சீற்றம் செயல்படும் (ஏசா. 13 : 9; எசே 7:19 செப். 3:8). ஆனால் அந்நாள் வரையிலும் இறைவனின் சினம் வெளிப்படாமலே இருக்கிறது எனத்தீர்க்கர் கூறவில்லை. அது எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இஸ்ரவேலர் ஆண்டவரைமறந்து, அவருக்கு துரோகம் பண்ணி அந்நியதேவர்களைப் பணிந்து கொள்ளும் போது இறைவனின் கோபம் செயல்பட்டு அவர்களைச் சிறையிருப்புக்கும், அழிவுக்கும் ஒப்புக் கொடுத்ததைப்பற்றித் திரும்பத் திரும்ப வாசிக்கிறோம். கர்த்தருடைய நாளிலே அவரது கோபத்தின் வெளிப்பாடு உச்சநிலையை அடைகிறது. இங்கே "தேவகோபம் வானத்திலிருந்து வெளிப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது" எனத் தொடர்

நிகழ்காலத்தில்(Present continous tense) இருப்பதே சரியான மொழியாக்கம். தேவகோபம் என்னும் சொல் மொழி வழக்கில் நாம் தினமும் உபயோகிக்கும் சொல்லே. அச்சொல் இறைவன் மனிதரிடத்தில் கோபமாயிருக்கிறார் என்னும் கருத்தைக் கூறுவது போல் உள்ளது. பவுலடியாரோ அப்படிக்கூறவில்லை. எனவே கோபம் என்னும் நடைமுறைச் சொல்லைவிட 'சீற்றம்'' சினம்' என்னும் சொற்கள் சாலப்பொருந்தும். பவுலின் கருத்து எளிதான நடைமுறைக்கருத்தாக இல்லாததினால் பயன்படும் சொல்லும் நடைமுறை சொல்லாக இல்லாதிருத்தல் நலம்.

பவுலடியார் 'இறைவன் கோபப்படுகிறார்' என்னும் வினைச்சொல்லை உபயோகிப்பதேயில்லை. இறைவனின் 'அன்பு' (noun) எனச்சொல்பவர் இறைவன் அன்பு செலுத்தினார் (verb) எனவும் கூறுகிறார். (2 தெச. 2:16; எபே.2:4) கடவுளின் 'கிருபை' எனச்சொல்பவர் கடவுள் 'இரக்கம் பாராட்டுகிறார்' எனவும் கூறுகிறார். மற்ற பண்புகளில் பெயர் சொல்லும் வினைச்சொல்லும் காணப்படும் போது கோபத்தைப் பொறுத்தவரையில் சீற்றம் என்னும் பெயர்ச்சொல் மாத்திரம் காணப்படு கிறது. அதிலும் மூன்று தடவைகள் மாத்திரமே கடவுளின் சீற்றம் என பவுல் குறிப்பிடுகிறார் (ரோ.1:18 எபே. 5 6, கொலோ. 3:6) அவ்விரண்டு இடங்களிலும் "கீழ்ப் படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வருவதைப் பற்றி பேசுகிறார். மற்ற இடங்களிலே கோபம் என்னும் சொல்லை ஒரு தனி அமைப்பைப்பற்றி குறிப்பிடுவது போல் உபயோகிக்கிறார் (ரோ. 5: 9, 12:9. 13:5). அவரது கருத்தை இவ்விதமாக கூறலாம். இவ்வுலகில்செயலாற்றி வருகிற ஒரு நீதி அமைப்பு உள்ளது, அதன் படி "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்". அந்த அடிப்படை அமைப்பே "இறைவனின் சினம்" எனலாம். படைக்கப்பட்டுள்ள இந்த உலக அமைப்பில் கடவுளின்

கற்பனைகளை மீறுகிறவன் தானாக தண்டனை பெற்றேத் தீருவான். முதற்செயல் தன் விளைவாக வழிச்செயலைத் தோற்றுவிக்கிறது போல் தீய செயல் தான் அடையும் தண்டனையையும் உருவாக்கி விடுகிறது ...... "Cause will inexorably lead to effect and the turbulence of iniquity will in due season bring its own retribution[1] " "The wrath of God is the inevitable punishment of sin. It is there in the structure of the universe"[2] இவ்வித அமைப்பு செயல்படுவதினால் தீவினை புரிந்துள்ள யாரும் தப்பவே முடியாது. அழிவு உறுதி. இச் சூழ்நிலையில் தான் இறையன்பு குறுக்கிடுகிறது. இலவசக் கிருபையினால் மனிதனை மீட்டு அவனது தீச் செயல்களின் பலன் அவனை அழித்து விடாதபடி காக்கிறது. இவ்வன்பைப் பற்றியும் இலவசக் கிருபையைப் பற்றியும் பவுலடியார் பின்னர் தன் கடிதத்தில் பேசுகிறார்.

இறைவனின் சீற்றம் எதற்கு விரோதமாய் வெளிப்படுகிறது? சிலர் உண்மையை அநீதியினால் அடக்க முயற்சிக்கிறார்கள்: கடவுளைப் பற்றிய மெய்யறிவாகிய வாய்மை எல்லா மனிதருக்கும் தெளிவாக வெளியாகியுள்ளது. தாங்கள் பெற்றுள்ள இம்மெய்யறிவை தங்களின் தீச்செயல்கள் மூலமாய் பயனற்றதாக்கு கிறார்கள். தீச்செயல்கள் இருவகைப்படும். (1) இறைவனுக்கு விரோதமான பாவம். அது தான் அவபக்தி (2) மற்றது நேர்மைக்கும், நன்மைக்கும், நீதிக்கும் எதிரான பாவம் (moral offence). பலவகைகளில் அது உடன் வாழும் மனிதருக்கு விரோதமான தீச்செயல். அது தான் அநியாயம், இவற்றிற்கு விரோதமாய் கடவுளின் சினம் வெளியாகிக் கொண்டிருக்கிறது.

---

(1) Interpreter's Bible (2) Barclay's Commentary on Romans.

1:19-32 புற ஜாதியாரின் மீறுதலும் சிலேவணக்கமும் — கடவுளின் கோபம்

முதலாவது புறஜாதியாரிடம் பேசுகிருர். அவர்களில் பிரதானமாக அவர் கண்டிப்பது சிலேவணக்கம். சத்தியத்தை அடக்கி வைப்போரைப் பற்றி முன் வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்போது புறஜாதியாரும் இறைவனேப்பற்றிய அறிவு பெற்றுள்ளதிஞல் தாங்கள் அடக்கி வைத்துக்கொண்ட அவ்வறிவைப் பற்றி அவர்கள் போக்குச் சொல்ல இயலாது.

பழைய மொழிபெயர்ப்பில் உள்ள "அறியப்படுவது" என்பதே பொருத்தமானது. "அறியக்கூடியது" என்ற புது மொழிபெயர்ப்பின் சொல் மிக விரிவான அர்த்தமுடையது. கடவுளேப் பற்றி மனிதன் அறியக்கூடிய எல்லாம் புறஜாதியாருக்கு வெளிப்பட்டிருந்தது என்ற விரிவான பொருளில் பவுல் கூறவில்லே. அறியப்படுவது (what is known) தெளிவாக உள்ளது என்றே கூறுகிருர். "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது" (சங். 19 : 1). அவற்றைப் படைத்தவர் அவரே. வல்லமையும் இறைமாட்சியும் அவரது படைப்பின் மூலம் வெளியாகின்றன (யோபு 12 : 7-9).

1:21 கடவுட்தன்மையை, (அவரது அன்பை, நீதி, இரக்கம் முதலியவற்றை) அறிந்தோர் யாவரும் அவருக்கு நன்றி செலுத்தாமல் இருக்க இயலாது. உள்ளம் நொந்து கவலேயோடு விண்ணப்பிக்கும் வேளேயிலும் நன்றி செலுத்தவே உள்ளம் செல்லும் என்பதே பவுலடியாரின் அனுபவம் (பிலி. 4 : 6). உண்மைக் கிறிஸ்தவன் தாவீதைப் போல் "எக்காலத்திலும்" கர்த்தரை ஸ்தோத்தரிப்பான் (சங்.34 : 1–3). நம் உள்ளமும், உதடுகளும் இறைவனுக்கு நன்றி எக்காலும் செலுத்துகின்றனவா? புறஜாதிகள் இறைவனே நோக்காமல்

தங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தனர். (man centered speculations) 1: 22, 23, 25.

ரோம் நகரம் முழுவதும் சிலை வணக்கத்தால் நிறைந்திருந்தது. ரோம தத்துவ பேராசிரியர்கள் பலர் பல கருத்துக்களைக் கூறித் தங்களை உயர்வாகப் பாராட்டி வந்தாலும் அன்றய ரோம் நகருக்குச்சென்றவர் கண்களிலே சிலை வணக்கமே முற்றிலும் தென்பட்டது. இயற்கையானது இறைவனை வெளிப்படுத்தும் சிறந்த கருவி என்பதாகப் பார்த்தோம். இயற்கையின் பணி நிறைவேறி அவர்கள் கடவுளை அறிந்திருந்தனர். இயற்கை படைப்புகளையே தெய்வங்களாக வணங்கினர் எனவும் பவுலடியார் கூறுகிறார் (வ. 20). ஆனால் 'வீணரான" அவர்கள் இயற்கையின் உயரிய நோக்கமும் பணியும் உரியவகையில் ஏற்றுக் கொள்ளப் படாததால் அவை இழிதகமை அடைந்தன எனலாம் (Perversion and debasement).

1: 24, 26-28 அவர்கள் இயற்கை படைப்புகளின் உயரிய நோக்கம் இழிவடையும் வகையில் செயல்பட்டதால் அதே இழிவுபடுத்தும் தன்மை எல்லா செயல்களிலும் காணப்பட்டது. குறிப்பாக வாழ்வில் இன்பமும் பயனும் வழங்கும்படி ஆண்டவரால் படைக்கப்பட்டது பால் உணர்ச்சி. அது அளிக்கப்பட்ட நோக்கத்திற்கு மாறாக செயல்பட்டு அதனையும் இழிவு படுத்தினார்கள். தங்கள் விருப்பத்தின்படியே செய்ய "கடவுள் அவர்களை விட்டுவிட்டார்" என்பதாகப் பவுல் கூறுகிறார். இது மனிதனுக்கு இறைவன் தரக்கூடிய பெரிய தண்டனை எனலாம்.

வ. 29 – 32 அக்கால அறிஞர்கள் பாவங்களை மாம்சத்திற்குரிய பாவங்கள் என்றும், சமூக விரோத பாவங்கள் என்றும் இரண்டாகப் பிரித்துப் பேசினார்கள்.

முன்பகுதியில் மாம்ச இச்சைக்குரிய பாவங்களைப்பற்றி பவுல் பேசினார். இந்த பாகத்தில் சமூக விரோத பாவங்களை வரிசைப்படுத்துகிறார். ''தகாதவைகள்'' (வச. 28) என்று பெயரிட்டு ஸ்தோயிக்க தத்துவ அறிஞர்கள் (Stoic philosophers) இப்பாவங்களை அழைத்துவந்தனர். பவுலடியாரும் அச்சொல்லை பயன்படுத்துகிறார். இப்படி இரு வகையான அட்டவணைகளை பவுலின் மற்றக் கடிதங்களிலும் காண்கிறோம் (1கொரி. 5:10, 11; 2கொரி 12: 20, 21; கலா. 5: 19-21) 29 ஆம் வசனத்தில் "வேசித்தனம்'' என்னும் பாவம் கூறப்படுகிறது. அதன் அடிப்படை கிரேக்கச் சொல் 'தான் என்ற அகங்காரத்தில எதேச்சதிகாரத்தை நிலைநிறுத்தல்'' எனப்பொருள்படும் ("ruthless, aggressive self-assertion'')[1] மற்ற மொழிபெயர்ப்புகளில் இச் சொல் "பொல்லாப்பு'' — திருத்திய மொழி பெயர்ப்பு தரங்கபாடி யூபிலிய பதிப்பு 1956, "பொல்லாங்கு''— Tamil common Language translation 1975. "கெடுமதி'' — கத்தோலிக்கத்தமிழ் மொழி பெயர்ப்பு 1970.

வ. 30 துராகிருதம் பண்ணுகிறவர்கள் - மேட்டிமையுடன் நடப்பவர்கள் அல்லது மூர்க்கர்கள் என பொருள்படும் (insolent) வ. 32 பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை நினைவுறுத்துகிறார். தாங்கள் பாவம் செய்வது மாத்திரம் அல்ல, பாவம் செய்கிற மற்றவர்களையும் உற்சாகப்படுத்துகிற துணிகரத்தைக் காண்கிறோம்.

2: 1–16 தேவன் பட்சபாதமற்றவர்

அந்த நாட்களில் தத்துவப் பேராசியாகள் பெருமளவிற்கு கேள்வி பதில் முறைகளையே கொள்கையை விளக்க உபயோகித்தார்கள். பவுலும் அதே முறையை

1. C. H Dodd- commentary on Romans.

உபயோகிக்கிறார். தன்முன் யூதன் ஒருவன் நிற்பது போல் பாவனை செய்து அவனிடம் பேசுகிறார். இது வரையும் புறஜாதியாரின் பாவங்களை வன்மையாகக் கண்டித்தார்.

அதனை வாசிக்கும் யூதன் எவனும் அதை அப்படியே உற்சாகமாக ஆதரிப்பான். அவன் முழு சம்மதத்தோடு கவனிக்கும் நேரத்தில் பவுல் திடீரென்று அவன் மேலேயே திரும்புகிறார். ஆமோஸ் முதல் இரண்டு அதிகாரங்களிலே தீர்க்கர் மற்ற தேசங்களைப் பற்றி கூறிக்கொண்டே வந்து திடீரென இஸ்ரவேல் யூதா நாடுகளுக்கு விரோதமாய் இறைவாக்கைக் கூற ஆரம்பித்தது போல் பவுலும் செய்கிறார். யூதர்கள் தாங்கள் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாக இருந்ததினால் தங்களுக்கு தண்டனை இராது. ஆண்டவர் மன்னித்து விடுவார் என எண்ணினர். "ஆபிரகாம் நரகத்தின் வாசலில் உட்கார்ந்திருந்து தீயவரான எந்த யூதனும் அங்கே பிரவேசியாதபடி தடுத்துவிடுகிறார்", "யூதரை தகப்பன் பிள்ளைகளை சிட்சிப்பது போல கடவுள் சிட்சித்து திருத்துகிறார். புற ஜாதிகளையோ சவுக்கினால் தண்டிக்கிறார்." இவ்விதமாக அவர்களின் எண்ணம் இருந்தது. பவுலடியார் அத் தவறான எண்ணத்தை வன்மையாகக் கண்டிக்கிறார். தேவன் பட்சபாதமற்றவர் என்பதை நிலைப்படுத்துகிறார். தேவன் தனது ஜனங்கள் மேல் தயவு நிரம்பியவர் தான். ஆனால் அந்த தயவு குணப்படுவதற்காகவே பாராட்டப்படுகிறது (வ.4).

வ 6 "அவனவனுடைய கிரியைகளுக்கு தக்கதாய் அவனவனுக்குப் பதிலளிப்பார்."

இந்த வசனம் பவுலடியாரின் இக்கடிதத்தில் கூறப்படும் கருத்துகளுக்கு முரண் ஆக உள்ளதோ என

சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். கிரியையின் மூலமாக அல்ல. விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிப்பு ஏற்படும் என்ற உண்மைக்கு இது பொருந்துவதாக தோன்ற வில்லையே எனக் கூறியுள்ளனர். விசுவாசம் என்று பவுல் கூறும் போது அதில் விசுவாசத்திற்கு ஏற்ற செயல் புரிவதையும் உள்ளடக்கியே அவர் பேசுகிருர் என்பதை இவ்வசனம் தெளிவுப்படுத்துகிறது. யாக்கோபு அப்போஸ்தலன் தன்கடிதத்தில் இக் கருத்தை விரிவாக எடுத்துரைக்கிருர் (யாக் 2:14-20).

வ. 15. மனசாட்சியின் சாட்சி இருதயங்களில் எழுதப் பட்டுள்ள நியாயப் பிரமாணத்திற்கேற்ற கிரியைகள் முதலியன தேவனுல் அவர்களுக்கு வெளிப்படுத்தப் பட்டுள்ள வெளிப்பாடு எனலாம். முன்னதாக பவுலடியார் இவற்றைப்பற்றி பேசினுர் (1: 19 : 20). அரிஸ்டாட்டில் என்ற தத்துவ பேரறிஞரும் ஸ்தோயிக்க அறிஞரும் இக் கருத்தை ஆதரித்தனர். நியாயப் பிரமாணம் கடவுளைப் பற்றி தெளிவாகவும் உயர்வான முறையிலும் வெளிப் படுத்தியுள்ளது என பவுல் அறிவார். இருந்தாலும் கடவுள் தன்னைப் பற்றிய சிறிய அறிவு கூட இல்லாமல் மனிதனை இருளில் விடவில்லை என்பதை இங்கே அவர் குறிப்பிடுகிருர்.

ரோ. 2: 17 -29 யூதரும் பாவம் செய்தவர்களே

இப்பகுதியில் பவுலடியார் யூதர்களின் உண்மை நிலையை வெளியாக்கி அவர்களை வன்மையாகக் கண்டிக்கிருர். யூதன் நியாயப்பிரமாணத்தில் உபதேசம் பெற்றுள்ளான். 19, 21 ஆம் வசனங்களில் கூறப் படுகிற தகுதிகளை அவன் பெறலாம். நியாயபிரமாணத்தை உடையவனுயிருத்தல் போதாது. அவற்றிற்கு அவன் கீழ்ப்படியும் போதே இத் தகுதிகள் அவன் வாழ்வில் உண்மையாகின்றன.

வ. 21-24 போதனை இருந்தது; சாதனையோ இல்லை. எனவே மற்றவர்கள் கடவுளைத் தூஷித்தார்கள். இன்று தகுதியற்றோர் நற்செய்தி பணிசெய்யும் போது இறைவனின் நாமம் உயர்வடையாமல் இகழ்ச்சியே யடைகிறது. பவுலடியாரின் நாட்களில் பல வகைகளில் யூதர்கள் ஏளனமாக எண்ணப்பட்டனர். மற்றவர்கள் அவர்களது பழக்கவழக்கங்களைச் சரியாக புரிந்து கொள்ளாததினால் அவர்களைப்பற்றி தவறான கருத்துக் களைக் கொண்டிருந்தனர்.

யூதர்களது ஆரம்ப வரலாற்றைப் பற்றிப் பல கட்டுக் கதைகள் கூறி வந்தனர். எகிப்துநாட்டில் அவர்கள் யாவரும் தொழுநோயால் பீடிக்கப்பட்டி ருந்தனர் எனவும் மோசே அவர்கள் வேலை செய்த அடிமைத்தனத்திலிருந்து அவர்களை ரட்சித்து வனாந்த ரத்திற்கு அழைத்துவந்தான் எனவும், வனாந்தரத்தில் தண்ணீருக்காக தவித்து அலைந்த போது ஒரு காட்டுக் கழுதை கூட்டம் தண்ணீருள்ள ஊற்றிற்கு அவர்களை வழி நடத்தியதால் கழுதைத்தலையையே தெய்வமாக வணங்கினர் என்றும் மற்றவர்கள் பேசினர். பன்றி இறைச்சியைத் தின்பதற்கு மறுத்ததால் சிலர் யூதர் களின் தெய்வம் பன்றி எனக்கருதினர். ஓய்வு நாள் என்று வாரத்தில் ஒரு நாள் வேலை செய்யாதிருத்தல் அவர்களது சோம்பேறித்தனம் என்றே பேசப்பட்டது. ரோமப்பேரரசு யூதர்களுக்கு சில சலுகைகளைக் கொடுத்து வந்தது. இதனால் புறஜாதியார் அவர்கள்மீது பொறாமை யும் வெறுப்பும்கொண்டனர். உதாரணமாக, ஓரளவிற்கு அவர்கள் தங்களுக்குத் தாங்களே நீதி மன்றங்களை ஏற்படுத்தி தங்கள் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பிட் டுக்கொள்ள உரிமை பெற்றிருந்தார்கள். ஓய்வு நாள் தோறும் வேலை செய்ய மறுத்ததால் ராணுவ சேவை யிலிருந்தும் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டி

ருந்தது. ரோமப்பொதுஜனங்கள் யூதர்கள்மீது இரண்டு பெருங்குற்றங்களைச் சாட்டினர் (1) யூதர்கள் நாஸ்தீகர்கள் என்பது முதல் குற்றச்சாட்டு ரோம நகரம் சிலைகளால் நிறைந்திருந்தது. ரோமப்பேரரசன் எந்தெந்த நாட்டைக் கைப்பற்றினாலும் அந்த நாட்டின் மக்களை கவர்வதற்காக அந்த நாட்டின் தெய்வத்தை தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறி அந்த தெய்வத்திற்கு ஒரு சிலைக் கோவிலைத் தன் தலைநகரில் நிறுவிக்கொள்வான். அதற்கு பதிற் செய்கையாக தோற்ற நாட்டு மக்கள் ரோம அரசனைத் தங்கள் தெய்வங்களில் ஒன்றாக ஏற்றுக் கொண்டு அவனுக்கு தங்கள் நகரில் ஒரு சிலை எடுத்தல் வழக்கம். யூத ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் அவர்களின் தெய்வத்தின் கோவில் என்று தலை நகரில் கோயில் நிறுவ முடியவில்லை. ஏனென்றால் யெகோவாவை அவர்கள் சிலை வைத்து வணங்கவில்லை. அவர்களும் அரசனை வணங்க உடன்பட வில்லை. இதை புரிந்து கொள்ள முடியாத ரோமர்கள் அவர்களைத் தெய்வ நம்பிக்கை இல்லாத நாஸ்தீகர் என்றே கருதி வந்தனர்.

(2) தங்களுடைய இனத்தைத் தவிர மற்றவர்களை யூதர்கள் மனதார வெறுத்தார்கள். அவர்களுக்கு உதவி செய்வது கூடகிடையாது. குடிக்கும்நீர் உள்ளக் கிணற்றுக்குச் செல்லும் வழி என்றாலும் மற்றொரு யூதனுக்கே ஒரு யூதன் வழி சொல்லுவானேயன்றி புறஜாதியானுக்குச் சொல்லமாட்டான். நாங்கள் மாத்திரமே இவ்வுலகத்தில் கடவுளின் ஜனம் என்று கூறிக் கொண்ட யூதர்கள், தங்களுக்காகத் தாங்களே வாழ்ந்ததின் மூலம் இறைவனுடைய நாமத்திற்கு அவகீர்த்தியைக் கொண்டு வந்தனர். மற்றவர்களின் வெறுப்பையும் சம்பாதித்தனர். வ, 25-29 இப்பகுதியில் பவுல் யூதருடைய அடிப்படையான தகுதியைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார். விருத்தசேதனம் யூதனின் உடலில் மாறாத

அடையாளமாக இருந்து அவன் யூதன் என்பதை நிலை நிறுத்தியது. பவுலடியாரின் நாட்களில் சில வைராக்கியமான யூதக்கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் புறஜாதிகளும் விருத்தசேதனம் செய்து கொள்ளவேண்டும் என வற்புறுத்தி வந்தனர். அந்த அடையாளத்திற்கு அத்துணை மதிப்பு கொடுத்னர் (கலா. 6: 12, 13). பவுலடியாரோ விருத்தசேதனம் தன்னில் தான் நன்மை பயப்பது இல்லை; நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவிட்டால் அவ்வடையாளம் இருந்தும் இல்லாதது போல் ஆகிவிடுகிறது எனக் கூறுகிறார். இதை வாசிக்கும் எந்த யூதனும் அதிர்ச்சியும் கோபமும் அடைவான். ஆனால் யூதமக்களில் யாரேனும் நியாயப் பிரமாணத்தின் எல்லா கற்பனைகளையும் முழுவதுமாக நிறைவேற்றியிருக்கிறார் என்று பவுல் கூறவில்லை. ஒரு புறஜாதியான் நிறைவேற்றினால் அவன் அதே போல் நிறைவேற்றின யூதனுக்கு ஒப்பாவான் என தனது கருத்தை விளங்க விவாதிக்கிறார் வ. 29. " ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்த சேதனமே விருத்தசேனம்." கடவுளின் சொந்த ஜாதியும் சம்பத்துமாய் இருப்பது உள்ளத்தில் உள்ள நற்பண்பின் மூலமாகவேயாகும். தீர்க்கரும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார் (உபா. 10:16 எரே 4:4).

புகழ்ச்சி என்னும் தமிழ் சொல்லுக்கு உள்ள எபிரேய சொல் "யூதா!" என்பதாகும் (ஆகி 29:35). யூதன் என்றால் புகழப்படுபவன் (ஆதி. 49 : 8) என்பது பொருள். புகழ்ச்சி பெயரிலும், பிறப்பிலும் அல்ல, தேவனால் மாத்திரமே உண்டாகிறது என பவுல் மறைமுகமாகக் கூறுகிறார்.

3: 1-8 யூதரின் எதிர் கேள்விகள்

யூதர்கள் தங்களைப் பற்றி பெருமையாக எண்ணியிருந்த புறம்பான காரியங்கள் தகர்க்கப்பட்டுவிட்டன.

இக்கேள்வி,பதில் பகுதியை தெளிவாகப்புரிந்து கொள்ள அதை எடுத்து, எழுதி, படிப்பது அவசியம். கேள்வி கேட்கும் ஒரு யூதனைப் பவுல் கற்பனை செய்து கொள்கிறார். அவருடைய கற்பனைக் கேள்விகளுக்கு பதில் சொல்கிறார். உண்மையில் கேள்வி கேட்பவரும் அவரே; பதில் சொல்பவரும் அவரே.

கேள்வி கேட்பவர்:— யூதனாகப் பிறந்து விருத்த சேதனம் பெற்றிருப்பதால் என்ன நன்மை உண்டு ? (வ. 1)

பவுல் :— ஏராளமான நன்மைகள் உண்டு. ஒரு உதாரணம் :— தேவனுடைய பிரமாணங்களை நீவீர் நேரடியாக பெற்றுள்ளது ஒரு சிறந்த மேன்மை (வ. 2)

கேள்விகேட்பவர் :— யூதர்கள் விசேஷித்த மேன்மை பெற்றவர் எனக் கூறுகிறீரே. அப்படியானால் அவர்களில் சிலர் விசுவாசியாமல் போனால் தான் என்ன? சிலருடைய அவிசுவாசத்திற்காகதேவன் தனது உடன்படிக்கைக்கு உண்மையாய் இருப்பதை மீறி அவர்களைத் தண்டிக்க வேண்டுமா? இது அவர் நீதியை அவமாக்குமே(வ, 3).

பவுல் :— அப்படி அல்ல. அவர் பட்சபாதம் உள்ளவர் அல்லவே. கற்பனைகளை மீறுகிறவர்களை அவர் தண்டிப்பதால் தமது நீதியை விளங்கச் செய்கிறார் (வ. 4).

கேள்வி கேட்பவர் :— அப்படியா? நான் மீறினால் அப்பாவம் தேவன் தமது உண்மையையும், நீதியையும் நிலை நிறுத்தும் வாய்ப்பாக அல்லவோ அமைந்து விடுகிறது. என் பாவம் எத்துணை உயர்ந்த செயல்! அது இறைவனின் வாய்மையை விளங்கச் செய்கிறது. நான் செய்த தீமை நன்மையையே வளர்த்துள்ளது. இறைவனின் நீதி விளங்கும்படியாக நாம் பாவம் செய்திருந்தால் எனக்கு ஏன் ஆக்கினைத் தீர்ப்பிட வேண்டும்?

பவுல் :— இது ஒரு சரியான விவாதம் அல்ல. நன்மை விளைவதற்காக தீமை செய்தல் முறையான செய்கை அல்ல. அப்படிச் சொல்லுகிறவர்கள் மேல் ஆக்கினை வரும்.

இவ்விதமாகக் கூறி பவுல் கேள்வி பதில் பகுதியை முடிக்கிறார். இவ்விவாதம் முற்று பெற்றது என்றோ பவுல் எல்லா கேள்விகளுக்கும் முழுமையான பதில் கூறி விட்டார் என்றோ கூற இயலாது. இதில் கூறப்பட்டுள்ளக் கருத்துக்களின் தொடர்ச்சியை 9 முதல் 11 அதிகாரங்களில் விரிவாகக் காணலாம்.

3 : 9– 20 யூதரின் உண்மை நிலை வெளியாக்கப் படல்

இப் பகுதியையும் முந்தின பகுதியில் கேட்ட அதே கேள்வியுடன் ஆரம்பிக்கிறார். யூதர்கள் புறஜாதியாரை விட விசேஷித்தவர்களா? (வ. 3 : 1 ; 3 : 9) பதில் முந்தின பகுதியில் 'ஆம்' எனக் கொடுக்கப்பட்டது. (3 : 2) இப்பொழுதோ "எவ்வளவேனும் விசேஷித்தவர்கள் இல்லை" எனக் கூறப்படுகிறது (3 : 9) தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல. யாவரும் பாவம் செய்துள்ளனர் என்னும் உண்மையை பழைய ஒப்பந்த மறையின் மேற்கோள் காட்டி பவுலடியார் வலியுறுத்துகிறார்.

வ. 10-12 — சங். 14 : 1-3 ; 53 : 2-3
வ. 13 — சங். 5 : 9; 140 : 3
வ. 14 — சங். 10 : 7
வ. 15-17 — ஏசா. 59 : 7, 8
வ. 18 — சங். 36 : 1

வசனங்களை வரிசையாக, கோர்வையாக அடுக்கியுள்ளார். பெரும்பாலும் பழைய ஒப்பந்த மறையின் கிரேக்க மொழி பெயர்ப்பினின்றே அவர் மேற்கோள் காட்டியுள்ளார். இவ்வசனங்கள் யூதருடைய பாவ நிலைமையையே

விளக்குகின்றன எனப் பவுல் வாதாடுகின்றார். ஏனெனில் "நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறது" எனப் பவுல் கூறுகிறார்.

வேத பகுதிகளின் ஆதாரத்தோடு, பவுல், யூதர்களும் புற ஜாதியாரைப் போலப் பாவம் செய்துள்ளனர்; எனவே யூதனாக இருந்தாலும் புற ஜாதியானாலும் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடைந்தே தீர வேண்டும் என நிலை நாட்டுகிறார்.

விசுவாசத்தினால் நீதிமான் எனத் தீர்ப்பு வழங்கப் பெறல் (3 : 21- 4 : 25)

பவுலடியார் தான் சொல்ல வந்த செய்திக்கு முகவுரையான காரியங்களைச் சொல்லி முடித்து விட்டார். இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்கு புறம்பாக இவ்வுலகில் பாவமும் அதனால் விளைந்த இறைவனின் சீற்றமுமே செயல் பட்டு வருகின்றன. நாம் ஏற்கனவே பார்த்தது போல கடவுளின் சினம் வெளியாகிக் கொண்டிருக்கிறது. மனிதனை பாவத்தினின்றும் சினத்தினின்றும் விடுதலை செய்யும் கடவுளின் நீதியைப் பற்றி பவுலடியார் 1 : 17 இல் சுருக்கமாகக் குறிப்பிட்டார். இனிமேல் விரிவாகக் கூறப்போகிறார். புறஜாதி உலகிற்கு கடவுளைப்பற்றிய அறிவு இயற்கையின் பிரமாணமாய் வெளிப்பட்டது. அவர்கள் அப்பிரமாணத்தை மீறினார்கள். எனவே மற்றொரு வெளிப்பாடு தேவையாக உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் நீதி விசுவாசத்தினால் விசுவாசத்திற்கென்று வெளிப்படுகிறது. பாவத்திற்கும் ஆக்கினைத் தீர்ப்புக்கும் ஒப்படைக்கப்பட்ட உலகில் விசுவாசத்தினால் பாவியை நீதிமானாக்குவதில் இறைவனின் நீதி விளங்குகிறது.

3 : 21–26 கிறிஸ்துவின் இரத்தம் நீதிமானாக்குகிறது

நியாப்பிரமாணத்திற்கு புறம்பாக இறைவனின் நீதி வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. விசுவாசக்கிற யாவருக்கும் அது வாழ்க்கையின் அனுபவமாகும். நியாயப்பிரமாணத்தை நாம் வெறும் சட்டதிட்டங்கள் என்ற கண்ணோட்டத்தோடு நோக்கினால் தேவநீதி அதில் அடங்காது. ஆனால் பழையஏற்பாடு முழுவதுமே தேவன் தம்மைப்பற்றியும் தனது தன்மை பற்றியும் வெளியிடும் உயர்ந்த வழி முறையாக நாம் ஏற்றுக் கொண்டால் அதன் பிரமாணமும் தீர்க்கரும் இறைவனின் நீதியைப்பற்றிச் சாட்சியிடுவதைக்காண இயலும். இதனை இனம் கண்டு கொண்டதால் தான் பவுலடியார் அடிக்கடி தனது கருத்துக்களை உறுதிப்படுத்த பழைய ஏற்பாட்டு மேற்கோள்களை எடுத்தாளுகிறார். அந்த நாட்களிலுள்ள யூத மதத்தலைவர்களும் குறிப்பாக பரிசேயரும் பழைய ஒப்பந்த மறை சட்ட திட்டங்களே எனக் கருதி அதை நிறைவேற்றுவதற்காகப் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருந்தனர். இயேசுக் கிறிஸ்துவோ பழைய ஏற்பாடு கடவுளின் வெளிப்பாடு எனப் போதித்தார். தீர்க்கரின் பணியின் தொடர்ச்சியாகவே தன் பணியைக் கருதினார். வ. 23 : மனிதன் கடவுளின் சாயலில் கடவுளோடு தொடர்பு கொள்ளும் ஆற்றல் உடையவனாக படைக்கப்பட்டிருக்கிறான். அவரைப்போல் வாழத் தவறியவன் மகிமையை இழந்து போன மனிதன் எனலாம். அதுவே பாவநிலைமை.

இப்பகுதியில் பவுல் சில முக்கியமான பொருளாழம் உள்ள சொற்களை உபயோகிக்கிறார் (1) **நீதிமான்களாக்கப்படுதல் :** இச் சொல்லின் அடிப்படை கிரேக்கச்சொல்லில் "சரியானது என்று தீர்ப்பு செய்தல்" "நேர்மையாக நடத்துதல்" "நிரபாராதி என்று விடுதலை செய்தல்" போன்ற கருத்துக்கள் அடங்கியுள்ளன. கிரேக்கச்

சொல்லுக்கு அடிப்படையாக உள்ள எபிரேய சொல் குற்றம் சாட்டப்பட்டவனுடைய நியாயம் நிலைநிறுத்தப்படல் (vindi-cation) எனப் பொருள் பெறும். எல்லோரும் பாவம் செய்துள்ளனர் என ; பவுல் கூறியிருக்கிறார். அப்படியானால் பாவிகளை நிரபராதி என்று எவ்விதம் தீர்ப்புச் சொல்ல இயலும்? இறைவன் அப்படிப்பட்டவர்களை வெறுத்தலே தகுதி. அவரோ அன்பு பாராட்டுகிறார். இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்த போது ஆயக்காரரிடத்தும் பாவிகளிடத்தும்அன்புபாராட்டிவந்தார் எனக் காண்கிறோம். எனவே கடவுள் ஒருவனை நீதிமான் எனத்தீர்ப்பிடல் சட்டதிட்டங்களை அடுத்த காரியம் அல்ல. ஒருவகையாக இதை சட்டத்திற்குட்பட்டது எனவும் கூறலாம் குற்றவாளி ஒருவனுக்கு தன் சார்பில் சொல்வதற்கு எந்த நியாயமும் இல்லை என்றும் நீதிபதியினிடம் இரக்கத்திற்காக அபயமிடுகிறான். அந்த நீதிபதி அவனுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்யலாம். அது சட்ட ஒழுங்கு முறைக்கு உட்பட்டது. தங்கள் பாவங்களைப் பற்றிய குற்ற உணர்வால் பலர் கடவுளிடம் வரத்தயங்குகிறார்கள். எந்த ஆலய ஆராதனைக்கோ அருட்செய்தி கூட்டங்களுக்கோ வரமறுக்கிறார்கள். ஒருவிதக்கடூரமானபார்வையும், ஏற்றுக்கொண்டு நட்பு பாராட்ட மறுக்கும் 'வறட்டுத்தூய்மையுமே' இயேசுவின் அடியாரிடம் மிகுந்திருப்பதைக் காண்கின்றார்கள். ''என்னிடம் வரும் பாவியை நான் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை'' என்னும் கடவுளின் நற்செய்தியை அறிந்து கொண்ட எவரும் தம் குற்ற உணர்வினின்று விடுபட்டு தைரியமாக கடவுளை வந்து அடையலாம்.

(2) கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பு (emancipation). மீட்பு என்னும் சொல்லுக்கு அடிப்படையாக உபயோகப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் அடிமைகளையும், போர்க்கைதிகளையும் விடுதலை செய்வதைக் குறிக்கும்.

பல சமயங்களில் அடிமைகள் மீட்பின் பணம் செலுத்தி விடுவிக்கப்பட்டனர் (ransom). ஆனால் பணம் செலுத்தி விடுவிக்கப்படுதல் என்னும் எண்ணம் இச்சொல்லில் அதிகம் இல்லை. இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தும் பின் பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்தும் "மீட்பு பெற்றனர்".

(3) **கிருபாதார பலி :** இச் சொல் அழகான தமிழில் அமைந்துள்ளது; இதன் கருத்து கடவுள் அன்பின் செய்கை மூலமாக பாவங்களை ரத்து செய்து விடுகிறார் (an act by which guilt is annuled). பழைய ஒப்பந்த மறையில் பாவத்தின் சாபம் நீங்க பலி முறைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இறைமக்களும் பணி விடை செய்யும் ஆசாரியர்களும் தூய்மை அடைய திட்டமான ஒழுங்குகள் சொல்லப்பட்டுள்ளன. அந்த ஒழுங்கு முறைகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் ஆண்டவரே. குறித்த காலத்தில் தமது ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே பாவம் போக்கும் பலியாக உலகிற்கு அனுப்பினார்.

(4) **இரத்தம் :** பலி செலுத்துவதின் மூலம் பாவ நிவிர்த்தி உண்டாகும் என்பதாகப் பார்த்தோம். குறிப்பாக பலி ஆடோ, மாடோ இரத்தம் சிந்தவேண்டும். பலியின் ரத்தத்தைப்பற்றி இங்கும் பவுல் குறிப்பிடுகின்றார். இரத்தமே உயிர் (லேவி. 17:11 ; உபா 12 : 23) பழைய ஏற்பாட்டின் பலி முறையில் இரத்தம் செலுத்துதல் முக்கிய இடம் வகிக்கிறது.

(3 : 27–3) விசுவாசத்தினால் பெறுகிறோம்

பெருமை பாராட்டல் நீக்கப்பட்டது. கிருபையின் மூலமாய் விசுவாசத்தினால் மீட்பு உண்டாகிறது. இங்கு பவுல் குறிப்பிடுவது மதப் பெருமை. அல்லது "தேவனைக்குறித்து மேன்மை பாராட்டல்" (2 : 17). தேவாலய

யத்திற்கு ஜெபம் பண்ணும் படியாக வந்த பரிசேயனுடைய சொற்களில் இப் பெருமை தொனிப்பதைக் காண்கிறோம் (லூக் 18 : 10 14) பவுலடியாருக்கு இப்பெருமை அனுபவரீதியாக விளங்கும். தனது ரோமக்குடியுரிமைப் பற்றியும், பென்யமீன் கோத்திரத்தில் உதித்த இஸ்ரவேலன் என்பதைப்பற்றியும் பெருமை உடையவராயிருந்தார். யூத சமுதாயத்தை அன்றைய கிரேக்கர் ஏளனமாக மதித்தனர். இதனைப் பொறுக்கமாட்டாத யூதர்கள் தங்களுக்குள் தாங்களாகவே வாழ்ந்து கொண்டு தங்களது மத அனுசாரங்களைப் பற்றிப் பெருமை பாராட்டிக்கொண்டார்கள். பவுல் மற்றெல்லாரையும் விட அதிகமாக ஆசாரங்களைக்கைக்கொண்டார். (பிலி. 3:16). சாமானியனாயிருக்க அவர் மனம் இடம் தராது. மற்றெல்லா ஊழியரும் தாங்கள் ஊழியம் செய்து வந்த சபையினரால் தாங்கப்பட்டு வந்தனர். பவுல் அவ்விதமாக சபையினரின் காணிக்கையில் ஜீவியம் செய்யவில்லை. கூடாரம் செய்யும் தொழில் செய்து அதன் வருமானத்தில் வாழ்கை நடத்தினார் (I கொரி. 9 : 3-15). பவுல் இன்னும் பரிசேயப் பெருமையை முற்றிலும் விடவில்லையோ என்று சந்தேகம் கொள்ளச்செய்கிறது. மேன்மை பாராட்டல், முட்டாள் தனமான செயல் எனப் பவுல் உணர்ந்திருந்தார் (2 கொரி. 11 : 21-30, 12 : 11) " எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் ......குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி. 3 ; 4-11). "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறென்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக" (கலா. 6 : 14) மேற்கூறிய பவுலின் வார்த்தைகளே பவுல் மேன்மை பாராட்டலை அறவே அழித்திருந்தார் என நமக்கு அறிவிக்கின்றன. ஒருவன் முயற்சி எடுத்து செய்கின்ற நற்செய்ல்களில் தான் ஒருவனுடைய மத வாழ்க்கை அடங்

கியிருந்தது என்றால் அவன் தன்னுடைய அருஞ்செயல் களை குறித்து பெருமையாக எண்ணுவான். கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தில் கிறிஸ்தவ வாழ்க்கை சார்ந்து நிற்பதால் மேன்மை பாராட்டல் நீக்கப்பட்டது (3 : 27).

3 : 29 தேவன் யூதருக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் கடவுளாயிருக்கிறார். எனவே மனிதர் எல்லோரையும் இவர் சமமாய் நடத்துகிறான். விசுவாசிக்கிற எவனும் கடவுளின் கிருபையினால் நீதிமானாக்கப் படுவான்.

4 : 1-25 விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் :

கடவுள் தெரிந்தெடுத்த ஜனத்தின் முற்பிதாவாகிய ஆபிரகாமுடைய வாழ்க்கை வரலாற்றை மேற்கோள் காட்டி விசுவாசத்தின் மூலமாகவே நீதிமானாக்கப்பட முடியும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். அக்கால யூத ரபிகள் கைக்கொண்ட முறையையே விவாதத்திற்கு உபயோகிக்கிறார். பழைய ஏற்பாட்டின் மொத்தக் கருத்தை நாம் ஆராய்வோமானால் அங்கே இறைவனோடு மனிதன் உறவு கொண்டு வாழவேண்டும் என்ற எண்ணம் வலியுறுத்தப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ள முடியும். சட்டதிட்டங்களை நிறைவேற்றுதலே யூத மார்க்கம் என்று பரிசேயர் கூறியது இடைக்காலத்தில் நிகழ்ந்த கருத்து மாற்றமேயாகும். ஆபிரகாம் தலை சிறந்த பக்திமான் என்று எந்த பரிசேயனும் ஒத்துக் கொள்வான். அந்த ஆபிரகாம் நியாயப்பிரமாணத்தினால் அல்ல; விசுவாசத்தினாலே தான் வாழ்ந்தான். ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தமும் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டதல்ல. மோசேயும், அவன் மூலமாக நியாயப்பிரமாணமும் 430 ஆண்டுகளுக்குப்பின் தோன்றின (கலா, 4 : 15-18). பின் தோன்றியவை முன்னரே அளிக்கப்பட்ட இறைவாக்கை மாற்ற முடியாது. இறைவனிடம் ஆபிரகாம் கொண்டுள்ள அன்பும், பற்றும்,

மிக ஆழமானதும் எளிமையானதுமாயுள்ளது. சட்ட திட்டங்களை மாத்திரமே நிறைவேற்ற முயற்சிக்கின்ற பக்தி வாழ்க்கை மகிழ்ச்சியற்றதும் வறண்டதுமாக இருக்கும். 'இறைவனின் நண்பனாகிய ஆபிரகாம்'' (ஏசா. 41 : 8) அவர் அழைத்தவுடன் அழைப்புக்கு இணங்கி வனாந்தரத்தில் சுற்றித்திரிந்தார். தனக்குப் பிள்ளை இல்லாத காலத்தும் தன் சந்ததியை பற்றி ஆண்டவர் கூறியதை அப்படியே ஏற்றுக்கொண்டான். சோதோமை ஆண்டவர் அழியாமலிருக்க வேண்டுமென மிகுந்த மனத்தாழ்மையோடு வேண்டினான். இறைவன் ஆணையிட்டபோது தனது ஒரே குமாரன் என்றும் பாராமல் ஈசாக்கை பலியிடத்துணிந்தான். ஆபிரகாமின் விசுவாச வாழ்க்கைப் பவுலைக் கவர்ந்ததில் வியப் பொன்றுமில்லை.

ஆபிரகாம் நியாயப்பிரமாணம் அளிக்கப்படும் முன் னரே நியாயப்பிரமாணத்தின் எல்லா விதிமுறைகளையும் தானாகவே நிறைவேற்றி வந்தான் என்று யூதரபிகள் கூறி வந்தனர். மத வாழ்க்கையில் விசுவாசத்திற்கு உள்ள முக்கியத்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொண் டாலும், அந்த விசுவாசம் நியாயப்பிரமாணத்தின் கற்பனைகளைப் பூரணமாய் நிறைவேற்றுவதிலே வெளிப் பட வேண்டும் எனக் கருதினர். பென்சிரா (Ben Sirach) என்னும் யூத எழுத்தாளர், "ஆபிரகாம் உன்னதமான தேவனுடைய கற்பனைகளை நிறைவேற்றிக்கொண்டி ருந்தபடியால் அவரோடு உடன்படிக்கைச் செய்யும்படி ஏற்றுக்கொள்ளப்பட்டான். அதனால் தேவன் உலகின் நாடுகள் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று அவ னுக்கு ஆணையிட்டு வாக்குக் கொடுத்தார்'' எனக் கூறியுள்ளார்.

வ 3. பவுல் இக் கருத்தை 'வேத வாக்கியத்தின் ஆதாரத்தோடு மறுக்கிறார். (ஆதி 15:6) நீதி உடைய வன் என்று சொல்லாமல நீதியாக எண்ணப்பட்டது

என்று கூறுவதினுல் அது சுயநீதி அல்ல என்று தெரிந்து கொள்ளலாம்.

வ 7, 8. 32-ஆம் சங்கீதத்தின் முதல் இரண்டு வசனங்களை மேற்கோள் காட்டுகிறுர். பாவமே இல்லாதவன் பாக்கியவான் என்று கூருமல், பாவமிருந்தும் அவை மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான் என்று அச் சங்கீத ஆசிரியர் கூறுவதைக் காண்கிறேம்.

வ. 9-12. ஒருவேளை யூதர்கள், ஆபிரகாம் நியாயப் பிரமாணத்தைப் பெற்றிராவிட்டாலும் தன் சரீரத்தில் விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றிருந்ததால்தான் நீதிமாளுக ஏற்றுக்கொள்ளப்பட்டான் என வாதிடலாம். அதனையும் பவுல் தெளிவு செய்கிறுர். விருத்தசேதனம் செய்யும் முன்னமே ஆபிரகாம் நீதிமான் என விசுவாசத்தின் காரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டான். அவனது விசுவாசத்தின் காரணமாகப் பின்புதான் விருத்தசேதனம் என்னும் அடையாளம் கொடுக்கப்பட்டது. ஆகவே யூதராயினும், புறஜாதியாராயினும் விசுவாசிக்கிற யாவருக்கும் அவன் தகப்பனுகிவிட்டான்.

வ. 15. நியாயப்பிரமாணம் குற்ற உனர்வை உண்டு பண்ணுகிறது. மேலும் இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்ற கட்டளைகள் கொடுக்கப்படுவதால் விலக்கப்பட்டதை செய்ய வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது. இதைப் பவுலடியார் 7ஆம் அதிகாரத்தில் விரிவாகக் கூறுகிறுர்.

வ. 16, 17 ஆபிரகாமின் சந்ததியாராக எல்லா மனிதரும் இடம் பெற்று அவனுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைச் சுதந்தரித்துக்கொள்ள வழி திறக்கப்பட்டாயிற்று. அது யூதர் என்ற ஒரு இனத்திற்கு மட்டுமல்ல, எந்த இனத்தாளுக இருந்தாலும் அவன் விசுவாசித்தால்

கிருபையினாலே நீதிமான் என்றத் தீர்ப்பை கடவுளிடம் அடைவான். ஆபிரகாமுக்கு ஆண்டவர் வாக்குக் கொடுக்கும்போதும் உன்னை ஒரு இனத்திற்கு தகப்பனாக்கினேன் என்று கூறாமல் "நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்" (ஆதி 17:4) என்று எல்லா மனித இனத்தவரையும் சேர்த்தே சொல்கிறார்.

வ. 18-24. ஆபிரகாம் இறைவனின் வாக்குப் பெற்ற போது வயது சென்றவனாயிருந்தான். இனிமேல் பிள்ளை பெறுவோம் என்ற நம்பிக்கை அற்றுப்போன பருவம். அந்நேரத்திலும் ஆண்டவரின் மேல் விசுவாசம் வைத்தான். செத்துப்போன தன் சரீரத்தையும், செத்துப் போன சாராளின் கர்ப்பத்தையும் ஆண்டவர் உயிரோடெழுப்புவார் என்று ஆபிரகாம் நிச்சயமாய் நம்பினான். நாம் மரித்த இயேசு கிறிஸ்துவை உயிரோடெழுப்பின தேவன் மேல் விசுவாசம் வைத்துள்ளோம்.

இவ்வதிகாரம் யூதர்களுடைய சந்தேகங்களையும் எதிர் கேள்விகளையும் சந்திப்பதற்காக எழுதப்பட்டது. இது முடிந்தபின் அடுத்த அதிகாரத்தில் பவுலடியார் மீண்டும் தான் விட்ட இடத்திலிருந்து எடுத்துச்சொல்ல ஆரம்பிக்கிறார்.

கிறிஸ்துவுக்குள்ளான புது வாழ்வு (5 : 1- 8 : 39)

இது தான் இந்த நிருபத்தில் சிறப்பான பாகம். இது வரையிலும் நீதிமான் என்று கொள்ளப்பட வேண்டிய அவசியத்தையும், இயேசு கிறிஸ்துவில் கடவுள் நிறைவேற்றியுள்ள மீட்பின் செயலை விசுவாசத்தின் மூலமாய் ஏற்றுக் கொள்ளுதலைப் பற்றியும் பார்த்தோம். நீதிமான் என்றுக் கொள்ளப்படுதல் மீட்பிற்குரிய வழியாகும். மீட்பின் நிலைமையில் கடவுளோடும், மனிதரோடும் புது உறவுகள் ஏற்படுகின்றன. புது சமூதாயம் அமைக்கப்படுகிறது. மீட்பையும், நீதிமான் என்று

தீர்ப்புப் பெறுவதையும் தனித்தனியே பிரிக்க இயலாது. மன்னிப்பு இந்த அனுபவத்தின் மையப்பாகமாகும். உண்மையில் மன்னிப்பு என்னும்சொல் நமக்கு எளிதில் விளங்கக்கூடியது. "நீதிமான் என்று தீர்ப்புப் பெறல்" என்ற சொற்றொடர் உடனே விளங்கிக் கொள்ளக் கூடியது அல்ல. அது சட்டத்திற்கடுத்த சொல் (legal term). மன்னிப்பு என்னும் சொல் நம் அனுபவத்தில் அறிந்து கொள்ளக்கூடியது. ஆனால் பவுலடியாரின் சொல் நீதிமானாகக் கொள்ளப்படுதல் என்பதேயாகும். இப்பகுதியிலுள்ள நான்கு அதிகாரங்களையும் பொது வான பொருள் முறைக்குட்படுத்தி பார்க்க இயலாது. ஒவ்வொரு கருத்துக்கும் சிறு சிறு பகுதியாக பவுல் எழுதியுள்ளார்.

ரு : 1 - 11 பாவிக்காக உயிரீந்து அவனைத் தம்மோடு ஒப்புரவாக்கின இறைவனின் அன்பு

இப் பகுதி 8 : 39 ல் முடிவடைகிறது. அது வரைக்குமுள்ள முக்கியக் கருத்துக்களை இந்த 11 வசனங்கள் சுருக்கமாகக் கூறுகின்றன. 4 : 25 ல் " நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக " என பவுல் கூறினார். இப் பகுதியின் ஆரம்ப வசனத்திலேயே " நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால் " என்று பவுல் எழுதுகிறார். எனவே இந்த அதிகாரத்திலிருந்து நீதிமான்களாக்கும் செயல் நிகழ்ந்து விட்டது என்றும், அதன் பொருளையும் தன்மையையும் ஆராய்கிறோம் என்றும் கொள்ளலாம். இறைவனுடைய வல்லமையிலும் நற்பண்பிலும் குழந்தையைப் போன்ற முழுமையான, எளிமையான, நம்பிக்கை வைத்தலே விசுவாசம். " தேவனிடத்தில் சமாதானம் ". வ 1 என்பது புயல் நீங்கி ஏற்படுகின்ற அமைதி போன்றது. நாம் மற்றவர்களோடும் படைக்கப்பட்ட உலகத்தோடும் கொள்ளுகின்ற உறவுகளிலே புதியதோர் நிலையை ஏற்படுகிறது.

வ. 10 முதல் ஒப்புரவாகுதல் என்னும் சொல்லால் பவுலடியார் இதை அழைக்கிறார். கடவுளோடு ஒப்புரவாகியிருப்பதால் அவர் படைத்து ஆளுகின்ற சூழ்நிலையோடும் நாம் சமாதானம் பெறுகின்றோம். உள்ளத்தில் ஓர் சலனமற்ற அமைதி நிலவுகிறது. பழைய ஏற்பாட்டில் இவ்வுண்மையைப் பற்றி வாசிக்கிறோம் (சங் 29 : 11; 85 : 8, 10; 119:165). ஆனால் இச்சமாதானம் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் கிறிஸ்தவ சமுதாயத்தில் புதுமை மங்காத அனுபவமாயிருக்கிறது. இவ்வனுபவத்தை "எல்லா அறிவாற்றலுக்கும் அப்பாலுள்ள தெய்வ சமாதானம்" (பிலி. 4 : 7) என அழைக்கிறார்.

வ 2. தேவ மகிமையை பாவத்தினால் இழந்த நாம் (3 : 23) இப்போது திட்டமாக அடைவோம் என்னும் நம்பிக்கை பெற்றுள்ளோம். அந்த நம்பிக்கை பெரும் மன எழுச்சியை அளிக்கிறது.

வ. 3, 4. எந்த உபத்திரவத்தினாலும் அவ்வெழுச்சி குன்றிப் போகவில்லை. மகிழ்ச்சியைப் பற்றியும் நம்பிக்கையைப்பற்றியும் எழுதும்போதே பவுல் கிறிஸ்தவ வாழ்வில் திட்டமாக நேர்கின்ற துன்பங்களை நினைவு கூறுகின்றார். (ii கொரி. 11 : 23-28; 12 : 7-10). ஆனால் துன்பம் அவரது மேன்மை பாராட்டலை குறைக்கவில்லை. கிறிஸ்தவ வாழ்விலே மன்னிப்பை அடுத்து துவங்குகின்ற பரிசுத்தமாகுதல் என்னும் நிகழ்ச்சிக்கு இது ஆரம்பம் எனலாம்.

வ. 5 இது ஒரு முக்கிய வசனம். கடவுள் நம்மை மன்னித்து நீதிமான் என ஏற்றுக்கொண்டிருப்பது அவர் நம்மேல் வைத்த அன்பினால். அதே அன்பு நாம் பெற்றுக் கொண்ட பரிசுத்த ஆவியானவர் மூலமாய் நம் உள்ளங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது எனக் கூறுகிறார். ஆவியானவரின் சிறப்பான ஈவு அன்பே.

வ. 6-8 இறை அன்பு மனிதனின் அன்பை விட உயர்வானது. மனிதன் சில சந்தர்ப்பங்களில் பிறருக்காக மரிக்கலாம். நேர்மையான மனிதன் மற்றவர்களிடமும் நேர்மையை எதிர்பார்க்கிறான். எனவே மற்றவர்களின் நன் மதிப்பைப் பெற்றாலும் அவர்களின் பாசத்தைப் பெறுவதில்லை. நல்லவனுக்காக ஒரு வேளை மற்றவன் மரிக்கலாம். கிறிஸ்துவோ நாம் இன்னும் பாவிகளாயிருக்கையில் நமக்காக மரித்தார். இது தான் இறையன்பு. இவ்வித அன்புதான் ஆவியானவர் மூலம் ஊற்றப்படுகிறது. குற்றம் தேடித்திரிதலும், பிறர்மனம் நோக ஏளனமாகப்பேசி கண்டனம் செய்தலும் ஆவியானவரைப் பெற்றிருப்பவனிடம் காணப்படாது.

கிறிதுஸ்வின் மரணம் பிதாவின் கோபத்துக்கும் குமாரனின் இரக்கத்துக்கும் நிகழ்ந்த போராட்டத்தின் வெளிப்பாடு அல்ல. கிறிஸ்துவின் சிலுவை தேவனின் அநாதி தீர்மானத்தின்படியும் எல்லையற்ற அவரது அன்பினாலும் நிகழ்ந்த நிகழ்ச்சி.

வ. 9-11 ஒப்புரவாகுதல் தொடர்ந்து நடைபெறும். ஒரு நிகழ்ச்சி தொகுப்பில் ஆரம்ப நிகழ்ச்சி ஆரம்பித்து விட்டால் நிகழ்ச்சிகள் திட்டமாக தொடர்ந்து நடைபெறும். நாம் பாவிகளாய் இறைவனுக்கு விரோதம் பாராட்டுபவர்களாய் இருக்கும்போதே, அவரின் ஒப்புரவாக்கும் அன்பு, நம்மை நீதிமான்கள் என ஏற்றுக்கொண்டதானால், இப்போது அவரது கிருபையினால் நாம் அவரோடு ஒப்புரவாகியிருக்கிறதால், இறைவனின் சினத்திற்கு நாம் நீங்கலாகி மீட்கப்படுவோம் என்பதில் ஐயமேயில்லை. இறைவனின் சினம் தானாகவே இயங்கிக் கொண்டிருக்கும் அமைப்பு என்பதாக முன்னர் கூறினோம். (1:18) கிறிஸ்துவின் மரணம் என்னும் நிகழ்ந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சி அத்துணை நன்மை பயக்கு

மென்ருல், தொடர்ந்து உள்ள அவரது ஜீவன் எத்துணை வல்லமையுள்ளதாயிருக்கும்,

வ. 11 எனவே நாம் மேன்மைபாராட்டுவோம்.

5 : 12-21 ஆதாமின் மீறுதலினுல் மரணம், கிறிஸ்துவில் நித்திய ஜீவன்.

அன்று பவுலின் பிரசங்கம் கேட்டவர்களுக்கும், இன்றும் பலருக்கும் ஒரு சந்தேகம் எழுகின்றது. 'கிறிஸ்து நிறைவேற்றியுள்ளவைகளினுல் நாம் மீட்கப்படுகிருேம்' எனக் கூறுகிறீர்களே, அது எப்படியாகும்? உண்மையில் அவர் நல்லவர், தனக்காக வாழாமல் பிறர்க்காக வாழ்ந்து உயிரீந்த செம்மல். அதன் மூலமாக நமக்கு ஒரு நல்ல முன்மாதிரி வைத்துள்ளார் என்று தான் சொல்லலாம். முன்னொரு நாள் ஒருவர் பாவத்தை வென்றதும், நிறைவான வாழ்க்கை வாழ்ந்ததும் மற்றவர்களுக்கு எப்படி பயனுடையதாகும்? இதுதான் பலருடைய கேள்வி.

பவுல் அந்நாட்களில் உள்ள யூதரபிகளுடைய வாதத்தை அப்படியே ஏற்றுக்கொள்கிருர். ஆதாமின் மீறுதலினுல் எல்லா மனிதரும் பாவத்திற்குட்பட்டார்கள். அதேவிதமாக கிறிஸ்துவின் வெற்றியால் யாவரும் நன்மைக்கு நேரே உயர்கிருர்கள். யூத போதகர்களை ஏற்றுக்கொள்ளும் எந்த யூதனும் இதைப் புரிந்து கொள்வான். ஆனுல் மற்றவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்களா?

பவுல் கூறுகின்ற கருத்தை ஆழ்ந்து சிந்தித்தல் அவசியம். மனித இனம் ஒருங்கிணைந்தே நிற்கிறது. (Solidarity of human race). பழைய ஏற்பாட்டில் ஆகான் ஒருவன் மீறினதால் அத்தேசமே போரில்தோற்றது. (யோசுவா 7).

உண்மையில் எந்த மனிதனும் தனித்து நிற்பது இயலாத ஒரு காரியம். மனிதன் தன் பெற்றோரிடமிருந்தும் தான் வாழும் மனித சமுதாயத்திலிருந்தும் தன் வாழ்க்கையின் தன்மையையும் செயல்முறையையும் பெற்றுக்கொள்கிறன். (Heredity and environment affect the nature and activities of man). பவுல் மனித இனம் ஆதாமுக்குள் ஒன்ருக இருக்கிறது என்கிருர். ஒருங்கிணைந்த ஆட்தன்மைக்கு ஆதாம் என்பது பெயராயுள்ளது. (corporate personality), கிறிஸ்துவில் ஒரு புதிய கூட்டு ஆட்தன்மை தோன்றுகிறது. (ரோ. 12:5, 1 கொரி. 12:12) புதிய மனித இனத்தின் உள்ளமைந்த பிரதிநிதியாகவே கிறிஸ்து வாழ்ந்து சகித்து, மரித்தார் எனக் காண்கிறோம். (2 கொரி. 5 : 14-17).

ஆதாமின் கீழ்படியாமை அவனுக்கும் அவன் சந்ததியாராகிய உலக மக்கள் அனைவருக்கும் மரணத்தைக் கொண்டு வந்தது. நியாயப்பிரமாணத்தை அறியாதவர்களும், மோசேயின் காலத்தில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் நாட்களுக்கு முன்னதாக ஜீவித்தவர்களும் பாவம் செய்யத்தான் செய்தார்கள், ஆனல் அவர்களுக்கு நியாயபிரமாண அறிவு இல்லாததினல் நன்மை தீமை இன்னதென்று தெரியவில்லை. எனவே குற்ற உணர்வு இல்லை. ஆதாமோ செய்யக்கூடாது என்று நன்கு அறிந்திருந்தும் அதனை செய்தான்.

வ. 14. எனவே அவனது மீறுதல் பெரியது எனலாம். அறியாமல் செய்பவருடைய மீறுதல் ஆதாமின் மீறுதலைவிட சிறியது. அறிந்து செய்தாலும், அறியாமல் செய்தாலும் இயற்கையில் அமைந்துள்ள இறைவனின் சீற்றம் தானக இயங்கி யாவரையும் மரணத்துக்குள்ளாக ஆட்கொண்டது.

வ. 15-21. மீறுதலினால் மரணம் உலகில் ஆட்சி புரிய ஆரம்பித்தது. கிறிஸ்துவின் பரிபூரண ஜீவன் செயல்பட்டதினால் அனைவருக்கும் நித்திய ஜீவன் உண்டாகியிருக்கிறது. மீறுதலைவிட நீதி உயர்ந்தது. கீழ்ப்படியாமையைவிட கீழ்படிதல் வலிமையானது. பாவத்தைவிட பரிசுத்தம் நிலைத்து நிற்பது. மரணத்தை ஜீவன் விழுங்கியது.

6: 1-14 மரணத்திலும் உயிர்த்தலிலும் கிறிஸ்துவுடன் இணைந்திருத்தல்:

வ. 1. பவுலிடம் அடிக்கடி கேட்கப்பட்ட கேள்வி இது. முன்னர் 3: 7, 8-ல் இதே கேள்வி கேட்கப்பட்டது. கடவுள் நம் இரட்சிப்புக்கு எல்லாவற்றையும் செய்து விட்டார் என்றால், நற்செய்கையினால் அல்ல, கிருபையினால் நீதிமான் என்று தீர்ப்பு பெறுகிறோம் என்றால் நன்மை செய்ய ஏன் முயற்சிக்க வேண்டும்? தீயவர்க்கும், தேவனற்றவர்களுக்கும் கிருபை கிடைக்குமென்றால் பாவத்திற்கு ஏன் எதிர்த்து நிற்க வேண்டும்? பாவம் அதிகம் செய்தால், கிருபை அதிகம் பெருகுமல்லவா? இதுதான் கேள்வி.

இக் கேள்வி கேட்கப்பட்டவுடன் பவுல் தனது திகைப்பை வெளியிடுகிறார். மிக வன்மையாக மறுக்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கையின் தன்மையை நினைவூட்டுகிறார். அது கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட வாழ்க்கை. ஆதாமோடு இணைந்திருந்த மனுக்குடும்பத்திலிருந்து கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட புதுக் குடும்பத்திற்குள்ளாக நாம் பிரவேசித்திருக்கிறோம். முந்தின அதிகாரத்தில் இந்தக் கூட்டு ஆட்தன்மையைப் பற்றி வாசித்தோம். ''எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லோரும் மரித்தார்கள்'' என்னும் உண்மையை நினைவூட்டுகிறார். (2 கொரி. 5 : 14)

ஆதி திருச்சபையில் ஞானஸ்தானம் ஒரு முக்கிய இடம் வகித்தது. ஆரம்ப காலமாக இருந்ததால் பெரியவர்களே கிறிஸ்தவ விசுவாசத்தைக் கேட்டு அறிந்து, ஏற்றுக்கொண்டார்கள். [கிறிஸ்தவ குடும்பங்களில் பிள்ளைகள் பிறந்தவுடன் அப்பிள்ளைகளும் பரிசுத்தமானவைகள் என உணர்ந்து (1 கொரி. 7:14) அவற்றையும் ஞானஸ்நானத்தின் மூலம் ஏற்றுக் கொண்டார்கள்.] ஆரம்பத்தில் அவர்கள் தண்ணீரில் முழுவதுமாக முழுகச் செய்து ஞானஸ்நானம் கொடுத்தார்கள். மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு புதிய வாழ்க்கைக்கு எழும்புவதைத் திருமுழுக்கின் செய்கைகள் உணர்த்தின. இதனை பவுல் நினைவூட்டுகிறார். புதிய மனிதனாகி விட்டான். குழந்தையாக பிறந்திருப்பதுபோல் வாழ்க்கை புதிதாக ஆரம்பமாகி உள்ளது. இவ் வாழ்க்கையில் பாவத்தோடு உறவு வைத்துக் கொள்ள இயலாது. பாவத்திற்கு நாம் மரித்துவிட்டோம்.

"கிறிஸ்துவுக்குள்" (In Christ) என்பது பவுல் அதிகமாக உபயோகிக்கும் சொல். கிறிஸ்துவின் நண்பன், மகன், தொண்டன் என்று பல சொற்கள் நம் உறவு முறையை விவரிக்கலாம். அந்த உறவு நிலைகள் எல்லாம் கிறிஸ்துவிற்கு வெளியே உள்ளவைதான். காற்று மண்டலத்திற்குள் இருந்தால்மாத்திரமே நாம் உயிர்வாழ முடியும். நீரினுள் இருந்தால்மாத்திரம் மீன் உயிர்வாழ இயலும். அவ்விதமே கிறிஸ்தவன் கிறிஸ்துவினுள் இருந்தால்தான் கிறிஸ்தவ வாழ்வு நிலைக்கும். கிறிஸ்துவினுள் நாம் கலந்துவிடுகிறோம். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்"(II கொரி. 5:17). ஒன்றை நாம் கவனித்தல் வேண்டும். இவ்வுலகக் கிறிஸ்தவ வாழ்க்கையில்தான் நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் அனுபவம் பெறுகிறோம். புறமதஸ்தர் சொல்வது என்னவென்றால் 'மரிக்கும்

ஆத்மா பரமாத்மாவினுள் இரண்டற கலந்து சங்கமம் ஆகிவிடுகிறது' பவுல் அவ்விதமாகக் கூறவில்லை. நாம் எதிர்காலத்தில் கிறிஸ்துவினுள் அல்ல, கிறிஸ்துவுடன் இருப்போம். (with Christ) —(1 தெச. 4:17; பிலி. 1:23).

பாவ சரீரம் (வ. 6)

மனிதன் தன் சரீரத்தில் நிறுவப்பெற்றுள்ள பாவத்திற்கு அடிமை வேலை செய்பவனாக இருக்கிறான். தசையும் இரத்தமுமான இயற்கை சரீரத்தை பாவம் தான் வாழ்கின்ற இடமாகத் தெரிந்தெடுத்துள்ளது. இவ்வியற்கை சரீரம் உடைய யாவரையும் பாவம் தன்னுடையோர் என உரிமை பாராட்டுகிறது. கிறிஸ்து மனித அவதாரம் எடுத்தபோது இந்த சரீர உலகினுள் பிரவேசித்தார். பாவும் தனது ஆதிக்க உரிமையை அவர் மீது நிலைநிறுத்த முயற்சித்தது. வேறு வகையில் கூறினால் நாம் எல்லோரும் சோதிக்கப்படுவதுபோல் அவரும் பாவம் செய்யும்படியாகச் சோதிக்கப்பட்டார். அவரோ சோதனைக்குக் கீழடங்கிப் பாவத்தின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல், தேவனுக்குக் கீழடங்கினார். [ஆதாம் தோற்றுப்போன இடத்தில் இரண்டாம் ஆதாம் கிறிஸ்து வெற்றி பெற்றார்.] தேவனுக்கே கீழ்ப்படிந்தது அவரை மரணம் வரை அழைத்துச் சென்றது. அவரோ பாவம் செய்வதைவிட மரிப்பதையே தெரிந்து கொண்டார். (பிலி. 2: 8). ஆகவே அவரது மரணம் சரீர எல்கையினுள் பாவத்தின் தோல்வி. கிறிஸ்துவுடன் மரித்தவனும் கிறிஸ்துவின் வெற்றியில் பங்கு பெறுகிறான். அவனில் பாவம் ஆட்சி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் அவன் பாவத்தின் ஆட்சியை அனுமதித்துவிடலாம். இந்த இயற்கை மரணத்தின் விதிக்குட்பட்ட (வ. 12) சரீரத்தில் பாவம் மீண்டும் ஆளுகை செய்யாமல் இருக்க எச்சரிக்கையாயிருங்கள் என வலியுறுத்துகிறார்.

சரீர உறுப்புகளைத் தேவன் உபயோகிக்கும் ஆயுதங்களாக அவருக்குக் கையளிக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை செயல் புரியும் வாழ்க்கை. ஏதோ உள்ளான ஆத்மாவை மாத்திரம் தேவன் கேட்கிறார் எனச்சிலர் நினைக்கிறார்கள். ஆண்டவர் மனிதனது சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் தான் உபயோகிக்கும் கருவியாக கேட்கிறார். பாவம் சரீரத்தில் எவ்வொரு உறுப்பையும் தான் செயல்படுவதற்கு உபயோகித்துக்கொள்வதை நாம் அறிந்திருக்கிறோம். நாமோ நமது சரீர அவயவங்களை தேவன் உபயோகிக்கும்படியாக கொடுத்து விட வேண்டும். சரீரம் இவ்விதமாக இறைவன் உறையும் திருக்கோவிலாகிறது.

6 : 15-23 அடிமைகள் வாழ்வினின்று ஓர் எடுத்துக் காட்டுமூன் கூறி வருகிற அதேக்கருத்தை நிலை நிறுத்த யிறிதொரு உதாரணத்தைப் பவுல் உபயோகிக்கிறார். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் ஒரு கிறிஸ்தவன் பாவ வாழ்வினின்று நீங்கி புதிய வாழ்க்கை அமைப்பினுள் பிரவேசிக்கிறான். புதிய அவ்வமைப்பில் பாவத்திற்கு இடமில்லை.

அடிமைகள் வாழ்க்கை முறையினின்று இதை விளக்க முற்படுகிறார். இந்த நாட்களில் அடிமை முறையை பொதுவாக நாம் காண்பதில்லை. வேலைக்காரர் நமக்கு இருக்கலாம். அவர்களுக்கும் நாம் கொடுக்கும் சம்பளத்திற்கு ஈடான வகையில் அவர்களது திறமையையும், சரீர உழைப்பையும், நேரத்தையும்நாம் உபயோகித்துக் கொள்கிறோம். மற்ற நேரம் அவனுக்கே உரிமையானது. அவன் அந்நேரத்தில் தாம் விரும்பும் யாருக்கும் எந்த வேலையும் செய்யலாம் அல்லது செய்யாதிருக்கலாம். அடிமை என்றால் அப்படி அல்ல. அடிமைக்கு தன்னைப்பற்றிய எந்த உரிமையும் கிடையாது. முதலாளிக்கே அவனது நேரம், உழைப்பு. திறமை

யாவும் உரியது. வேறு எவர்க்கும் எவ்வித வேலையும் செய்ய அவனுக்கு உரிமை இல்லை.

'பாவம்' 'நீதி' ஆகிய இரண்டு முதலாளிகள் உள்ளனர். ஒருவன் ஒரு முதலாளிக்குத்தான் அடிமையாக வேலை செய்யலாம் (மத். 6 : 24). நீதிக்கு 'அடிமை' என்னும் வார்த்தை கடினமாக தோன்றுவதை பவுல் உணர்ந்தவராக உங்களுக்கு விளங்கும் படியாக இவ்வித சொல்லை உபயோகிக்கிறேன் என உடனே கூறிக்கொள்கிறார்.

(வ. 18, 19). அவர்கள் முன்னே பாவத்திற்கு அடிமை வேலை செய்து, வெட்கப்படக் கூடிய செயல்களை செய்தும் நன்மையானதொரு பலனும் கிடைக்கவில்லை. பாவம் என்னும் முதலாளி அளிக்கும் கூலி 'மரணம்' தான்.

வ. 22. இவ்விடத்தில் நீதியின் வாழ்வு தேவனோடு நேரடியான தொடர்புள்ள வாழ்வு என்பதை நினைவுறுத்த "தேவனுக்கு அடிமைகளானதினால்" என்று சொல்லை மாற்றிக் கொள்கிறார்.

பாவத்திடம் வருந்தியுழைத்து சம்பாதித்த சம்பளம் மரணமே! தேவன் கிருபையாக (உழைப்பினால் உரியது கூலி மாத்திரமே. அதற்கு மேலானது கிருபை வரம். வ, 23 gift) பரிசுத்தமாகுதலையும் "இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் நித்தியமான மெய் வாழ்வையும்" அருளுகிறார்.

7 : 1-6 குடும்ப வாழ்வினின்று ஓர் எடுத்துக்காட்டு

திரும்பவுமாக ஓர் உதாரணத்தைச் சொல்ல பவுலடியார் முற்படுகிறார். உதாரணங்கள் சொல்லுவதில் பவுல் அவ்வளவு திறன் படைத்தவர் அல்ல. நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்களுடனே பேச ஆரம்பிக்கிறார். அவர்

சொல்லும் சட்டம் யூத நியாயப்பிரமாணமா அல்லது ரோமச் சட்டமா என்பது திட்டமாகத் தெரியவில்லே. ஆனால் அவ்விரு விதிமுறைகளிலும் திருமணப்பிர மாணம் ஒன்று போல் தான் உள்ளது. எனவே இரு சாராரையும் பாராட்டி அவர்கள் கவனத்தை ஈர்ப்பதாக இவ்வாக்கியம் அமைந்துள்ளது. ஒருவன் உயிரோ டிருக்கும் வரை தான் (வ. 1) சட்டம் அவன் மேல் ஆட்சி செலுத்தும் எனக் கூறிய பவுல், தொடர்ந்து, இறந்து போகிற ஒரு கணவனைப்பற்றிப் (வ. 2, 3) பேசுகிறார். இறந்துபோன கணவன் அல்ல, உயிரோ டிருக்கிற மனைவி கணவனைப்பற்றிய சட்டத்தினின்று விடுதலையாகிறாள் (வ. 4, 6). பின்னர் இறப்பது சட்ட மாகிய கணவன் அல்ல, மனைவியே சட்டத்திற்கு இறந்து கிறிஸ்துவாகிய மற்றொரு கணவனை மணந்து கொள்கிறார். பவுல் கூறும் உதாரணத்தை மறந்தவர் களாய் அவர் கூற விரும்பும் உண்மையை அறிந்து கொள்ள முற்படுதல் நலம்.

கிறிஸ்துவோடு இணைந்துள்ள கிறிஸ்தவன் அவ ரோடு கூடமரித்தும் இருக்கிறான். அவன் நியாயப்பிர மாணத்தின் சட்டதிட்டங்களுக்கு மரித்து விட்டான். இப்பொழுது அவன் கிறிஸ்துவுடன் ஜீவிக்கிறான் (6 : 1-11) முன்னதாக சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருந்த காலத்திலும் அவன் (மண) வாழ்க்கை ‘ கனி கொடுப்ப தாய் ’ இருந்தது. அவை மரணத்துக் கேதுவான கனி கள். இப்போது கிறிஸ்துவுக்குள் வாழ்கின்ற புது வாழ்க்கையும் அவருக்கென்று கனி கொடுப்பதாய் உள்ளது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உவமை களில் காணப்படுகின்ற எளிமையும், தெளிவும் பவுல டியாருடைய உதாரணங்களிலே காணப்படுவதில்லே. பல்வேறு உருவகங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும்

போதே திடீரென மற்றக்காரியங்களைக் குறித்து பேச ஆரம்பித்து விடுவார். ஆனால் எப்படியும் உவமையில் இறுதியில் தனது கருத்துக்களை மாத்திரம் கூறும் பொழுது ஆணித்தரமாக அவற்றைக் கூறி முடிப்பதில் அவர் வல்லவர். முன் கூறிய இரு எடுத்துக்காட்டுகள் மிகக் தெளிவாக இல்லாவிடினும் அவற்றின் கருத்துரையாக அவர் கூறுபவை நம்மை ஈர்க்கின்றன. "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் .... நாம் புதுமையான ஆவியின் படி ஊழியம் செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்". பவுலின் கருத்துக்களை மிகத் தெளிவாக இவை கூறுகின்றன.

7 : 7-13 நியாயப் பிரமாணத்தின் பணி

பாவத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதை பவுல் முன்னதாகவே குறிப்பிட்டுள்ளார். பாவத்தை அறியும் அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது. (3 : 20 ; 7 : 7) நியாயப்பிரமாணத்தை அறியாத மனிதன் பிறர் பொருள் மீது ஆசைப்படுவதை இயற்கையான ஒரு காரியமாக எண்ணிக் குற்ற உணர்வில்லாதிருப்பான். இச்சியாதிருப்பாயாக என்ற கற்பனை அறிந்த பின்பு இச்சை பாவமாக மாறுகிறது. பிரமாணம் இதைச் செய்யாதே எனக்கூறுவதால், அது செய்யும் படியான தூண்டுதலை மனிதனில் உண்டாக்குகிறது. பவுல் எடுத்துக்கொண்ட 10 ஆம் கற்பனையும் செயலைப்பற்றியதாக இல்லாமல் உள்ளத்தின் எண்ணத்தைப் பொருத்ததாக உள்ளது. உள்ளத்தின் எண்ணங்களை நாம் கட்டுப்படுத்துவதினால் அவை நீங்கிப் போவதில்லை. அவை

உட்தங்கி புதிய அதிக கேடுண்டாக்குகிற ரூபங்களில் வெளிவருகின்றன. பவுல் தனது அனுபவ சாட்சியை இப்பகுதியில் கொடுக்க ஆரம்பிக்கிறார்.

வ. 12 கற்பனைகளைப்பற்றிய அறிவில்லாத இளைஞனாயிருந்த பருவம் அது. பாவமறியாப்பருவம் எனப் பொதுவாகக் கூறப்படும் இளவயது. மகிழ்ச்சியோடு குறும்புகள் செய்து விளையாடித்திரிந்தான் சவுல் என்னும் சிறுபையன், பெரியவனாய் வளர்ந்த போது கற்பனையைப் பற்றிய அறிவும் அதை நிறைவேற்றத் துடிக்கும் போராட்டத்தின் தோல்வியும் அவனில் இயலாமையை உருவாக்கியது (impotence). உயிர்துடிப்பு அடங்கியது. தோல்வியுற்று நடைப்பிணமாகத்திரியும் ஒரு நபராக சவுல் மாறினார். ஏதேனில் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த போது மரணம் உலகில் பிரவேசித்ததும் இங்கு மறைமுகமாகப் பேசப்படுகிறது. பாவம் சர்ப்பத்தைப் போல் அவரை வஞ்சித்தது. நிறைவேற்றப்படவேண்டிய உயரிய குறிக்கோளை நியாயப் பிரமாணம் மனிதனுக்கு முன்வைத்தது. ஆனால் மனிதனில் உள்ள இயல்பான தூண்டுதல்கள் தவறாக இயங்கத்தலைப்பட்டதால் உண்டான தீய ஆவல்கள் நீதிப்பிரமாணத்துக்கு எதிர்த்துப் போராடின.

வ. 12 கற்பனை தேவனிடமிருந்து வந்ததாயும் நேர்மையானதாயும் நன்மை பயப்பதாயும் உள்ளது. கற்பனை பாவமல்ல. தீமைக்குக்காரணம் கற்பனை அல்ல; தன்னிலுள்ள பாவமே எனப்பவுல் கூறுகிறார். கற்பனை பாவத்தை இயங்கச் செய்ததால் மறைந்திருந்த அதன் கொடூரத்தன்மையை பிரத்தியட்சமாக்கிறது. பாவத்தின் உண்மைத்தன்மையை வெளிக்கொணர்ந்தது நியாயப் பிரமாணம் ஆற்றியுள்ள தலையாயப் பணி எனலாம்.

7 : 14-25 போராட்டம், உள்ளக்குமுறல் விடுதலை

பவுல் தமஸ்கு செல்லும் பெருவழியில் இரட்சிக்கப் படுவதற்கு முன்பு உள்ள வாழ்க்கையைப் பற்றி இங்கு பேசுகிறாரா? அல்லது தொடர்ந்து நிகழ்ந்து கொண் டிருந்த வாழ்க்கையின் அனுபவமாக இது இருந்ததா? பவுலின் வாழ்க்கையில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு அனுபவம் என்றே இதைக் கூற வேண்டும். பவுலின் அனுபவ சாட்சி தொடர்ந்து செல்கிறது. நியாயப்பிரமாணம் தேவனால் அளிக்கப்பட்டதாயிருக் கிறது. (அது ஆவிக்குரியது). என் சரீரமோ பாவத் திற்கு எளிதில் இசையக் கூடியது.

பாவத்தை நோக்கி இழுக்கும் தன்மைக்கும், பரிசுத் தம் பெற வேண்டுமென்ற விருப்பத்திற்கும் இடையே உள்ள போராட்டத்தைப் பற்றி பவுல் பேசுகிறார். இப் பகுதியின் இறுதியில் பவுலின் உள்ளக் குமுறல் வெடித்து வெளியே சிதறுவதைக் காண்கின்றோம். அந்த உச்சக்கட்டத்தில் இயேசு கிறிஸ்து கொடுக்கும் வெற்றியை நினைத்துத் தேவனைத் துதிக்கிறார்.

8: 1-4. கடவுளின் மீட்பின் செயல்.

இதற்கு முன் உள்ள பகுதிகளில் பவுலடியார் பாவம், மரணம் இவற்றின் அடிமைத்தனத்தில் உழல் கின்ற மனிதனது நிலைமையைப் பற்றிப் பேச ஆரம் பித்து, ஆண்டவரின் செயல் இந்நிலையினின்று மனி தனை விடுதலை செய்கிறது எனத் தனது அனுபவ சாட்சியோடு முடித்தார். இப்பகுதியில் இறைவன் என்ன செய்துள்ளார் என்றும், புது வாழ்வில் அதன் விளைவுகள் என்ன என்பதைப் பற்றியும் பேசுகிறார். இப்பகுதியின் சிறப்பான சொல் 'ஆவி'. இதுவரையிலும் மொத்தம் 5 தடவைகள் மட்டுமே வந்துள்ள அச்சொல் இந்த ஒரு அதிகாரத்தில் 23 தடவைகள் காணப்படு

கிறது. புது நிலைமை 'ஆவி' என்னும் சொல்லால் விவரிக்கப்படும். பழைய நிலைமை 'மாம்சம்' என்னும் சொல்லால் குறிக்கப்பட்டதை அறிவோம்.

'ஆவி' என்னும் சொல்லுக்கு அடிப்படையான கிரேக்கச் சொல் **'இயக்கத்தில் உள்ள காற்று'** எனப்பொருள் படும். அது வீசும் காற்ருக இருக்கலாம், அல்லது உயிருள்ள பிராணியின் சுவாசமாக இருக்கலாம். பவுலடியாரின் உண்மையான பின்னணியம் பழைய ஏற்பாடும் ஆதித்திருச்சபையின் அனுபவமுமாகும். பழைய ஏற்பாட்டில் ஆவி என்பது 'பலத்த காற்று' என்னும் பொருள்பட எடுத்தாளப்பட்டுள்ளது. வல்லமை ஆவியோடு இணைந்து காணப்பட்டது. சாதாரண இயற்கை சக்திக்கு மேலாக மனிதர் ஆற்றிய காரியங்கள் யாவும் வெளியிலிருந்து பலத்த காற்று சக்தி அவர்களில் வந்ததால் அவர்கள் செய்தார்கள். யுத்தத்தில் வீரனுடைய அசாதாரணமான வீரமும் வெற்றியும், தீர்க்கரின் இறைவாக்கு, மன்னனின் ஞானம் இவை யாவும் ஜீவிக்கும் வல்ல தெய்வமாகி யெகோவாவின் பலத்த காற்றினுல் அருளப்பட்டன. இவ்விதமாக ஆவி என்பது பலனற்று மாய்ந்து போகும் மாம்சத்திற்கு எதிராக மனித வாழ்வினுள் குறுக்கிடுகிற தெய்வீக வல்லமையாகும். அப்படிப்பட்ட பலத்த காற்று ஆதித்திருச்சபையில் சீஷர்கள் கூடியிருந்த மேல் வீட்டறையில் பிரவேசித்தது (அப். 2:4). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் ஒரு புது யுகம் ஆரம்பமாகியுள்ளதை அது யாவர்க்கும் வெளிப்படையாகக் காட்டினது.

வ. 1. கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. நிரபராதி என்றத் தீர்ப்பு மாத்திரம் அல்ல, விடுதலையே கொடுக்கப்பட்டாயிற்று. பிரமாணம் என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிக்கும் சொல் அல்ல, 'இது ஒழுங்கான ஏற்பாடு' அல்லது

'ஆட்சி' எனப் பொருள்படும். பாவம், மரணம் ஆகிய இவைகளின் ஆட்சியிலே உயிருள்ள ஆவியின் ஆட்சி குறுக்கிட்டு பவுலுக்கு விடுதலை அளித்தது.

வ. 3. மாம்சத்தில் பாவம் ஆதிக்கம் செலுத்தி ஆட்சி நடத்தியது. நியாயப்பிரமாணம் பாவத்தின் ஆட்சியை முறியடிக்க முடியவில்லை. ஆண்டவரின் திருமைந்தனும் இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வந்து பாவத்தின் கோட்டையாம் மாம்சத்திலேயே பாவத்தை ஜெயித்தார். ஆதாம் எந்த மாம்சத்தில் பாவத்தினிடம் தோல்வி கண்டானோ அதே மாம்ச சாயலில் கிறிஸ்து வந்து வெற்றி கண்டார்.

வ. 4. வனாந்தரத்தில் பாவத்தின் சோதனையை மாம்சத்தில் ஜெயிக்கும் முன்னதாக இயேசு ஆவியினால் நிரப்பப்பட்டு வனாந்தரத்திற்கு அவரால் கொண்டு போகப்பட்டார் (மத். 3 : 16 - 4 : 1). ஆவியின்படி நடக்கிற யாவருடைய உள்ளார்ந்த பிரதிநிதியாக (inclusive representative) அவர் வெற்றி பெற்றார். நியாயப்பிரமாணத்தின் பரிசுத்தமும், நீதியும், நன்மையும் (7 ; 12) நிறைவேற அப்படி செய்தார்.

8 : 5 - 13 மாம்சம்—ஆவி

ஆவியின்படி நடக்கிறவனுக்கும் மாம்சத்தின்படி நடப்பவனுக்குமிடையே உள்ள வேற்றுமையைப் பவுல் தெளிவுபடுத்துகிறார். 7 : 7 - 13 பகுதியில் நாம் சந்திக்கிற மனிதனுடைய மனம் கடவுளின் பிரமாணத்தை ஏற்றுக்கொண்டாலும் அவனது விருப்பமெல்லாம் (interests) மாம்சத்திற்குரியதாகவே இருந்தது. அவ்வித சிந்தை மரணம். ஆவிக்குரிய சிந்தை முழு மனிதனது ஆசைகளையும், விருப்பங்களையும் ஆட்கொள்ளும் வகையில் அமைகிறது. அது தாழ்வான காரியங்களில்

ஈடுபாடு கொண்டுள்ள அவனது ஆசை இச்சைகளை விடுதலை செய்து கடவுளையும் மனிதரையும் அன்பினால் சேவிக்கும்படி பணிக்கிறது.

வ.6. சமாதானம் - மனித ஆட்தன்மையின் எல்லா உறுப்புகளும் ஒருங்கிணைக்கப்படுவதால் உட்போராட்டங்கள் ஓய்ந்து அமைதி ஏற்படுகிறது.

வ-9. ஆவியினுள் ஜீவித்தல் கிறிஸ்துவினுள் வாழ்தலை நினைவுறுத்துகிறது. அதே நேரத்தில் ஆவி நமக்குள் வாசம் செய்வதைப்பற்றியும் பவுல் பேசுகிறார்.

தேவனின் ஆவியானவர், கிறிஸ்துவின் ஆவி, கிறிஸ்து உங்களில் வாசமாயிருத்தல்—இவை யாவும் ஒரே பொருள் கொடுக்கும்படியாக பவுல் உபயோகிக்கிறார். ஆவிக்குள்ளான வாழ்வு ஆதாமின் சந்ததியாக பெற்றிருக்கிற மரணத்தை எவ்விதமாக மாற்றுகிறது? இரண்டு விதமாகப் பவுல் பதில் சொல்கிறார். (1) வ. 10. கிறிஸ்து உங்களில் இருந்தால் உங்கள் சரீரம் ஆதாமின் பாவத்தினிமித்தம் மரித்ததாய் இருந்தாலும், உங்கள் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவிக்கிறதாயிருக்கும். சதையினால் ஆகிய மனித சரீரம் பாவம் ஆட்சி செய்யும் தளமாக அமைந்தது. ஆனால் உண்மையில் மனிதன் என்பது இந்த பாவ சரீரம் அல்ல. ஏனென்றால் கர்த்தரோடு இசைந்திருக்கிறவன் அவரோடு ஒரே ஆவியாயிருக்கிறான் (1 கொரி. 6 : 17). இனி ஜீவிப்பது அவனல்ல, கிறிஸ்துவே அவனில் ஜீவிக்கிறார். (கலா. 2 : 20).

(2) இரண்டாவதாக சதையினாலாகிய இந்த இயற்கை சரீரமும் முற்றிலுமாக அழிந்தே போவதற்கு நியமிக்கப் படவில்லை. வ. 11 .... " கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான

உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் " " அழிவுள்ள தாய் விதைக்கப்படும். அழிவில்லாததாய் எழுந்திருக் கும்; .... சாவுக்கேதுவாகிய இது சாவாமையை தரித்துக் கொள்ளும் போது, மரணம் ஜெயமாக விழுங் கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறை வேறும் " (1 கொரி. 15 : 42, 44, 54).

8 : 14-17 கடவுளின் பிள்ளை—ஆவியானவர் அருளும் உரிமை

தேவ ஆவியினால் நடத்தப்படுபவர்கள் கடவுளின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். அடிமைத்தனத்தின் ஆவி யைப் பெறவில்லை. 6 : 19 ஆம் வசனத்தில் நீதிக்கு அடி மைகளாக தங்கள் அவயவங்களை ஒப்புக்கொடுக்கும்படி பவுல் கேட்டுக் கொண்டார். ஆனால் அவ்வேண்டுதல் உண்மையானது அல்ல. ஏனென்றால் அவ்வசனம் கூறுகிறபடி அவர் அந்த இடத்தில் " மனிதர் பேசும் விதமாக தான் பேசினார் " (6 : 22). பயம் அவசியமில்லை பூரண அன்பு (ஆவியின் தலை சிறந்த ஈவு) பயத்தை புறம்பே தள்ளும் (1 யோவா. 4 : 18). அப்பா, பிதாவே எனக்கூப்பிடும் உரிமையும் பெற்றுள்ளோம் (கலா. 4 : 6.). உரிமைக்கு மாத்திரமல்ல, கடமைக்கும் நாம் சுதந் திரர். மகிமைக்கு மாத்திரமல்ல, யாவருக்கும் நாம் உரிமை பெற்றோர் எனப்பவுல் ஞாபகப்படுத்துகிறார்.

8 : 18-25 எதிர் நோக்கும் நம்பிக்கை

மனித வாழ்வின் நிலைமையை கருத்தில் கொண்ட வராக பவுலடியார் இவ்வுலகத்தைப் பார்வையிடுகிறார். உலகில் எத்துணைப்பாடுகளை மனிதன் அனுபவிக்க வேண்டியுள்ளது. கிறிஸ்தவன் துன்பத்திற்கு விதி விலக்கு அல்ல. ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமும் கூட காத்திருந்து முழுமை பெறாதவர்களாய் நமக்குள்ளே தவிக்கிறோம். மனிதன் மாத்திரமல்ல,

இயற்கையும் ஏகமாய் தவித்து பிரசவவேதனைப்படு கிறது. நாம் நமது சரீரமும் மீட்படைந்து நிறைவான பிள்ளைகளாக மாற விரும்புகிறோம்

மனிதன் படைக்கப்பட்டுள்ள இயற்கையினின்று தன்னை முற்றிலுமாகப் பிரித்து விட இயலாது. இயற்கையும் இறைவனின் வருகைக்காக காத்துக் கொண் டிருக்கிறது. அழிவினின்று மீட்கப்பட்டு, முற்றிலும் விடுதலையை அடைய இயற்கை காத்துக் கொண்டிருக் கிறது.

8 : 26-27 ஆவியானவர் பலவீனங்களில் உதவி செய்கிறார்

இவ்வுலகில் கிறிஸ்தவனுடைய வாழ்க்கை துன்ப மும், பலவீனமும் நிறைந்தது. அதே நேரத்தில் முழுமை யும் நிறைவும் பெறவேண்டும் என்ற ஏக்கமும், அசை யாத கிறிஸ்தவ நம்பிக்கையும் அவன் உடையவனா யிருக்கிறான். அவனது பெலவீனத்தில் ஆவியானவர் அவனுக்கு உதவி புரிகிறார். சரீரமீட்புக்காக ஏங்கி பெருமூச்சு விடுகின்ற கிறிஸ்தவனுக்காக அவரும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஆழமான பெருமூச்சு களோடு வேண்டுதல் செய்கிறார். நமக்கு உண்மையிலே எது தேவை என்றும், எது நன்மை என்றும் தெரியாது. நம் வாழ்வில் தேவனுடைய சித்தம் என்னவென்று நாம் அறியோம். எனவே நம்முள் உறைகின்ற ஆவி யானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

8 : 28-30 முன் குறித்து அழைத்தார்

வ. 28 இவ்வசனத்தை இவ்விதமாக மொழி திருத் தலாம் :

அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி கடவுள் அவர்களோடு ஒத்துழைக்கிறார்.

தேவனுடைய திட்ட அமைப்பு பின் வரும் வார்த்தைகளில் அமைந்துள்ளது .... முன்னறிந்தார், முன் குறித்தார், அழைத்தார், நீதிமான்களாக்கினுர், மகிமைப் படுத்திஞர். இவ்வார்த்தைகள் பவுல் முன் தெரிந்து கொள்ளும்(Predestination) கருத்தை வலியுறுத்துகிறுர் என்பது போல் தோன்றுகின்றன. முன்னறிந்தார் என்னும் முதல் சொல் அக்கருத்திற்கு சற்று மாறுதலாய் உள்ளது போல் தோன்றுகிறது. முன்னறிந்தார் என்பதில் அறிந்து அவர்களது வாழ்வை ஒத்துக் கொண்டார் (approved) என்னும் பொருள் தொனிக்கிறது. எப்படியாயின் இங்கு பவுல் முன் தெரிந்து கொள்ளும் கருத்தை தான் கூறுகிறுர் என்பதில் ஐயமில்லை. அதன் பொருள் கடவுள் சிலரை முன்னதாகவே மீட்கும்படியாக தெரிந்து கொண்டு அவ்விதமாகவே அவர்களை மீட்டுக்கொண்டார் என்பது. இதைக்குறித்து நாம் சிந்திக்கும் போது இந்தக் கருத்தில் பல சிக்கல்கள் ஏற்படத்தான் செய்கின்றன. மீட்கப்படாதவர்கள் மீது எந்தக்குற்றமும் சுமத்த முடியாதல்லவா என்றக் கேள்வி எழும்புகிறது.

ஆனுல் மீட்கப்பட்ட ஒருவன், தான் கிருபையாக மீட்கப்பட்ட அந்த அதிசய நிகழ்ச்சியை திரும்பிப் பார்க்கும் போது, தேவன் தன்னைத் தன் தாயின் வயிற்றிலிருந்தே தெரிந்து கொண்டார் என்றே உணர்கிறுன். அவ்விதமே கூறுகிறுன். தன்னுடைய எந்த செயலினுலும் அல்ல, இறைவனின் கிருபை தானுக செயல்பட்டு, அவனை மீட்பிற்கு நேராக இழுத்துச் சென்றது என்றே உணர்கிறுன். பவுல் அவ்விதமாகவே திடீரென்று தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இறைவனுல் பிடிக்கப்பட்டார். அவரது இவ்வித மீட்பின் அனுபவத்தால் அவர் உள்ளத்தில் ஆழமாக பதிந்து விட்டக்கருத்து இது.

8 : 31-39 இரட்சிப்பின் அசையாத உறுதி

உலகத்தில் பல காரியங்கள் கிறிஸ்தவனுக்கு விரோதமாயிருக்கின்றன. கடவுள் அவன் பட்சத்தில் இருப்பது அவனுக்கு பலத்தின் உறைவிடமாயுள்ளது. அவர் அவனில் பிரியமாயுள்ளார் என்பதில் சந்தேகமில்லை. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணினார்" (5 : 8). சொந்த மைந்தனையே ஈந்தவர் மற்றநன்மைகளைத் திட்டமாக அருள்வார். நமது நல் வாழ்வைக் குலைக்கும் முதல் காரியம் நமது பாவமே. நாம் பாவிகள் என்பதை நாம் மறுக்க இயலாது. பவுலடியாரின் மனக்கண்கள் முன் நீதி மன்றக்காட்சி ஒன்று நிற்கிறது. "இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன்" (வெளி 12 : 10) அங்கே நிற்கிறான். நம் பாவங்களைக் குறித்து குற்றம் சாட்டுகிறான். ஆனால் ஏற்கனவே நம்மை அவர் நீதிமான்கள் எனக்கொண்டு விட்டார். நாம் நீதிமான்களாக தீர்ப்பு பெற்ற பாவிகள். எனவே குற்றம் சாட்டுதல் நீக்கப்பட்டது. நமக்காக மரித்து உயிர்த்த கிறிஸ்துவே (வ. 34) நீதிபதியும், நமக்காக வேண்டுதல் செய்கிற வழக்குரைஞருமாய் இருக்கிறார். இவ்வசனம் ஆதி திருச்சபையின் விசுவாசப்பிரமாணத்தின் ஒரு பகுதி என்று எண்ண இடமுண்டு.

நமது நல்வாழ்வைக்குலைக்கும் இரண்டாவது காரியம் இவ்வுலகின் உபத்திரவங்கள். பவுலடியார் சீக்கிரத்தில் எருசலேம் செல்ல ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தார். அங்கு அவருக்கு நேரிடக்கூடிய ஆபத்துக்களையும், இதுவரையும் அனுபவித்துள்ள உபத்திரவங்களையும் (2 கொரி. 11 : 23-33) குறித்து இங்கே அவர் எண்ணியவராக பேசுகிறார்.

வ. 35 சங் 44 : 22. மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார்.

வ. 36, 37 இவை எல்லாவற்றையும் மேற் கொள்ள முடியும் என்ற உறுதி இவ்வசனங்களில் தொனிக்கிறது

வ. 38, 39 மனிதரால் ஏற்படக்கூடிய உபத்திரவங்களை முன் கூறி, மனித வல்லமைக்கு அட்பாற்பட்டக்காரியங்களை இங்கு கூறுகிறார். கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்டு செயல்பட்டுள்ள அன்பை விட்டு நம்மை எதுவுமே பிரிக்கமாட்டாதென்று கூறி, தன் கடிதத்தின் ஒரு முக்கிய பகுதியை முடிக்கிறார்.

கடவுளின் திட்ட அமைப்பில் யூதரும் புறஜாதியாரும் (9 : 1; 11 : 36)

எட்டாம் அதிகாரம் இறுதியில் முடிகிற கருத்துத் தொடர்ச்சி 12 - ஆம் அதிகாரத்தில் ஆரம்பித்து, தொடர்ந்து செல்கிறது. பவுல் இங்கே இடையில் மூன்று அதிகாரங்கள் சில இறையியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக செலவிடுகிறார். இந்த மூன்று அதிகாரங்களும் தனித்து நிற்கக் கூடியனவாய் உள்ளன. ஒரு வேளை பவுல் இந்த பொருட்பிரிவின் மேல் ஏற்கனவே எழுதி கைவசம் வைத்திருந்த ஒரு எழுத்தோவியமாக இது இருந்திருக்கலாம். இந்தக் கடிதத்தின் மற்ற பாகங்களில் பவுல் காரியங்களை அலசி ஆராய்வதற்கும், இங்கே அவர் ஆராய்வதற்குமிடையே முறையில் வேற்றுமை உள்ளது. திருமறையின் குறிப்பிட்ட பாகங்களை எடுத்து அவற்றின் மேல் விரிவான விளக்கவுரை கொடுக்கப்பட்டுள்ளது. கடிதத்தின் மற்ற பாகங்களில் பொதுவாக திருமறைப்பாகங்கள் மறைமுகமாகவே மேற்கோள் காட்டப்பட்டன. எழுதப்பட்டிருக்கும் முறையிலும் கேள்வி - பதில் முறையே அதிகமாக பின் பற்றப்பட்டுள்ளது. மற்ற பாகங்களில் பவுல்

பிரசங்கங்கள் செய்வது போன்ற தொனி ஒலிக்கும். இங்கோ உரையாடலைக் கவனிப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது. ஒரு வேளை அந்த நாட்களில் இந்த முறை அதிகமாக பின் பற்றப்பட்டதால் பவுல் தனது பிரசங்கத்திலும் அம்முறையைப் பின் பற்றியிருக்கலாம். அப்படியானால் பவுலின் ஒரு முழுமையான அருளுரை யையே நாம் இங்கு பெற்றிருக்கிறோம் எனலாம்.

9:1-5 இஸ்ரவேலரால் வீணாக்கப்பட்ட இணையற்ற வாய்ப்பு.

தன் இனத்தவராகிய யூத ஜனங்கள் மேல் தனக்கு உள்ள பற்றுதலை உறுதிப்படுத்தினவராக பவுல் இப் பாகத்தை ஆரம்பிக்கிறார். பவுல் யூத இனப்பற்று அற்றவர் என்றும் யூதர்கள் மீது வெறுப்பு காட்டுபவர் என்றும் அவர் மீது பொய்க் குற்றம் சாட்டப்பட்டது. எனவே மிகவும் பயபக்தியான ஒரு ஆணையிட்டுக் கொள்கிறார். யூத ஜனங்களின் தற்கால நிலைமையைப் பார்த்து தனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத வேதனையும் உண்மையாகவே ஏற்பட்டுள்ளது என்கிறார். அவர் பொய் சொல்கிறார் எனக் குற்றம் சாட்ட யூத கிறிஸ்தவர்களே இருந்தனர். எனவேதான், தான் பொய் சொல்லவில்லை என்பதற்கு கிறிஸ்துவை யும், பரிசுத்த ஆவியானவரையும், தன் மனசாட்சியை யும் சாட்சியாக நிறுத்துகிறார். ஆதித்திருச்சபையில் யூதக் கிறிஸ்தவர்கள் சிலர் பவுலுக்கு விரோதமாக மிக வைராக்கியமாயிருந்தார்கள். எனவேதான் இத்தனை வேதனையோடு தன் நிலையை சாட்சியிட்டு சொல்கிறார்.

வ. 3. எப்படியாவது ஒரு வகையில் தன் இனத்தவ ராகிய இஸ்ரவேல் எல்லோரும் மீட்கப்பட முடியுமென் றால் அதற்காக தான் எந்தத் தியாகத்தையும் ஏற்கத் தயார்—ஒருவேளை தான் கிறிஸ்துவைவிட்டு சபிக்கப் பட்டுத் தள்ளப்பட்டால், அவர்கள் அனைவரும் மீட்கப்

பட்டுவிடலாம் என்றிருந்தால், அக் கடினமான தியாகத்தையும் ஏற்றுக்கொள்ள பவுல் ஆயத்தமாக இருந்தார்.

வ. 4. இஸ்ரேவேலருக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பைப்பற்றி இப்போது விவரிக்கிறார். அவர்கள் இஸ்ரவேலர். ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட எத்தன் யாக்கோபுவுக்கு ஆண்டவர்தாமே அளித்த ஆசீர்வாதத்தின் அடையாளப் பெயர் இஸ்ரவேல் என்பது. புத்திர சுவிகாரம்— யாத். 4 : 22; எரே. 31 : 93; ஓசியா 11 : 1 பார்க்கவும்.

இறைவனின் மகிமை பிரசன்னம் — யாத். 16 : 10; 24 : 16, உடன்படிக்கை திரும்பவும், திரும்பவுமாக புதிப்பிப்பதால் உடன்படிக்கைகள் என்று பவுல் குறிப்பிடுகிறார். இவை எல்லாவற்றின் மேலாக இறைமகனாகிய கிறிஸ்துவும் அவர்களில் ஒருவராகப் பிறந்தார்.

இயல்பாக இத்தனை சிறப்பு வாய்ப்புகள் (advantages) கிடைத்திருப்பினும் அவர்கள் அவற்றை பயன்படுத்தாது அநேகர் மீட்பை அடையவில்லையே எனப் பவுல் அங்கலாய்க்கிறார்.

9 : 6-13 இஸ்ரவேலின் மறுதலிப்பு கடவுளின் நோக்கத்தை அவமாக்காது.

இவ்விதமாக இஸ்ரவேலர் மேசியாவை ஏற்றுக் கொள்ளாததினால் முற்பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் அவமாகிவிட்டதா? யூதருக்குத்தான் மேசியாவும் அவருடைய மீட்பும் திரும்ப திரும்ப வாக்களிக்கப்பட்டன. வாக்கு வீண் போகவில்லை. ஏனென்றால் வாக்கு எல்லா யூதர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்று சொல்லமுடியாது. இந்த பாகத்தில் முக்கிய ஒரு கருத்தை பவுல் கூறுகிறார். ஆபிரகாமின் சந்ததி என்று கடவுள் கூறினபின் "ஈசாக்கினிடத்தில்

உன் சந்ததி விளங்கும் எனக் கூறினர்'' (ஆதி. 21:12B) அதன்படி ஆபிரகாமின் சந்ததியான யாக்கோபு தெரிந்தெடுக்கப்பட்டான். ஏசா வெறுக்கப்பட்டான். எனவே இன்றும் தேவன் எவர்களை யூதரில் முன்னறிந்து அழைத்திருக்கிருரோ அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொண்டு மீட்கப்பட்டிருக்கிருர்கள்.

9 : 14-29 **எதேச்சதிகாரமாக தோன்றினலும் அநீதி ஏதும் நிகழவில்லை.**

தேவன் ஏதேச்சதிகாரமாக செயல்படுகிருர் என்று மறுப்புத் தெரிவிக்கப்படலாம். ஆனுல் அதனுல் என்ன? அநீதி காணப்பட்டதாகக் குற்றம் சாட்ட இயலாதே. கடவுள் எவன் மேல் இரக்கமாயிருக்க விரும்புகிருரோ அவன் மேல் இரக்கமாயிருக்க அவருக்குப் பூரண உரிமை இருக்கிறது. மனிதனுடைய நற்செயல்களினுல் அளிக்கப்பட்ட நன்மை கூலியாக எண்ணப்படுமேயன்றி இரக்கமாக எண்ணப்படாது (வ. 15-யாத். 33:19). பவுல் தைரியமாகப் பார்வோனை எடுத்துக்காட்டி ஆண்டவர் விருப்பப்படி மனத்தைக் கடினப்படுத்தவும் செய்வார் எனக் கூறிச் செல்கிருர் (வ. 17—யாத் 9:17).

வ. 19. இவ்விதம் ஆண்டவர் செயல்பட்டால் எப்படி இறைவனின் சினத்தைப் பற்றியும் நியாயத் தீர்ப்பைப் பற்றியும் பேசமுடியும்? அநீதி செய்கிறவன் அவர் சித்தப்படித்தானே செய்கிருன். அவர் சித்தத்தை அவரால் மாற்ற முடியுமா? ஏறக்குறைய இதே மாதிரிக் கேள்விக்கு 3: 5,6 வசனங்களில் செய்ததுபோல் இங்கும் செய்கிருர். வ. 20 இக்கேள்வி கேட்க என்ன உரிமை இருக்கிறது என மறு கேள்வி கேட்கிருர். வ. 21 பழைய ஒப்பந்தமறையில் உள்ள ஒரு முக்கிய எடுத்துக்காட்டைக் கொண்டு பதிலளிக்கிருர். குயவனின் களிமண் பல இடங்களில் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

(ஏசா. 64 : 8 ; எரே. 18 : 4-6). பவுல் கூறுகிற காரி யங்கள் அப்படியே ஏசா. 45 : 9 , 10 ஆம் வசனங்களில் காணப்படுகிறது.

வ. 22, 23 மொழி பெயர்ப்பதற்கு மிகக்கடினமான பகுதி. கிரேக்கப் பிரதிகளில் எந்தவிதமான சேதமும் ஏற்பட்டிருப்பது போல் தோன்றவில்லை. பவுலின் எண் ணத்தில் தோன்றியுள்ள கருத்தைக் கூறுவதற்கு அவர் தயங்குகிறார் என்பதையே இது காட்டுகிறது.

("When Paul, normally a clear thinker, becomes obscure, it usually means that he is embarassed by the position he has taken up" - Dodd) அவ்வசனங்களை இவ்விதமாய் பிரித்து எழுதலாம். தேவன் தமது வல்லமையை தெரிவிக்க, தாம் மகிமைக் காக எத்தனமாக்கின கிருபா பாத்திரங்கள் மேல் தம் முடைய மகிமையின் ஐசுவரியத்தை தெரியப்படுத்த சித்தமாயும், தமது கோபத்தைக் காண்பிக்க அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள் மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாகவும் இருந்தாரானால் உனக்கென்ன? இவ்விருவசனங்களில் கூற ஆரம்பித்த கருத்தை அப்படியே விட்டு விட்டு அடுத்தக் கருத்துக்கு பவுல் வந்து விடுகிறார். எல்லா ஜாதிகளிலிருந்தும் புது இஸ்ரவேலர் அழைக்கப்பட்டி ருக்கின்றனர் என்பதை நினைவுறுத்துகிறார். அதனை வலியுறுத்த ஓசியா தீர்க்கரின் நூலிலிருந்து இரண்டு மேற்கோள்கள் எடுத்துக் கூறுகிறார்.

வ. 25 ஓசியா 2 : 23

வ. 26 ஓசியா 1 : 10

வ. 27-29. இப்பகுதியின் விவாதத்தை பவுல் முடிவுக்குக் கொண்டு வருகிறார். இஸ்ரவேலில் மீதியான

வர்கள் (remnant) மட்டும் மீட்கப்படுவர். தேவனால் தெரிந்து எடுக்கப்பட்டவர் மட்டுமே மீட்பைக் கண் டடைவர்.

வ. 27, 28 ஏசா. 10 : 22, 23

வ. 29 ஏசா. 1 : 9

9 : 30; 15 10 : 5 மீட்பு விசுவாசித்தவனுக்கு ஈவு. சுய முயற்சி தோல்வியே தரும்.

ஆதி திருச்சபையிலே புறஜாதியார் அநேகம் இருந் தனர். நீதியைத்தேடாத புறஜாதியார் எப்படி நீதிமான் கள் ஆனார்கள்? விசுவாசத்தின் மூலமாக புறஜாதிகள் யாவரும் நீதியைப்பற்றிக் கவலைப்படவில்லை என்று நினைத்தல் கூடாது. அவர்களில் அநேகர் நன்மை செய்ய நாடினார்கள் (2 : 14). அதைப் போலவே யூதரிலும் நீதியைப்பற்றி எண்ணமற்றவர்கள் சிலர் இருக்கத்தான் செய்தனர். ஆனால் பொதுவாக யூதர்கள் ஆசாரங்களிலும் நீதி வாழ்வை பின்பற்ற முயற்சிப் பதிலும் புறஜாதியாரை விட அதிக அக்கரைக் காட்டினர். விசுவாசமே வென்றது. சுய முயற்சி பலனளிக்கவில்லை.

வ. 33 ஏசா. 28 : 16; 8 ; 14, 15; I பேது. 2 : 6, 8 இவ் வசனங்களிலும் இதே பகுதி இவ்விதமாக மேற்கோள் காட்டப்படுகிறது. இரண்டு பேரும் ஒரே கருத்துக்கு ஒரே பகுதியை உபயோகிக்கின்றனர். ஆதி திருச் சபையின் சுவிசேஷகர்கள் யூதர் மத்தியில் நற்செய்திக் கூறுவதற்கு பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்து தொகுத்து வைத்திருந்த கைந்நூலிலிருந்து இம் மேற் கோள் காட்டப்பட்டிருக்கிறது எனலாம்.

வ. 10 : 1 தான் யூதருடைய விரோதியல்லவென்று பவுல் தெளிவுகொள்கிறார். யூதர் சரியான] அறிவு இல்லாததினால் தன்னை இழந்து போனார்கள். சுய முயற்சியை நம்பி கிருபையை இழந்துவிட்டார்கள்.

வ. 5. நியாயப்பிரமாணத்தின் பிரச்சனை என்னவென்றால் அதன் மூலம் பிழைக்க விரும்புகிறவன் அதை முற்றிலுமாக நிறைவேற்ற வேண்டும் (லேவி. 18 : 5)

10 : 6-13 விசுவாசிக்கிற யாவருக்கும் மீட்பு சமீபம்

இரு வகை நீதிகள் உள்ளன. ஒன்று நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி அடைய முயற்சிக்கின்ற நீதி. அதுவே நியாயப்பிரமாணத்தினால் உண்டாகும் நீதி (வ 5). மற்றொரு நீதி விசுவாசத்தினாலாகும் நீதி (வ. 6).

வ. 6, 7, 8 உபா. 30 : 11-14 அது சேர முடியாத தூரத்தில் இல்லை. மனிதனுடைய உள்ளத்தில் உள்ளது. வாயிலும், இருதயத்திலும் என்பதின் பொருள் என்ன என்று பவுல் விளக்குகிறார். வாயினால் அறிக்கை செய்ய வேண்டும்.

வ. 9, 10. இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.

இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆதித் திருச்சபையின் ஆரம்பத்திற்கு காரணமான அற்புத நிகழ்ச்சி. முதல் நற்செய்தி பிரசங்கங்களின் சிறப்பு அறிவிப்பும் அது தான். "இந்த இயேசுவைத்தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லோரும் சாட்சிகளாயிருக்கிறோம்" (அப் 2 : 32) என்பது பேதுருவின் முதல் பிரசங்கத்தின் வார்த்தைகள். அந்த உண்மையை விசுவாசிக்க வேண்டும் எனப் பவுல் கூறுகிறார்.

வ. 11–13. மீட்பின் வழி ஒன்றே. யூதருக்கு ஒரு வழியும், புறஜாதியாருக்கு மற்றொரு வழியுமல்ல.

வ. 11- ஏசா. 28 : 16B

வ. 13- யோவேல் 2 : 32

10 : 14-21 **கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?**

14 ஆம் வசனத்திலும், 15 ஆம் வசனத்தின் முன் பாகத்திலும் யூதர்கள் கேட்கக்கூடிய சில கேள்விகளைப் பவுல் எழுப்புகிறார். தொழுதுகொள்கிற யூதனோ, கிரேக்கனோ, யாரானாலும் மீட்கப்படுவான். யூதர்கள் மீட்கப்படாதது அவர்கள் கேள்விப்படாததினாலா? பவுல் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. பாபிலோனியச் சிறையிருப்பின் காலத்தில் விடுதலையின் நற்செய்தியைக் கூறி அறிவித்த சுவிசேஷகனுடைய சாட்சியையே யூதர் கண்முன் நிறுத்துகிறார் (ஏசா. 52:7). கேள்விப்பட்டார்கள், ஆனால் அதைக் கவனித்து, ஏற்றுக்கொள்ளவில்லை (ஏசா. 53:1).

வ. 18- சங். 19 : 4.

வ. 19. அது யூதருக்கு விளங்கவில்லையா? இஸ்ரவேலின் தேவனைப் பற்றி அறியாத புறஜாதியாருக்கே விளங்குகிறதே. அப்படியிருக்கும்போது யூதருக்கு ஏன் விளங்காது?

வ. 19- உபா. 32 : 21B

வ. 20- ஏசா. 65 : 1

வ. 21. கடைசியாக, அவர்கள் கீழ்ப்படியாத எதிர்பேசுகிற குணமுடையவர்களாக இருந்ததினால், கேள்விப்பட்டதை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறார் பவுல் (ஏசா. 65 : 2).

11 : 1-6 இஸ்ரவேலில் மீதியான ஒரு பங்கு

இஸ்ரவேலர் பூரணமாக தள்ளிவிடப்படவில்லை. முன்னதாக எலியாத்தீர்க்கரின் காலத்தில் ஏழாயிரம் பேரை வெளியே தெரியாமல் மீதியாக வைத்திருந்தது போல, கிருபையாகத் தேவன் தெரிந்தெடுத்த ஒரு பங்கினர் திட்டமாக மீட்கப்படுவர் எனப் பவுல் கூறு கிறார்.

11 : 7-14 யூதரின் புறக்கணிப்பு புறஜாதியாருக்கு மீட்பு.

மீட்பை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அடைந்திருக்கிறார்கள். மற்றவர்களோ இருதயம் கடினப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

வ. 8. சங். 69 : 23; ஏசா. 29 : 10; உபா. 29 : 4

வ. 9. சங். 69 : 22.

கடவுளின் கிருபையும், மீட்பின் அதிசயமும் இத்தனை வெளியரங்கமாய் இருக்க, யூதர்கள் அதை எப்படி ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியும்? கண்கள் குருடாக்கப்பட்டிருப்பதே காரணம். வ. 11. ஆனால் முற்றிலும் விழுந்து போவதற்காக இடறவில்லை. புறஜாதியாரின் மீட்பு ஏற்படவும் அதைப் பார்த்து, அவர்களுக்குள் வைராக்கியம் ஏற்பட்டு, அவர்களும் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை வைக்கவும் இவ்விதம் நிகழ்ந்தது. இதுவே பவுலின் ஊழியநோக்கமுமாகும்.

11 : 15 - 36 யூதர் யாவரும் மீட்கப்படுவர்.

யூதர் யாவரும் எப்படியும் இரட்சிக்கப்படுவார்கள் எனப் பவுல் திட்டமாக நம்பினார். அவ்விதமாக அவர்கள் மீட்கப்படுதல் மிகப் பெரிய ஆசீர்வாதமாய் அமையும். வ. 16 : 'முதற் பலனாகிய மாவு' மீட்கப்பட்டுள்ள ஒருசிலராகிய இஸ்ரவேலரை குறிக்கலாம்.

'வேர்' இஸ்ரவேலரின் முற்பிதாக்களைக் குறிக்கலாம். வ. 17—24. ஒலிவ மரத்தை புது இஸ்ரவேலரெனக் கொண்டு பவுல் ஒரு உதாரணத்தைக் கூறுகிறார். புற ஜாதிகளில் சிலர் தாங்கள் மீட்கப்பட்டுள்ளதைக் குறித்துப் பெருமை பாராட்டுவதைப் பவுல் வன்மையாகக் கண்டிக்கிறார். ஒலிவ மரத்தின் இயற்கையான கிளைகள் மீண்டும் மரத்தில் ஒட்டி வைக்கப்படும் என்ற நம்பிக்கையைச் சொல்லுகிறார்.

வ. 25—32 இஸ்ரவேலரில் ஒரு பங்குக்கு கடின மனது புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் மட்டும் இருக்கும். புறஜாதியின் நிறைவு என்பது அவர்களில் தேவன் தெரிந்து முன் குறித்துள்ள எண்ணிக்கையின் நிறைவு மட்டாக எனப்பொருள் கொள்ளலாம். அல்லது புறஜாதியார் யாவரும் மீட்பு என்னும் நிறைவடையுமட்டாக என்றும் பொருள் கொள்ளலாம். வ. 26, 27A—ஏசா. 59 : 20, 21.

வ. 32—36 தேவனுடைய அளவிடப்படாத ஞானத்தைப் போற்றி இந்தப் பகுதியை அவர் முடிக்கிறார். எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒருவேளை முழுப்பதில் கொடுக்கப்படவில்லை. ஆனால் மனதின் குழப்பங்கள் யாவும் இத்தெய்வ வழிபாட்டில் கரைந்துவிடுகின்றன.

வ. 34—ஏசா. 40 : 13

வ. 35—யோபு. 41 : 11

வ. 36........ "God's being is the ground of our Life. He is the source, the sustainer, and the end of all that exists" (Interpreters' Bible)

கிறிஸ்தவ வாழ்வில் தேவ நீதி (12 : 1—15 : 13)

முதல் எட்டு அதிகாரங்களிலே பவுலடியார் இறைவனின் நீதி வெளியாகியுள்ளதை எடுத்துக்

கூறினர். மனிதரை நீதிமான்கள் எனத்தீர்ப்பிட்டு இறைவனுக்கு முன் நிறுத்துவதில் தேவநீதி வெளியாகியுள்ளது. அப்புதிய அமைப்பில் வாழும் மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பவுல் இப்பகுதியில் காட்டுகிறார். சமுதாய விதிகள் என்று சட்டம் போல் வரையறுத்துக் கொடுப்பதில் பவுல் நாட்டம் கொள்ளவில்லை. நற்பண்புகளை இனவாரியாக பிரித்து, பகுத்து மகிழ்வதில் நாட்டம் கொண்ட தத்துவ ஞானிகள் இருந்தனர். நேர்மையான நடத்தை என்பது வகுக்கப்பட்டுள்ள விதிகளைக் கைக்கொள்ளுதல் அல்ல. அது ஆவியானவரின் விளைவு (கனி) எனக் கூறலாம்.

வ, 1 , 2. இறைவனின் சித்தத்தை அறிந்து அதை நிறைவேற்றுதல்

எட்டாம் அதிகாரத்தின் இறுதியில் அன்பைப் பற்றிப் பேசி முடித்தார் பவுல். இப்பகுதியில் இறைவனின் அன்பை முன்னிட்டுப் பேசாமல் அவரது இரக்கத்தை முன்னிட்டு வேண்டிக் கொள்கிறார். பொதுவாக தெய்வத்திற்கு கொல்லப்பட்ட மிருகம் பலியாக கொடுக்கப்பட்டது. அடிப்படை எண்ணம் மிருகத்தின் ஜீவன் இரத்தத்தில் கொடுக்கப்படுகிறது என்றிருந்தாலும், அது இறந்த மிருகமாகவே அழிந்து போகிறது. கிறிஸ்தவனோ தன்னைப்பலியாக கொடுக்கும் போதும் கொடுத்து விட்ட பின்பும் ஜீவிக்கிறவனாய் இருப்பான்.

இந்த உலகத்தோடு ஒட்ட ஒழுக அவன் முயற்சிக்காமல் மறுரூபமாகும் படியாக பவுல் ஆலோசனைக் கூறுகிறார். இறைவனின் சித்தத்தை அறியத்தக்கதாக இப் புதிய தாகுதல் அவசியம். புதிதாகிய நம் மனம் இறைவனுடைய மனதின் சித்தத்தை அறிந்து கொள்ள

இயலும். வானொலிப் பெட்டியில் நாம் தெரிந்தெடுக்கும் அலை வரிசையும், ஒலிபரப்பாகும் அலைவரிசையும் ஒன்றுகும் போது ஒலிபரப்பப்படும் செய்தியை நாம் அறிந்து கொள்வது போல் என்று சொல்லலாம்.

12 : 3—8 தனிக்கிறிஸ்தவன் முழுக் குடும்பத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும்

வ. 3. ஒவ்வொருவருக்கும் தன்னைப்பற்றி சரியான எண்ணம் தேவை. யாவரும் பாவிகளாக இருக்கையில் கிருபையாய் மீட்கப்பட்டவர்கள். ஆவியின் அச்சாரமும் வரமும் இலவச ஈவு. இத் தெளிந்த எண்ணம் மாருதிருக்க வேண்டும்.

கிறிஸ்தவ சபையாகிய குடும்பத்தில் பல்வேறு வரத்தையுடைய மக்கள் இருப்பதால் ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி பேசுகிறுர். கொரிந்து சபையில் இப்பிரச்சினை ஏற்பட்டது (1 கொரி. 12 : 1-14 : 40). இங்கு ஒரு வேளை சிறிய அளவில் இருந்திருக்கலாம். குறிப்பாக “ மொழிவரம் ” பற்றி இந்நிருபத்தில் ஒன்றும் கூறப்படவில்லை.

ஒவ்வொருவனும் 'தன் நன்மைக்காக அல்ல, சரீரத்தின் மொத்த நன்மைக்காக செயல்படவேண்டும்.

12 : 9—21 அன்பே சமூகவாழ்வின் அடிப்படை

கொரிந்தியருக்கு எழுதின கடிதத்தில் அன்பே ஆவியின் தலை சிறந்த ஈவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் கூறப்பட்டுள்ள எல்லா நற்செயல்களையும் இணைக்கும் கயிருக அன்பு உள்ளது.

வ. 15 , 16 மற்றவர்களில் காணப்படும் சுகதுக்கங்களில் பங்கு கொள்ளும் மனப்பக்குவம்

வேண்டும். எண்ணத்திலும் உணர்ச்சியிலும் இணைந்து நிற்க வேண்டும்.

வ. 19—உபா. 32 : 35 கோபாக்கினை என்னும் இறைவனின் சீற்றம் இயற்கை உலகில் தானாக இயங்கிக் கொண்டிருப்பதால் (1 : 18) தீமை செய்பவர்கட்கு தண்டனை தானாக வந்து விடும்.

வ. 20 நீதி 25 : 21, 22. பகையையும் தீச் செயல்களையும் அன்பினாலும் நற்செயல்களினாலும் சந்திக்கும் போது, விரோதி வெட்கப்பட்டுத் தலைகுனிந்து விடுகிறான். தன் தலையில் எரியும் தழல் குவிக்கப்பட்டது போல தாங்கொணா தலைக்குனிவை அடைகிறான்.

13 : 1—17 கிறிஸ்தவனும்—அரசும்

இந்தக் கடிதத்தில் பவுல் கிறிஸ்தவனுக்கும் அரசிற்கும் உள்ள உறவினைப்பற்றி எழுதவேண்டிய அவசியம் என்ன? பொதுவாக பவுல் தனது கடிதங்களில் இப்பொருள் பற்றி எழுதுவதில்லை. ரோமத் திருச்சபையில் அரசிற்கு விரோதமாய் செயல்படும் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கலாம். அல்லது தலைநகரின் சபை என்றவுடனேயே அரசோடு கொள்ளும் உறவு பற்றித் தானாகவே எழுத ஆரம்பித்திருக்கலாம். அன்று ரோமப் பேரரசு முக்கியமானதாகவும், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நிறைந்ததாகவும், அசைவிலா உறுதியுடையதாகவும் இருந்தது. கிறிஸ்தவ இயக்கத்தின் வளர்ச்சியில் பெரும்பங்கு ரோம அரசிற்கு மறைமுகமாக உண்டு. எல்லா பாகங்களிலும் பிரயாணம் செய்துகொண்டிருந்த பவுலடியார் ரோம அரசின் ஒற்றுமைக்காகவும், பிரயாணப் பாதைகளைக் கள்ளர் பயமில்லாது காத்து நின்ற அதன் வலிமையான செய்கைக்காகவும் இறைவனுக்கு அடிக்கடி நன்றி செலுத்தியிருப்பார். பெருங் கூட்டங்கள் திடீரென்று கலகம் செய்து

தம்மைத் தாக்க வந்தபோது, சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தும். ரோம அதிகாரிகள் தலையிட்டு, தமக்குப் பாதுகாப்பு கொடுத்தக் காட்சிகளும் பவுலடியாரின் மனதில் இருந்திருக்கும். வருங்காலத்தில் ஒருநாள் ரோம அரசே கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்த ஆரம்பித்துவிடலாம் என்றும் பவுல் எண்ணியிருப்பார். குறிப்பாக 8 : 35—38 பகுதி இதனை மறைமுகமாக உணர்த்துகிறது. ரோம அதிகாரிகளும் சில நேரங்களில் நேர்மை தவறி நடந்துகொள்ளலாம் எனப் பவுல் தனது உள்ளத்தில் அறிவார். ஏதோ தமக்கு அவ்வரசு பாதுகாப்பு தருகிறது என்பதற்காக பவுல் இப்பகுதியில் உள்ளக் கருத்துக்களைக் கூறவில்லை. அவரது ஆழமான அபிப்பிராயமும், மரபும் இதையே உரைத்தன. அரசு தவறினால் இறைவன் அதை மாற்றுவார். நீ உன் கடமையைச் செய் என்பதே அவரது கருத்து. எந்த அதிகாரமும் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளது. அவராலேயல்லாமல் வேறு அதிகாரம் யாருக்கும் கிடையாது. அரசின் அதிகாரம் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே யாவரும் அரசிற்கு கீழ்ப்படிய வேண்டும் எனப் பவுல் கூறுகிறார். அரசின் அதிகாரம் கடவுளுடையது என்பதினால் அரசினரும் தாழ்மையோடும், நேர்மையோடும் நடந்துகொள்ளவேண்டிய அவசியமும் அதில் அடங்கியுள்ளது. ஏனென்றால் அவர்கள் உக்கிராணக் கணக்கை கடவுளுக்கு ஒப்புவிக்க வேண்டும்.

13 : 8—10 அன்பே கற்பனையின் நிறைவேறுதல்

வ. 8. அரசிற்கு வரியோ, தீர்வையோ, பாக்கியாக வைத்துவிடாமல் செலுத்திவிடுங்கள் என்றவர் அன்பு செலுத்துவதிலும் பாக்கி வைத்துவிடாதிருங்கள் என்று கூறி இப்பகுதியை ஆரம்பிக்கிறார்.

13 : 11—14 காலம் கடைசியாயிற்று

காலம் நெருங்கி வருவதைப் பவுல் சுட்டிக் காட்டுகிறார். நீதியான வாழ்க்கை வாழவேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால், இரவு சென்றுபோய் பகல் சமீபமாயிற்று (I தெச. 5 : 4—10). கிறிஸ்தவன் பகலுக்குரியவன். கிறிஸ்தவப் போராயுதங்களைப்பற்றி எபே. 6 : 13—17 இல் நாம் வாசிக்கிறோம். கிறிஸ்தவன் ஓர் தெய்வீகப் போர்வீரன் எனப் பவுல் கருதுகிறார்.

14 : 1—15 ; 6 விசுவாசத்தில் பலவீனரை பலமுள்ளோர் தாங்குதல்

ரோமத் திருச்சபையில் இப்பகுதியில் கூறப்படுகிற பிரச்சினை இருந்தது. எனவேதான் பவுல் இப்பகுதியை எழுதினார் என சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சிலர் அப்படிப்பட்ட கூட்டத்தினர் அல்லது குழுவினர் யார் என்று கண்டுகொள்ள தங்களது திறமையை உபயோகித்து யூகித்துப் பார்த்துள்ளனர். விசுவாசத்தில் பலவீனனான அந்த மனிதன் யார்? அவன் யூதனா அல்லது புறஜாதியானா? நியாயப்பிரமாண சடங்காச்சாரங்களிலிருந்து இன்னும் விடுபடாத யூதனா? அப்படிப்பட்ட ஒருவன் தாழ்வாக எண்ணப்படுவதை 14 : 5-14 உணர்த்துவதுபோல் உள்ளது. ஆனால் 14 : 2ஆம் வசனமோ அசைவஉணவை மட்டும் புசிக்கிற பலவீனனைப் பற்றிப் பேசுகிறது. வ. 21 மாம்சம் புசித்தலையும் மதுபானம்பண்ணுதல் ஆகிய இரண்டையும் கைவிட்டுவிட்டோரைப்பற்றிக் கூறுகிறது. அந்த நாட்களில் சில மதப்பிரிவினர் இவ்விதமாக இருந்தனர். ஆனால் கிறிஸ்தவ யூதருக்கும், புற ஜாதியினருக்கும் மாம்சம் புசிப்பதைப்பற்றிய ஒரு பிரச்சினை இருந்தது. அது என்னவென்றால் புசிப்பதற்காக கடையில் விற்கப்பட்ட எல்லா இறைச்சியும் புற தெய்வங்கள் முன்னிலையில்

பூசைச் செய்யப்பட்ட பின்பே விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. புறத் தெய்வத்திற்கு படைக்கப்பட்ட இறைச்சியை புசிக்க மனதில்லாமல் கிறிஸ்தவர்களில் ஒருசாரார் மாம்சம் புசிப்பதேயில்லை.

இப்படிப் பல மக்கள் இருந்ததினால் அவர்கள் எல்லாரையும்பற்றி பவுல் இப்பகுதியில் குறிப்பிடுகிறார். அவருக்கு எந்த திட்டமான பகுதியினரையும்பற்றிப் பிரச்சினை இருந்ததாக நாம் கூற இயலாது. இப்படிப் பட்ட பிரிவுகள் எல்லா சபைகளிலும் இருந்ததால் எல்லாப் பிரிவுகளுக்கும் இடையில் அன்பு எவ்விதமாக நிலவ இயலும் என்பதை விவரிக்கிறார். [I கொரி. 8—10 அதிகாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்].

வ. 1 விசுவாசத்தில் பலவீனன் — கிறிஸ்தவ அனுபவத்திலும் வாழ்க்கை முறையிலும் இன்னும் தெளிவுபெறாதவன் என்று பொருள் கொள்ளலாம்.

அவனை சேர்த்துக்கொள்ளுங்கள் என்றால் ஞானஸ்நானத்தின்மூலமாக சபையில் சேருங்கள் என்று அர்த்தமல்ல. அவன் ஏற்கெனவே சபையில் உள்ளவன்தான். (வ. 3B)

வ. 2 “ஒருவன் எந்த பதார்த்தத்தையும் புசிப்பதற்கு விசுவாசம் உடையவனாயிருக்கிறான்” என்பதே சரியான மொழித் திருத்தம்.

வ. 5 யூதக் கிறிஸ்தவர் பழைய வழக்கப்படி ஓய்வு நாளையோ, மற்ற யூத பண்டிகை நாட்களையோ அல்லது உபவாச நாட்களையோ முக்கியமானதாக ஆசரித்திருக்கலாம். கிறிஸ்தவன் எதைச்செய்தாலும் அதைக்கர்த்தருக்கென்றே செய்யவேண்டும். ஏனென்றால் அவன் தன்னுடையவனல்ல. கர்த்தருடையவன். ஒவ்வொரு

வனும் தன் மனதிலே தான் செய்வதைப்பற்றி முழு நிச்சயம் கொண்டிருத்தல் அவசியம் (வ. 5).

வ. 3 இவ்வசனத்திலிருந்து பவுலடியாரின் கருத்து புதியதாகிறது. "பலமுள்ளோர்க்கு" ஒரு சிறப்பான பொறுப்பையும் கடமையையும் கொடுக்கிறார். அவர்கள் பலவீனனான சகோதரனுக்கு இடறலை உண்டாக்காதிருக்க வேண்டும். பலமுள்ள விசுவாசி எந்த உணவையும் தயக்கமின்றி (சந்தேகமின்றி) புசித்து பாவமில்லாதிருக்கிறான். அவ்விதமாக புசித்தல் பாவம் என்று நம்புகிற பலவீன விசுவாசியும் மற்றவனைப் பார்த்து தானும் புசித்துவிடுகிறான். அவன் சந்தேகத்தோடு புசித்ததால் அது அவனுக்குப் பாவமாக அமையும் (வ. 14).

மற்றவனை இவ்விதமாக பாவம் செய்யப் பண்ணுகிற ஒரு காரியத்தை செய்யாதிருப்பதே நல்லது (வ. 20, 21). பிறரைப் பாவம் செய்யப்பண்ணுதலே புதிய ஏற்பாட்டில் "இடறல் உண்டாக்குதல்" எனப்படும்.

15 : 1—3 கிறிஸ்தவன் தனக்காக ஜீவிப்பவன் அல்ல. தன் பிரியத்தை மாத்திரம் நிறைவேற்றி, மற்றவன் இடறினால் எனக்கென்ன என்று இருப்பவன் அல்ல.

சபையில் ஏக சிந்தை ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, பவுலடியார் இப்பாகத்தை முடிக்கிறார்.

15 : 7—13 சபையில் ஒற்றுமை — இறை ஆசி

சபையில் யூதரும் புற ஜாதியாரும் ஒற்றுமையாக வாழ்தல் தகுதி (1) கிறிஸ்து இரு சாராரையும் ஏற்றுக்

கொண்டிருக்கிறூர். (2) விருத்தசேதனமுள்ள யூதருக்கு (வ. 8B) புற ஜாதியாருக்கும் (வ. 9) அவர் தேவனுக இருக்கிறூர்.

வ. 9B — சங். 18 : 49

வ. 10 — உபா. 32 : 43

வ. 11 — சங். 117 : 1

வ. 12 — ஏசா. 11 : 10

இறை ஆசியுடன் கடிதத்தின் முக்கியப் பகுதி நிறைவுபெறுகிறது.

முடிவுரை

[15 : 4—16 : 27]

15 : 14—25 கடிதத்தின் நோக்கமும், ரோம் நகர் செல்லும் திட்டமும்

பவுலடியார் எவ்விதமாகவும் யாரையும் பாராட்டாத தீவிரவாதி என்று நினைக்கிறவர்கள் வ. 14ல் உள்ள பாராட்டுரையைக் காணவேண்டும். இங்கே அவர் அச்சபையினரைக் வாயார வாழ்த்துகிறார். இந்த ஒரு இடத்தில் மாத்திரம் அல்ல, பவுல் மற்று சபைகளுக்கு எழுதியுள்ள கடிதங்களிலும் இவ்விதமான வாழ்த்துரைகளினால் சபை மக்களை புகழ்ந்திருக்கிறார் (II கொரி. 8 : 7; பிலி. 4 : 15), அதைப்போன்றே எல்லா கடிதங்களின் ஆரம்பத்திலும் காணப்படுகிற இறை நன்றி செலுத்தும் பகுதியிலும் பவுல் மிக அழகான முறையில் சபைகளில் உள்ள அங்கத்தினரை புகழ்வதைக் காண முடியும் (I கொரி. 1 : 4—9; 2 கொரி. 1 : 3—7; கொலோ 1 : 3—8; 2 தெச. 1 : 3, 4), மிக விவேகமான முறையில் அவற்றைப் பேச ஆரம்பிக்கிறார். அன்றைய உலகில் மிகப் பெரிய சபை ரோம் நகர சபை. அது பவுலடியாரின் முயற்சியால் நிறுவப்பட்டது அல்ல. அதன் அங்கத்தினர்கள் பவுல் தங்கள் சபைக்கு கடிதம் எழுத வேண்டிய அவசியம் என்ன என்பதாக எரிச்சலடையலாம். வ. 14 அதனால் தான் நீங்களே "ஒருவர்க்கொருவர் புத்தி சொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று" என்று அவர்களை பாராட்டி எழுதுகிறார். எனவே இக்காரியங்களை அவர்களுக்கு புதிதாக தெரிவிக்க அல்ல, அவர்களுக்கு "ஞாபகப்படுத்தவே தைரியமாய் எழுதினதாக" குறிப்பிடுகிறார். (வ, 16) வ. 15, பாராட்டும் வேளையிலும் இறைவனிடமிருந்துதான் பெற்ற பொறுப்பையும், ஊழியத்தையும் அவர் திட்ட

மாகக் கூறுகிறார். தனது ஊழியத்தை பலி செலுத்தும் ஆசாரியனுடைய ஊழியம் என விவரிக்கிறார். இறை மக்கள் "தங்கள் சரீரங்களை தேவனுக்குப் பரிசுத்தமும் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க" (12 : 1) அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பலியை ஆவியானவரால் பரிசுத்தப்படுத்தி செலுத்துகின்ற ஆசாரியனாக பவுல் தம்மைக் குறிப்பிடுகிறார் (வ; 17, 18). பவுல் தன் மூலமாய் இயேசுகிறிஸ்து நிறைவேற்றின ஊழியத்தைக் குறித்தும் பேசுவதில் வெட்கமடைவதில்லை. அற்புதங்களோடும், அடையாளங்களோடும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவான செயல்களோடும் புறஜாதியார் விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும்படியாக இச்செயல்கள் தேவனால் நிகழ்த்தப்பட்டன.

வ 19. இல்லிரிக்கம் என்பது தற்கால யூகஸ்லோவியாவின் மேற்கு பகுதியாகும். அப் 20 : 2ஆம் வசனத்தில் மக்கதோனியாவுக்குப் புறப்பட்ட பவுல் அந்த திசைகளிலே சுற்றித்திரிந்து கிரேக்கு தேசம் போய் சேர்ந்தார் என வாசிக்கிறோம். அப்படி சுற்றித் திரியும்போதுதான் இல்லிரிக்கம் வரை சென்றிருக்க வேண்டும். பவுல் இல்லிரிக்கம் நாட்டினுள் ஊழியம் செய்தாரா அல்லது இல்லிரிக்கம் நாட்டின் வெளி எல்லை வரை ஊழியம் செய்தாரா என அவர் திட்டமாகக் கூறவில்லை. அவர் எருசலேமினுள் ஊழியம் செய்யவில்லை என நாம் அறிவோம் அதன் வெளி எல்லையிலிருந்து ஆரம்பித்து, இல்லிரிக்கம் நாட்டின் வெளி எல்லை வரை சென்றிருக்க வேண்டும்.

வ 20 — ஏசா. 52 : 15b

(வ. 23, 24) கிழக்குப் பாகங்களில் உள்ள நாடுகளைப் பவுல் சந்தித்து விட்டார். இனிமேல் மேற்கு நோக்கித்தான் செல்ல வேண்டும் மேற்கே ஸ்பெயின்

(Spain) நாட்டிற்கு செல்ல விரும்புகிறார். செல்லும் வழியில் ரோம் நகர சபையினரை சந்திக்க திட்டமிட்டுள்ளார். "உங்களால் வழி விட்டனுப்பப்படவும்" என்னும் சொற்கள் ரோம் நகர சபையினருடைய நல்லெண்ணமும் ஜெபமும் மாத்திரமல்ல, அவர்களது பண உதவியும் தேவை என்பதை உணர்த்துகின்றன. ஸ்பானிய நாட்டு ஊழியத்தை ரோம் நகர சபை தாங்குதலை இது குறிக்கிறது. 'வழி விட்டனுப்பப்படுதல்' என்பது இவ்விதமான பணிப்பங்கிற்கு ஆதித் திருச்சபை வைத்திருந்த பெயர் [1 கொரி. 16 : 6, 11 III யோ 6; அப். 15 : 3].

15 : 25 – 33 எருசலேமிலுள்ள வறியோர்க்குத் திரட்டப்படும் பொருளுதவி.

ரோம் நகர் செல்வதற்கு பவுல் அதிக வருடங்கள் விருப்பமுடையவராக இருந்தாலும் (வ 23) தற்சமயம் அவர் உடனே போக முடியாதவராய் இருப்பதை பார்க்கிறோம். எருசலேம் சபையில் உள்ள வறியோர்க்கு அவர் சில ஆண்டுகளாகவே பணம் திரட்டிக் கொண்டிருந்தார் (1 கொரி. 16 : 1—4; 2 கொரி. 8 : 1—9, 15). அதை மற்ற சபைகளின் பிரதிநிதிகளோடு அவரும் சென்று கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். எருசலேம் சபையினருக்கு வறுமை ஏற்பட்டதற்கு பல காரணங்களைக் கூறலாம் :

(i) எருசலேமில் அதிகமான வேலை வாய்ப்பை தரக்கூடியது எருசலேம் தேவாலயமே. கிறிஸ்தவர்கள் அதில் வேலை செய்யும் வாய்ப்பை இழந்தனர்.

(ii) எருசலேம் திருச்சபையில் உபத்திரவத்தின் புயல் இடைக்கிடையே வீசிக்கொண்டிருந்தது. யூதர்கள், ஆசாரியர்கள், சவுலைப்போன்ற தீவிர பரிசேயர்கள் எப்போதும் கிறிஸ்தவர்களுக்கு இடைஞ்சல் விளைவித்

துக்கொண்டேயிருந்தார்கள். எனவே சமாதானமாகத் தங்கி, தொழிற் செய்து, வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு குறைவாகவே இருந்தது. கிறிஸ்தோரும் தங்களுடைய தலையாயப் பணி கிறிஸ்தவ ஐக்கியமும் நற்செய்திப் பணியுமே எனக்கருதினர்.

(iii) ஆதித் திருச்சபையினர் ஆண்டவருடைய வருகை உடனடியாக இருக்கும் எனக்கருதி, சொத்துக்களை உடையோர் தங்களது செல்வத்தை விற்றுப் பணமாக்கி, அப்போஸ்தலர் பாதத்தில் படைத்து விட்டார்கள். யாவரும் எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள் (அப். 2 : 44, 45) இது அழகான கிறிஸ்தவ அன்பைக் காட்டுவதாக உள்ளது உண்மையான பொது உடைமை இதுவே ஆனால் அவர்கள் வருமானத்தைப் (income) பொதுவாக அனுபவியாமல். 'முதலாகிய (Capital assets) சொத்துக்களையே விற்று செலவழித்து விட்டபடியால், அவர்களுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டு, விரைவில் வறுமையில் அகப்பட்டார்கள்.

புற ஜாதியார் ஏன் உதவி செய்தனர் :

(i) இப்படி பொருள் உதவி செய்வது ஒரு கிறிஸ்தவனின் கடமையாகும். ஒரு சரீரத்தின் ஒரு உறுப்பு துன்பம் அனுபவித்தால் மற்ற உறுப்புகளும் துன்பம் அனுபவிக்கின்றன. திருச்சபையின் இந்த அடிப்படையான ஒற்றுமை (organic unity of the church) முதல் காரணம். இரக்கத்தின் காரணமாக அல்ல. கிறிஸ்தவன் மற்றொரு கிறிஸ்தவனோடு உள்ளார்ந்த நெருங்கிய உறவு இயேசுகிறிஸ்துவில பெற்றிருக்கிறான்.

(ii) கிறிஸ்தவ விசுவாசம் முதலாவது யூதருக்கு கொடுக்கப்பட்டது, யூத கிறிஸ்தவர்கள் மூலமாகத் தான் மற்ற புற ஜாதிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

எல்லா சபைகளுக்கும் எருசலேம் சபை தாய்ச்சபை போன்றது. இரட்சராகிய இயேசுகிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், பரிசுத்த ஆவி யானவர் அருளப்படுதல் போன்ற வரலாற்று நிகழ்ச்சி கள் யாவும் எருசலேமில் நிகழ்ந்தன. உலகின் திருச்சபை கள் யாவும் பெற்றுள்ள ஞான நன்மைகள் எருசலேம் திருச்சபை வழியாக பாய்ந்து, புற ஜாதி சபைகளுக்கு வந்துள்ளன. எனவே சரீர நன்மைகளை அவர்கள் பகிர்ந்து கொள்ளுதல் தகுதி (15 : 27).

(iii) ஆதித் திருச்சபையில் யூதரே முதலாவது இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொண்டனர். அவர் கள் பிறருக்கு கிறிஸ்துவை அறிவித்தனர். முக்கியமாக யூதருக்கும், யூத மார்க்கத்தமைந்தவர்க்கும் பல நாடு களில் சிதறிப் போயிருந்த யூத சமுதாயத்தைச் சேர்ந்த வர்களுக்கும் மாத்திரமே முக்கியமாக கிறிஸ்துவை மேசியா என்று அறிவித்து வந்தார்கள். இதற்கிடையே புதிதாக புற ஜாதியைச் சேர்ந்த பலர் கிறிஸ்தவர்கள் ஆக ஆரம்பித்தனர். புற ஜாதியார் கிறிஸ்தவர் களானுல் அவர்கள் யூதரைப்போல நியாயப் பிரமாணத்தை அனுசரிக்க வேண்டும் என வற்புறுத் தினர். பவுலடியாரோ புற ஜாதியார் நியாயப் பிரமாணத் துக்கு அடிமைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்னும் விடுதலையின் செய்தியைக் கூறினுர். அவ்வித செய்தியைப் பரப்பும் பொறுப்பை பவுலடியாரிடமே எருசலேம் சபையிலிருந்த அப்போஸ்தலர் ஒப்புவித் தனர். அந்நேரத்தில் "தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படிக்கு மாத்திரம்" வேண்டுகோள் விடுவிக் கப்பட்டது (கலா. 2 : 8-10). அப்பொறுப்பை நிறை வேற்றும் வகையில் பவுல் இப்போது எருசலேம் நோக்கி புறப்படுகிறுர்.

(iv) ஆதித்திருச்சபையில் நியாயப் பிரமாணத்தை யூதரல்லாத கிறிஸ்தவர்கள் கைக்

கொள்ள வேண்டும் என்ற கட்டளையை பவுலினால் நிறுவப்பட்ட சபைகள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே புற ஜாதியினரான கிறிஸ்தவர்களுக்கும் யூத கிறிஸ்தவர்களுக்கும் மிடையே அத்துணை நல்ல உறவு இல்லை. புற ஜாதியாரான கிறிஸ்தவர்கள் கொடுத்தனுப்பும் காணிக்கை நல்லுறவின் அடையாளமாக அமையும் எனப் பவுல் கருதினார். எருசலேமில் உள்ளவர்களும் அதை அவ்விதமே புரிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என விரும்பினார். அதற்காக ஜெபிக்கும்படியாக எல்லோரையும் கேட்டுக் கொள்கிறார் (வ. 31, 32).

ஆசிமொழியுடன் கடிதத்தின் இப்பகுதியை முடிக்கிறார்.

16 : 1, 2 ஊழியக்காரி பெபேயாளை அறிமுகப்படுத்துதல் :

அன்பர்களுக்கு வாழ்த்துதல் சொல்லும் முன்னதாக "கெங்கிரேயா சபைக்கு ஊழியக்காரியாகிய" பெபேயாள் என்னும் சகோதரியை அறிமுகப்படுத்துகிறார். பெரும்பாலும் இச்சகோதரி தான் ரோமர் கடிதத்தை ரோம நகருக்கு கையில் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். அறிமுகக் கடிதங்கள் அந்நாட்களில் மிகவும் தேவை. வருபவர் உண்மையாகவே சபையை சேர்ந்தவரா அல்லது வேறு ஏதாவது ஒற்றரா எனத் திட்டமாகத் தெரிந்து கொள்ள அறிமுகக் கடிதம் உதவும். பெபேயாள் ஒரு வேளை தன் சொந்த காரியமாக ரோம் நகர் வந்திருக்கலாம். வ. 2 இல் "அநேகருக்கு......... ஆதரவாயிருந்தவள்" எனக் கூறுகிறார். எனவே வசதி படைத்த சகோதரியாக இருந்திருக்க வேண்டும். 'ஊழியக்காரி' என்ற சொல் உபயோகப்பட்டுள்ளது. (கிரேக்கச் சொல் டீக்கனஸ் என்பது!). கெங்கிரேயா ஊர் கொரிந்து பட்டணத்திற்கு மிக அருகாமையில் உள்ள இடம். அங்குள்ள சபையில் இந்த 'டீக்கனஸ்'

என்ன ஊழியம் செய்தார் எனத் தெரியவில்லை. I தீமோ. 3 : 8-13 ல் உதவிக்காரருக்கு (டீக்கன்) இருக்க வேண்டிய தகுதிகளைப் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் அவர்கள் செய்து வந்த பணியைப் பற்றி எவ்வித செய்தியும் இல்லை. ஆண்கள், பெண்கள் ஆகிய இரு சாராருமே இப்பணியில் பங்கு பெற்றனர் என்று மாத்திரம் தெரிந்து கொள்கிறோம்.

16 : 3-16 **அன்பர்களுக்கு வாழ்த்துக்கள் :**

பவுலுக்கு இத்தனை அன்பர்களை ரோம் நகரில் எப்படித் தெரியும் என்ற கேள்விக்கு முகவுரைப் பகுதியிலேயே பதில் அளித்து விட்டோம். குறிப்பாக ஆக்கில்லா பிரிஸ்கில்லாளைப் பற்றி சற்று விவரமாகவே நாம் ஆராய்ந்துள்ளோம்.

வ. 5 அகாயாவிலே முதற் பலன் எப்பனெத் அல்ல, அகாயாவின் முதற் பலன் ஸ்தேவான் (1 கொரி. 16:15) வீட்டார்தான். எப்பனெத் ஆசியாவில் முதற் பலன் எனலாம்.

வ 16 "ஒருவரை யொருவர் .... வாழ்த்துங்கள்"

கொரிந்தியருக்கு எழுதின இரு கடிதங்களின் இறுதியிலும் இதே விதமாக வாழ்த்துக் கூறுகிறார் (I தெச. 5 : 26; பிலி. 4 : 21).

8 முதல் 15 வரையுள்ள வசனங்களில் கூறப்படுவர்களைப் பற்றி பெரும்பாலும் ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. 13-ஆம் வசனத்தில் காணப்படுகிற ரூபு (Rufus) ஒரு வேளை சிரேனே ஊர் சீமோனுடைய மகனாக இருக்கலாம். (சீமோன் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை பின்னாகத் தாங்கி வந்தவன் என நாம் அறிவோம் மாற். 15 : 21). அலெக்ஸாண்டர், ரூப்பு ஆகிய இரு குமாரருக்கு அவன் தகப்பன் என அறி

கிறோம். மாற்கு தமது நற்செய்தி நூலில் ரூப்பும், அலெக்ஸான்டரும் யாவருக்கும் தெரிந்தவர்கள் என்ற அர்த்தத்தில் பேசுவதைக் காண்கிறோம். மாற்குவின் நற்செய்தி நூலும் ரோம் சபைக்கே சிறப்பாக எழுதப் பட்டதால், சிரேனே ஊர் சீமோனின் மகன்தான் இந்த ரூப்பு என்று எண்ண இடமுண்டு. ரூப்புவின் தாயைக் கனிவோடு விசாரிக்கிறார் பவுலடியார்.

16 : 17—20 இறுதி எச்சரிக்கை

இந்த பாகம் ஒரு சிறிய பிரச்சினையை உருவாக்கு கிறது. இங்கே பவுல் "கற்றுக்கொண்ட உபதேசத் திற்கு விரோதமாய் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து" எச்சரிக்கிறார் (வ.17). தான் நிறுவி, போதனைக் கொடுத்த ஒரு சபைக்கு எழுதுவதுபோல் தோன்றுகிறது. ரோம் நகர சபையை அவர் நிறுவவும் இல்லை. இந்த சபையினருக்கு அவர் நேரடியாக ஒன்றும் கற்றுக்கொடுக்கவும் இல்லை என அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார். அப்படியானால் இப் பகுதி வேறு கடிதத்தில் ஒரு பகுதியா? அப்படிச் சொல்வதற்கும் கடிதத்தின் உரையில் (text) எவ்வித ஆதாரமும் இல்லை. இந்த பிரிவினை செய்ய முயற்சி செய்கிறவர்கள் யார்? 'மறைவான, இரகசியமான வெளிப்படுத்தல் தங்களுக்கு இறைவன் தந்துள்ளார். அதனை அறிகின்ற உயர் அறிவின் மூலம் வாழ்வின் பயன் அடையலாம்' எனக் கூறி வந்தனர் ஞானஸ்திகர் கள் (Gnostics) என்ற அறிவு நெறிக் கொள்கைக் கூட்டத்தினர். அப்படிப்பட்டவர்கள் ரோம் சபையில் புகுந்துவிட்டனரா? இவ்வளவு முந்திய காலத்தில் அவர்கள் சபையில் பிரிவினை உண்டாக்கும் அளவுக்கு பலமடையவில்லை என்றே கூற வேண்டும். அப்படி என்றால் பவுல் யாரைப்பற்றி இங்கே பேசுகிறார் என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலாததாகவே உள்ளது. வ. 17—20ஐ நாம் வாசிக்கும் போது திருமறையின்

மற்ற சில பாகங்களில் காணப்படும் அதே தொனி காணப்படுதைக் காண்கிறோம் (II பேது. 2 : 1—3; அப். 20 : 29–30; II யோவா 7–11; II தீமோ. 3 : 1–17). திருச்சபையில் காணப்படப்போகிற ஒரு நிலையைப் பற்றிய தீர்க்கமான முன்னறிவிப்பு எனக்கூறலாம்.

கடிதத்தை தொடர்ந்து வாசித்துக்கொண்டே வருகிற நமக்கு இப்பகுதியில் ஒரு மாறுதல் இருப்பதை உணர முடிகிறது. பவுலடியார் தனது கடிதங்களில் ஓரிரு வரிகளாவது தன் சொந்த கையெழுத்தால் எழுதுவது மரபு (முகவுரை காண்க). இவ்வசனங்களை அவர் கையால் எழுதியுள்ளார் எனலாம். அவர் கையில் எழுதும் இறகைத் தூக்கியவுடன் தன் சொந்த முயற்சியால் நிறுவப்பட்ட சபைகளுக்கு எழுதும் அதே அதிகாரமும் நெருக்கமும் தொனிப்பதைக் காண்கிறோம். மிகுந்த கவனமாக, சொற்களை நிதானமாக உபயோகித்து வந்த பவுலடியார் இப்பகுதியில் மிகவும் உரிமையோடு எழுதத்தலைப்படுவதைக் காண்கிறோம்.

16 : 21—23 உடனிருந்த நண்பர்களின் வாழ்த்துச்செய்தி

இப்பகுதியில் உள்ள தீமோத்தேயுவின் பெயர் நமக்கு மிகவும் அறிமுகமானது. தெர்தியு என்பவர் இக்கடிதத்தை எழுதின எழுத்தர் என்பதாக அறிகிறோம். இவரைப்பற்றி புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் நாம் வாசிக்கவில்லை. பெயர்கள் சில மற்றத் திருமறை பகுதிகளில் காணப்பட்டாலும் ஒரே நபர்தான் இரு பகுதியிலும் குறிப்பிடப்படுபவர் என நாம் திட்டமாகக் கூற இயலாது.

16 : 24—27 இறையாசியும்—தெய்வப் புகழுரையும்.

வ. 24. கடிதத்தின் இறுதிப் பாகத்தின் பல இடங்களில் இறையாசி வழங்கப்படுவதைக் காணலாம்,

[15 : 13; 15 : 33; 16 : 20; 16 : 24]

சில கிரேக்கப் பிரதிகளில்தான் 16 : 24இல் காணப்படும் ஆசி காணப்படுகிறது.

வ. 25—27. இத் தெய்வப் புகழுரையை சிலப் பிரதிகளில் காண இயலவில்லை. சில பிரதிகள் 14ஆம் அதிகாரத்தின் இறுதியில் இப் புகழுரையை வைத்துள்துள்ளன. சிலவற்றில் 16ஆம் அதிகாரத்தின் இறுதியில் இப்பகுதி காணப்படுகிறது.

இதில் கூறப்பட்டுள்ளக் கருத்துக்கள் பவுலடியாரால் ஒப்புக்கொள்ளப்பட்டக் கருத்துக்கள்தான். ஆனுல் இந்த கடிதத்தில் அவர் மறைந்திருந்து வெளியரங்கமாக்கப்பட்ட இரகசியத்தைப் பற்றிப் பேசவில்லை. மொழிநடையும் இக்கடிதத்தின் நடையாக இல்லை. பவுலடியாரின் கடிதங்கள் யாவும் ஒன்ருய் தொகுக்கப்பெற்றதை நாம் அறிய முடிகிறது. எல்லாக் கடிதங்களுக்கும் ஒன்றுபோல் பொருந்தும் புகழுரையாக இது அமைக்கப்பட்டு தொகுப்பின் இறுதியில் அமைக்கப்பட்டது என்று நாம் கூறலாம்.

துணைநின்ற நூல்கள்

Barclay, William ... "The Letter to the Romans", 1963

Dodd, C. H. ... The Epistle of Paul to the Romans, The Moffatt New Testament Commentary, 1954.

Elphick, William ... The Slaves of Christ the King. C. M. S. Press, Kottayam, 194ɔ.

Gore, Charles ... St. Paul's Epistle to the Romans 2 Vols. 1920.

Thomas, W.H. Griffith... St. Paul's Epistle to the Romans III Vol.

Richardson, Alan ... A Theological Word Book of the Bible S. C. M.—London—1965

The Interpreters' Bible ... Volume on Romans Abingdon Press, 1954

செபஞானம், சா. தா. ... ரோமர் Tamil Nadu Theological Book Club 1969

கிலேற்றன், எ. சி. ... வேத அகராதி Parts I—V 1938

ஒப்பிட பயன்பட்ட திருமறை மொழி பெயர்ப்புகள்

1. தமிழ் திருத்திய மொழிபெயர்ப்பு
   (தரங்கம்பாடி யூபிலி பதிப்பு — 1965)
2. கத்தோலிக்கத் தமிழ் மொழிபெயர்ப்பு
   (தமிழ் இலக்கியக் கழகம் — 1970)
3. தமிழ் புதிய மொழிபெயர்ப்பு (இந்திய வேதாகம சங்கம்)
   (Tamil Common Language Translation — 1975)

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — X. 250

திருப்பணிவிடையாளர் பாடப்புத்தகங்கள் — 1976

---

1. ஆமோஸ் (விளக்கவுரை) — R. ஜோசப்

2. ரோமர் நிருபம் (விளக்கவுரை) — S. ஜெயபால் டேவிட்

3. இந்திய கிறிஸ்தவத் திருச்சபை வரலாறு — D. A. கிறிஸ்துதாஸ்

4. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை — S. ஜேம்ஸ் பால்

The Letter of Paul to the Romans
A Commentary

By

The Rev. S. Jeyapaul David, B. A., B. D.,
Diocese of Tirunelveli

Copies can be had from :

The Diocesan Office, Palayamkottai, 627002.
The Diocesan Book Depot, " "
The Editor, C. S. I. Theological Series,
Palayamchettikulam, Burkitmanagaram P.O.

Price Rs. 2 - 00